விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 06 ஞாயிற்றுக்கிழமை (22.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

# ஜெனிவா தீர்மானம் குறித்து சட்டமா அதிபரிடம் யோசனை

(கொழும்பு)

**போர் குற்றம் தொடர்பான விசாரணைக்கு ஜெனிவா மனித உரிமை பேரவை பரிந்துரைத்துள்ள யோசனையை செயற்படுத்துவதில் ஏற்படக் கூடிய சிக்கல்கள் சம்பந்தமாக சட்ட ஆலோசனைகளை பெற அரசாங்கம் அந்த யோசனையை சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளது.**

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இலங்கையில் நடந்த போர்குற்றங்கள குறித்து விசாரண்ண நடத்த வேண்டும் என அமெரிக்காவின் ஆதரவுடன் ஜெனிவா மனித உரிமை பேரவையில் அண்மையில யோசனை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இந்த யோசனைக்கு அமைய உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைக்கு தேசிய மற்றும் சர்வதேச நீதிபதிகளை நியமிப்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏதுவானதா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம் ஜெனிவா யோசனையை உன்னிப்பாக ஆராய்ந்து வருவதாகவும் சட்டமா அதிபரின் ஆலோசனை விரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி குறிப்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## கண்ணிவெடி அகற்ற அமெரிக்கா ஆதரவு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு இலங்கையை கண்ணிவெடிகள் அற்ற நாடாக மாறறுவதற்கு அமெரிக்கா அனைத்து ஆதரவுகளையும் வழங்குவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர்

15 ஆம் பக்கம் பார்க்க....

## எம்.பிக்களுக்கு 15 மில்லியன்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 2016-ம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட ஒதுக்கீட்டு நிதியாக தலா 15 மில்லியன் ரூபாய் வழங்கபடும் என தேசிய கொள்கை மற்றும

15 ஆம் பக்கம் பார்க்க....

## இறுதி யுத்தத்தில் கருணா அணி

(கொழும்பு)

இலங்கையின் திருகோணமலை இரகசிய சித்திரவதை முகாம்கள் நடத்தப்பட்டதாக ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்ப

15 ஆம் பக்கம் பார்க்க....

## 20 கைதிகளுக்கு புனர்வாழ்வு


(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின கீழ் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் 20 தமிழ் அரசியல் கைதிகள இன்னும் சில நாட்களில் புனர் வாழ்வுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இவர்களின் பெயர், விபரங்கள மற்றும் குற்றச்சாட்டு இலக்கங்கள் என்பன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும், அரசாங்கத்திடமும

15 ஆம் பக்கம் பார்க்க....

## பவர் இன்று யாழ்.விஜயம்



## கடவையை கடக்க முயன்ற காரை மோதித் தள்ளியது ரயில்

## பவர் இன்று யாழ். விஜயம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்காவின் நிரந்தர பிரதிநிதி சமந்தா

16 ஆம் பக்கம் பார்க்க....

# கடவையை கடக்க முயன்ற காரை மோதித் தள்ளியது ரயில்

## ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் புகையிரத கடவையை கடக்க முயன்ற காரை கடுகதி புகையிரதம் மோதியதில் ஒருவர் பலியாகி உள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர். இக் கோர விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கடுகதி புகையிரதம் கச்சேரியிலிருந்து யாழ். நகர நோக்கி சென்ற காரினை மோதியதில் மேற்படி விபத்து நேர்ந்துள்

15 ஆம் பக்கம் பார்க்க....







(2536)

பழைய செவிபுல கருவிக்கு பதிலாக புதியதொன்று

உங்களின் செவிபுல கருவியின் கேட்கும் திறன் குறைவாக காணப்படுமாயின் அதை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு புதிய தொழில் நுட்பத்தை கொண்ட டிஜிடல் செவிபுல கருவியை கொள்வனவு செய்துகொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| நுவரெலியா | - சுரேக்கா | - 077 1067744 |
| திருகோணமலை | - சச்சிந்த | - 077 7651767 |
| யாழ்ப்பாணம் | - கோமதி | - 076 5441517 |
| மட்டக்களப்பு | - முஜிதின் | - 077 0035377 |

VISION CARE OPTICAL SERVICES

விஷன் கெயார் ஒப்டிக்கல் சர்விஸ் தனியார் நிறுவனம்

இல.06 வோட் பிளேஸ் கொழும்பு 07.

## காணி விற்பனை

பொற்பதி வீதி தாயகத்திற்கு அண்மையில் 5 (ஐந்து) பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :
T.P:0779050196

(2559)



## வாடகைக்கு

வெள்ளைவத்தையில் 42-வது லேனில் இல.03 இல் அமைந்துள்ள இரண்டு (2) அறை மற்றும் இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.

(2558) நாள் வாடகை - 2500/-

தொடர்புகளுக்கு :- 0778378597


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகாம்பிகை சண்முகநாதன்

(முன்னாள் ஆசிரியை – கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலயம் புங்குடுதீவு–7)



தாயின் மடியில் 07.03.1952 இறைவனடியில் 20.11.2015

புங்குடுதீவு மடத்துவெளி 8-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவரும் தற்போது மடத்துவெளி 7-ம் வட்டாரத்தில் வசித்தவருமாகிய திருமதி கனகாம்பிகை சண்முகநாதன் (முன்னாள் ஆசிரியை) 20.11.2015 வெள்ளிக்கிழமையன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சிவசம்பு - அமராவதி தம்பதியினரின் அன்பு மகளும், காலம் சென்ற அருணாசலம் மற்றும் பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், சுமித்திரா (கனடா), சுஜீவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம் சென்றவர்களான மங்கையற்கரசி, வரராசசிங்கம், மனோன்மணி, கைலாயநாதன் மற்றும் தனபாலசுந்தரம், திருஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலசேகரம்பிள்ளை, ஞானம்மா, திருநாவுக்கரசு, ஞானவல்லி, சந்திரகுமாரி, நமசிவாயம், இராசேஸ்வரி, திருநாவுக்கரசு, ஸ்ரீராசசிங்கம், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் சதாசிவம், நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 23.11.2015 நாளை திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (C-2770)

தகவல் : அ.சண்முகநாதன் (கணவர்)

## குட்டியர் திருஞானம் (மணியம்)



விக்னேஸ்வரா வீதி, சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியர் திருஞானம் (மணியம்) 21-11-2015 நேற்று காலமானார்.

அன்னார் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், குட்டியர் வள்ளிப்பிள்ளை, குட்டியர் லட்சுமி ஆகியோரின் மகனும், நாகமுத்து தங்கம்மாவின் மருமகனும், கசீதன் (ஜேர்மன்), முகுந்தன் (Director B.I.School), சியாமளா (ஆசிரியை, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை)வின் தந்தையாரும், சிவகுமார் (உதவிக்கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்வி, யாழ் வலயம்), அகல்யா (ஜேர்மன்), அஜந்தா ஆகியோரின் மாமனாரும், மகாதேவன், ஜெகநாதன் (ஓய்வுநிலை அதிபர்), காலஞ்சென்ற ஜெகதீசன் (அதிபர்), பாக்கியநாதன் (ஜேர்மன்), ரம்பாதேவி, மோகனலீலா, லகாயினி, காலஞ்சென்ற சந்திரவதனி (ஆசிரியர்), கிருபன் (பணியாளர்-மகாஜனா கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இராசதுரை, காலஞ்சென்ற பூமணி, பொன்னுத்துரை, காசிநாதன், மகாலிங்கம், ரங்கநாதன், பாஸ்கரன், செல்வராணி, சுமிதி, லிங்கேஸ்வரி, பராசக்தி (ஜேர்மன்), சத்தியபாமா ஆகியோரின் மைத்துனரும், அஸ்வத், அனிருத், ஆதவ் (ஜேர்மன்), அபினயா, கவினயா (உடுவில் மகளிர் கல்லூரி), பவினயா (B.I.School) , சகினா, சாத்வீகன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-11-2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியள்வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விக்னேஸ்வரா வீதி,
சங்கானை. (C-2775)

தகவல் :- குடும்பத்தினர்

# திருகோணமலை பதுங்குக்குழி பிரித்தானியர் காலத்துக்குரியது

## முன்னாள் கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை கடற்படைத் தளத்தில் இரகசிய வதை முகாம் இருந்ததாக, ஐ.நா நிபுணர் குழு தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்துள்ள கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, அது இரண்டாம் உலகப்போர் காலத்தில் பிரித்தானியர்களால் கட்டப்பட்ட பதுங்குகுழி என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கைகுக்கு ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டிருந்த, காணாமற்போகச்செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழு, கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில், திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நிலத்தடி இரகசிய தடுப்பு முகாமை கண்டு பிடித்ததாக தெரிவித்திருந்தது.

2010 ஆம்ஆண்டு இந்த இரகசியத் தடுப்பு முகாமில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாகவும் அந்தக் குழுவினர் கூறியிருந்தனர்.

இந்த நிலையில், 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடற்படைத் தளபதியாக இருந்த, அட்மிரல் வசந்த கரன்னகொட, தனது பதவிக்காலத்தில திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இரகசியத் தடுப்பு முகாம்எதுவும்இருக்கவில்லை என்று கூறியுள்ளார்.

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் அமைந்துள்ள சிறைச்சாலை என்று கூறப்பட்டது, இரண்டாம் உலகப் போர் காலத்தில் விமானத் தாக்குதலில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக பிரித்தானியர்களால், கட்டப்பட்ட இடமேயாகும்.

அந்த இடம், விடுதலைப்புலிகள்இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்து படையினருடன் இணைந்து கொண்டவர்களின் வசிப்பிடமாக பயன்படுத்தப்பட்டது.

முன்னர் பயன்பாட்டில் இருக்காத கட்டடங்களை அவர்களுக்கு கொடுக்க கடற்படையினருக்கு வழியிருக்க வில்லை.

பிரித்தானியர் காலத்து விமானத் தாக்குதல் பதுங்குமிடங்களை அதற்காக நாம் பயன்படுத்திக் கொண்டோம்.

நாம் திருகோணமலையிலோ வேறு தளங்களிலோ வதை முகாம்களை வைத்திருக்கவில்லை. அதற்கு எமக்குத் தேவை இருக்கவில்லை.

பல்வேறு தமிழ்க் குழுக்கள் பல ஆண்டுகளாகவே இராணுவத்துடன் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளன.

இந்திய அமைதிப் படையுடன் இணைந்தும் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப்போரிட்டுள்ளனர்.

2004இல் புலிகள் இயக்கத்தில் பிளவு ஏற்பட்டதையடுத்து, மட்டக்களப்பு - அம்பாறையை சேர்ந்த நூற்றுக் கணக்கான நன்கு பயிற்றப்பட்ட போராளிகள், இராணுவத் தினருடன் பணியாற்றினர்.

சம்பூர் மீது விமானத் தாக்குதல் நடத்த அப்போதைய அரசாங்கம் உத்தரவிட்டிருந்த போது, கடற்படையின் சிறப்பு படகு அணியுடன் இணைந்து, முன்னாள் புலிகள் கூட்டாக நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் அவர தெரிவித்துள்ளார். (எ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## கார் விற்பனைக்கு

Toyota Wagon 15xxxx எனும் தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
இல.05
விதானை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(2554) 0776235884



## ஏல விற்பனை

யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் எதிர்வரும் 2015.12.07 அன்று சில பொருட்கள் ஏலத்தில் விடப்பட உள்ளன. 10 மணிக்கு ஏலம் இடம்பெற உள்ளது. விபரங்களுக்கு அலுவலகத்தை நாடவும்.

அதிபர் (C-2772)



## தேவை

I ) நமது கிளைகளில் ஒன்றுக்கு பெண் காசாளர் தேவை. (LADIES CASHIER )
II ) நீச்சல் தடாக பராமரிப்பாளர் POOL MAINTANANCE
III ) உணவு, பானம் பரிமாறுபவர் QUALIFIED SERVER
IV ) காவலாளி (இரவு) NIGHT SECURITY

குறிப்பு

- ★ அனுபவம் கொண்டவர்களுக்கும், யாழ் மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- ★ தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின்னர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்.

**வேண்டுகோள்**

வாசகர்களே , நண்பர் ,உறவினர்களே,வேலை தேடுபவர்களே நேரம் உங்களுக்கும் எங்களுக்கும் எல்லோர்க்கும் பொன்னை விடப் பெறுமதியானது. ஆகவே தொந்தரவு கொடுக்கும் வண்ணத்தில் அழைப்பு விட வேண்டாம். (C-2771)

*HOTEL LUX ETOILES*
*34, Chetty Street Lane,*
*Nallur, Jaffna.*
*Tel : 0759396600*



## நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களா?

நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை தெரிவு செய்ய விரும்புகிறீர்களா?.....

எமது சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து நீங்கள் விரும்பிய அளவு சம்பாதிக்கும் திறனுக்கு உங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தகைமை**

- ★ வயது : 50-60
- ★ பகுதிநேர வேலை செய்ய விரும்புபவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். (2556)

உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள்.

Contact : No. 62/6, Stanley Road, Jaffna.
0777121868

### புலனாய்வுத்துறை அதிகாரிகள் எனக் கூறி

# இரு அதிசொகுசுக்கார்களில் வந்து புதையல் தோண்டிய நால்வர் கைது

## மணற்காட்டில் சம்பவம்



(கரணவாய்)

**வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகள் காலத்தில் புதைத்து வைக்கப்பட்டதாக கூறப்படும் தங்க நகைப்புதையலைத் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். புலனாய்வுத் துறை அதிகாரிகள் எனக்கூறிக் கொண்ட இவர்களை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். இவர்கள் இரண்டு அதிசொகுசு கார்களில் வந்து இந்த புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.**

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் மணற்காட்டுப் பகுதி கடற்கரையில் ஒரு குழுவினர் கனரக வாகனம் மூலம் குழி ஒன்றைத் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பாக அங்குள்ள மக்கள் இக்குழுவினரிடம் விசாரித்த போது தாம் புலனாய்வுத்துறை அதிகாரிகள் எனத் தெரிவித்தனர்.

எனினும் இக்குழுவினர் மீது சந்தேகம் கொண்ட பொது மக்கள் இது தொடர்பாக கிராம சேவையாளருக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்துள்ளனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு நெல்லியடி பொலிஸ் குழுவும் புலனாய்வுத்துறைப் பிரிவினரும் சென்றிருந்த போது அக் குழுவினர் இரண்டு கார்களில் தப்பிச் சென்றனர்.

எனினும் அக் கார்களை பின்தொடர்ந்து பொலிஸாரும் புலனாய்வுத்துறைப் பிரிவினரும் மண்டான் பகுதியில் வைத்து ஒரு காரினை மடக்கிப்பிடித்ததுடன் அதில் இருந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். அதில் மூவர் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களவர்கள் என்பதுடன் ஒருவர் தமிழர் என்பதும் தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட நால்வரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அக் குழுவினரால் கடற்கரையில் விட்டுச் செல்லப்பட்ட கனரக வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினர் தொடர்பான பொலிஸ் விசாரணையில் வெளிநாட்டிலுள்ள ஒருவரது இரகசிய தகவலின்படியே தாம் இங்கு வந்ததாகவும் இதற்காக புலனாய்வுத்துறை அதிகாரிகள் என்ற பேரில் வடமராட்சியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதுடன்மணற்காட்டு கடற்கரையில் தங்க நகைப் புதையல் இருப்பதற்கான புலனாய்வுகளை நெல்லியடிப் பொலிஸ் புலனாய்வுத் துறை பிரிவு மேற்கொண்டு வருகின்றது. (இ-5-60)

## நீண்ட நாட்களின் பின்னர் நாடாளுமன்றில் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீண்ட நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வுக்குச் சமுகமளித்திருந்தார்.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதை முன்னிட்டு நாடாளுமன்றம் நேறறு முன்தினம் புதிய அமர்வை ஆரம்பித்திருந்தது.

இதனை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற அமர்வுக்கு சமுகமளித்திருந்தார்.

சுமார் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக அவர் வரவு செலவுத்திட்ட உரையை செவிமடுத்திருந்தார். கடந்த வருடம் இதே காலப் பகுதியில் அதிகாரத்தில் இருந்த மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட உரையை சமர்ப்பித்திருந்ததுடன், முடிந்தால் அரசாங்கத்தை கவிழ்த்துக் காட்டு மாறும் எதிர்க்கட்சியினருக்கு சவால் விடுத்திருந்தார்.

அவரது சவாலை எதிர்க்கட்சியினர் வெற்றிகொண்டு புதிய அரசாங்கத்தையும் அமைத்துள்ள நிலையில், மகிந்த இன்று சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக மாறி, வரவு செலவுத்திட்ட உரையை செவிமடுக்க நேர்ந்துள்ளது. (இ-7)

## வரவு செலவுத்திட்டம் எனக்கு புரியவில்லை

### மகிந்த தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு வரவு செலவுத்திட்டம் புரியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் வரவு செலவுத்திட்ட யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.குறித்த வரவு செலவுத் திட்டம் தனக்குப் புரியவில்லை என கூறிய பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ, வரவு செலவுத் திட்டம் வாசித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே அவையை விட்டு வெளியேறிச் சென்றார்.

புரியாத வரவு செலவுத் திட்டமொன்றை செவிமடுப்பதில் பயனில்லை எனவும் மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

இதேவேளை, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப் பட்ட வரவு செலவுத்திட்டம் புரியவில்லை என தெரிவித்துள்ளார். (இ-7)

## லக்ஷ்மன் யாப்பாவுக்கு விஜேதாஸவின் பதவி?

எதிர்வரும் சில நாட்களுக்குள் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு அமைச்சரவை அமைச்சு பதவி ஒன்று கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக மிக நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியுற்ற அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியலில் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

இதன் காரணமாக அவர் இராஜாங்க அமைச்சர் பதவி ஒன்றினை பெற்று கொண்டார்.

தற்போது சர்ச்சைக்குரிய அவன்கார்ட் சம்பவம் தொடர்பில் அதிகம் பேசப்படுகின்ற அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவின் கீழ் செயற்படுகின்ற புத்தசாசன அமைச்சு பதவி லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு கிடைக்கவுள்ளதாக நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (இ-7)

## அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் பொருளாதாரக் கொள்கை எதுவுமில்லை

### ஜே.வி.பி.கடுமையாக சாடல்



(கொழும்பு)

2016 ஆம் நிதியாண்டுக்கென முன்வைக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் பொருளாதாரக் கொள்கைகள் என்று எதுவும் கிடையாது. மக்களுக்கும் எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கப்பெறவில்லை என ஜே.வி.பி. அரசாங்கத்தை கடுமையாக சாடியுள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட 2016 ஆம் நிதி ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க் கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கத்தின் அடுத்த ஆண்டுக்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டத்தின் பொருளாதார மூலோபாயங்கள் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கு எதுவித பங்களிப்பையும் வழங்கப்போவதில்லை.

நம் நாட்டின் காணி விற்பனைச் சந்தை வாய்ப்புகள் மற்றும் நிதிச் சந்தை போன்றவற்றை தனியாருக்கு தாரை வார்த்தல், கல்வியை வர்த்தகப் பண்டமாக கருத முற்படுதல், அரச சேவையை வெட்டுக்குள்ளாக்கி, ஓய்வூதியத்தை இல்லாதொழித்தல் போன்ற முன்மொழிவுகள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கான சிறந்த பொருளாதார கொள்கை அரசாங்கத்திடம் இல்லை என்பது தெளிவாகியுள்ளது. அத்துடன் மக்களுக்கும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

## உலகத் தமிழர் பேரவை உட்பட சில அமைப்புகளின் தடை நீக்கம்

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவான சில அமைப்புகள் மற்றும் அந்த அமைப்புகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் சிலர் இலங்கைக்கு வருவதை தடை செய்து மகிந்த அரசாங்கம் வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 1854/41 என்ற இலக்கத்தை கொண்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புகள் என சந்தேகிக்கப்படும் 17 அமைப்புகள் தடை செய்யப்பட்டதுடன் 424 நபர்கள் இலங்கைக்கு வருவது தடை செய்யப்பட்டது.

முள்ளிவாய்க்கல் பகுதியில் விடுதலைப் புலிகளின் பதுக்குகுழி ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட இரகசிய ஆவணம் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த தடைவிதிக்கப்பட்டதாக கடந்த அரசாங்கம் கூறியது.

தற்போது உயிருடன் இல்லாத நபர்களின் பெயர்களும் தடை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், உலகத் தமிழர் பேரவை உட்பட சில அமைப்புகளுக்கும் நபர்களுக்குமான தடை நீக்கப்பட்டுள்ளது. (இ-7)

## முதல்வர் ‘ஜெயா’ மீண்டும் கடிதம்

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 14 பேரையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார்.

இராமேஸ்வரம், மண்டபம் பகுதிகளில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற14 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடந்த 18ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு தூதரக ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடியை அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# முன்னாள் போராளி மர்மமாக மரணம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூன்றாம்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் அவருடைய வீட்டு முற்றத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியான வீரசிங்கம் தனபாலசிங்கம் (வயது-40) மூன்று பிள்ளைகளின் தந்தை என தெரிய வந்துள்ளது.

குறித்த குடும்பஸ்தர் கடற்தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் நேற்று காலை வீட்டு முற்றத் தில் காணப்பட்ட மரத்தில் துண்டினால் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலினால் கழுத்தில் இருக்கிச் சுற்றப்பட்ட நிலையில் சடலமாக காணப்பட்டார.

உடனடியாக இலுப்பைக் கடவை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரனைகளை மேற்கொண்டதோடு சடலத்தை மீட்டு மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.


பின் சடலம் மன்னார் நீதிமன்றத்தின் உத்தர விற்கமைவாக பிரேத பரிசோதனை மேற்கொண்ட நிலையில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மர்மமான முறையில் உயிரிழந்த முன்னாள் போராளியான வீரசிங்கம் தனபாலசிங்கம் தொடர்பில் அவருடைய மனைவியிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டுள்ளாரா? அல்லது தற்கொலை செய்து கொண்டுள்ளாரா? என விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிபபிடத்தக்கது. (எ-11)

# இயன் பெல்லை தெரிவு செய்யாதது பிழையான நடவடிக்கையாகும்

## பீட்டர்சன் சாடல்





இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் இயன் பெல் தெரிவு செய்யபடாததற்கு முன்னாள் அணித் தலைவர் பீட்டர்சன் கடுமையாக சாடியுள்ளார்.

தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும்

இங்கிலாந்து அணியில் இயன் பெல் தெரிவு செய்யப்படவில்லை என்ற செய்தி தமக்கு கடுமையான கோபத்தை ஏற்படுத்தியதாக பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள வீடியோவில்,

ஆண்டில் நடைபெறவிருக்கும் ஆகச் சிறந்த டெஸ்ட் தொடரில் இருந்து,

இதுவரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கும் ஒரு வீரரை எப்படி தெரிவு செய்யாமல் புறக்கணித்தார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.

உலகின் தலைசிறந்த அணியுடன் மோதவிருக்கும் போது சிறந்த வீரர்களையே தெரிவு செய்ய வேண்டும்,

ஆனால் 100 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாடிய அனுபவமிக்க வீரரை எப்படி இதுபோன்ற ஒரு தனித்துவமிக்க தொடரில் இருந்து நீக்க முடிந்தது என வினவியுள்ளார்.

தென்னாபிரிக்க தொடரில் அவர் சோபிக்கவில்லை என்றால் கண்டிபபாக அவரை நீக்குங்கள்,

ஆனால் அனுபவம் மிகுந்த ஒரு வீரரை எவ்வித காரணங்களும் இன்றி தெரிவு செய்யாமல் விடுவது சிறந்த அணியாக இருக்க முடியாது என பீட்டர்சன் தெரிவித்துள்ளார். (க)

# கல்விக்கு அதிக நிதியை ஒதுக்கியது புதிய அரசு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விக்காக எந்த அரசாங்கமும் இதுவரை ஒதுக்காத நிதியை 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் புதிய அரசாங்கம் ஒதுக் கியிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த சில தசாப்தங்களாக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட நிதியை விட 4 மடங்கு நிதி இம்முறை கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாலபேயில் பாடசாலை ஒன்றில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பிள்ளைகள் சமூகத்தில் எதிர்நோக்கும் அனர்த்தங்களில் இருந்து அவர்களை தற்காத்து கொள்வதற்காக பெற்றோர், ஆசிரியர்கள் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி, நட்புறவுடன் பணியாற்றுவதை அதிகரக்க விசேட வேலைத்திட்டம் ஒன்று அடுத்த வருடம் முதல் அமுல்படுத்தப்படும்.

மக்களுக்கு முடிந்தளவு அறிவை பெற்றுக்கொடுப்பதே அரசாங்கம் என்ற வகையில் அதன் ஆட்சியாளர்கள் நாட்டு பிள்ளைகளுக்கும் மக்களுக்கும் வழங்கும் அளப்பரிய பங்களிப்பாகும்.

திடசங்கற்பத்துடனும் அர்ப்பணப்புடனும் பிள்ளைகள் வாழ்க்கையை வெற்றிகொள்ள வேண்டும்.

தன்னிடம் இருக்கும் தயக்கமன்மை, திடசங்கற்பம், அர்ப்பணிப்பு மற்றும் நேர்மை காரணமாகவே நாட்டின் சாதாரண குடிமகனாக இருந்த தன்னை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# நடப்பு ஆண்டைவிட சிறந்த ஆண்டு அமைவது கடினம்

## சானியா மிர்சா



இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவுக்கு 2015-ம் ஆண்டு தித்திப்பானதாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

சுவிட்சர்லாந்து வீராங்கனை மாரட்டினா ஹிங்கிஸ்சுடன் இணைநது சானியா மிர்சா 2 கிராண்ட்ஸ்லாம் உள்பட 9 இரட்டையர் பட்டங்களை வென்று பிரமாதப்படுத்தினார்.

அத்துடன் இரட்டையர் தரவரிசையில் 'நம்பர் ஒன்' இடத்தையும் அலங்கரித்து வருகிறார்.

இந்த நிலையில் சானியா மிர்சா நேற்று முன்தினம் அளித்த ஒரு பேட்டியில், 'எனக்கு இதைவிட (2015) சிறந்த ஆண்டு அமைவது என்பது கடினம்.


அடுத்த ஆண்டு, இந்த ஆண்டை விட சிறப்பாக அமையாவிட்டாலும், இந்த ஆண் டுக்கு நிகரான வெற்றிகளை குவிக்க முடியும் என்று நம்புகிறேன்.

மேலும் ஒரு கிராண்ட்ஸ்லாம் வென்றால் சிறப்பானதாக இருக்கும். எனது வெற்றிக்கு ஹிங்கிஸ் முக்கிய காரணம்.

எனக்கு இன்னும் நறைய டென்னிஸ் வாழ்க்கை எஞ்சி இருக்கிறது என்றார். (க)

# திறமையை மட்டும் பார்க்க இயலாது சூழ்நிலையையும் பார்க்க வேண்டும்

## ஹோலி தெரிவிப்பு



சூழ்நிலைக்கு தகுந்தபடி அணியில் மாற்றம் செய்கிறோம் என்று இந்திய டெஸ்ட் அணித தலைவர் விராட் ஹோலி கூறியுள்ளார்.

பெங்களூருவில் நடந்த 2-வது டெஸ்டில் அமித் மிஸ்ரா நீக்கப்பட்டார். அவருக்கு பதிலாக சகலதுறை ஆட்டக்காரரர் ஸ்டூவர்ட் பின்னி இடம் பெற்றார்.

இது போன்ற மாற்றங்கள் செய்யப்படுவது ஏன்என்பது குறித்து இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி அளித்துள்ள பேட்டியில், விடாப்பிடியாக வெறும் திறமையை மட்டும் பார்க்கக் கூடாது, சூழ்நிலைக்கு ஏற்றவாறு சகலதுறை ஆட்டக்காரரகளை தெரிவு செய்யவேண்டும்.

சில மாதங்களாக அமித் மிஸ்ரா சிறப்பாக பந்து வீசி வருவது உண்மைதான்.

ஆனால் பெங்களூரு ஆடுகளத்துக்கு ஸ்டூவர்ட் பின்னி போன்ற வீரர் தேவையாக இருந்தார் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

களம் இறங்குவதற்கு இதுவே சரியான் கூட்டணி என்பது இந்த அணியில் இன்னும் அமையவில்லை.

எந்த ஒரு நிலைமையிலும் அணிக்கு தங்களது முழுத்திறமையை காட்ட ஒவ்வொரு வீரர்களும் ஆர்வமுடன் தயாராக இருக்கிறார்கள்.

இது நல்ல அறிகுறியாகும் என்று கூறியுள்ளார். (க)

# உலக ஏடிபி டென்னிஸ் அரையிறுதியில் வாவ்ரிங்கா



றொப் 8 வீரர்கள் பங்கேற்கும் உலக ஏடிபி டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடந்து ஆட்டம் ஒன்றில் உலகின் 4-ம் நிலை வீரரான வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) 7:6 (7:4), 6:4 என்ற கணக்கில் இரண்டாம் நிலை வீரர் அன்டி முர்ரேயை (இங்கிலாந்து)' வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ரபெல் நடால் (ஸ்பெயின்) 6:7 (2:7), 6:3, 6:4 என்ற கணக்கில் சகநாட்டைச் சேர்ந்த டேவிட் பெரரை வீழ்த்தி 3-வது வெற்றியை பெற்றார். (க)

## விற்பனைக்கு

புதிதாக வாங்கி 2 மாதமுடைய பற்றியில் இயங்கும் 70 MPH வேகத்தில் 85 Km தூரம் ஓடக்கூடியதும் செம்மஞ்சள் நிறமுடையதுமான மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (2533)

தொடர்புகளுக்கு: 075 503 2515, -076 697 2691

## கடை விற்பனைக்கு

யாழ் நகரில் ஸ்ரான்லி றோட்டில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கடை விற்பனைக்கு உண்டு. (2544)

தொடர்புகளுக்கு :-
0779107242


# அல்கொய்தா தாக்குதலில் ஏமனில் 34 பேர் பலி

தென் கிழக்கு ஏமனில் 2 இராணுவ நிலைகளை குறிவைத்து அல்கொய்தா தீவிரவாதிகள் நேற்று முன்தினம் காலை தாக்குதல் நடத்தினர். இதில் 15 இராணுவ வீரர்கள், 19 ஜிகாதிக்கள் உயிரிழந்தனர். மேலும் பொது மக்கள் பலர் காயமடைந்தனர்.

ஏமன் இராணுவ மற்றும் மருத்துவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டுள்ளன. (இ-7)

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் இராஜசேகரம் சித்திவிநாயகம்



பிறப்பு - 25.03.1942
இறப்பு - 04.12.2014

திதி: திரியோதசி (23.11.2015)

கடந்த வருடம் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் இராஜசேகரம் சித்திவிநாயகம் அவர்களின் ஆண்டு திவசம் 23.11.2015 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

ஊறணி, வல்வெட்டித்துறை. (சி-2756) குடும்பத்தினா. 077 468 5724

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் புனிதவதி



இணுவில் மேற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் புனிதவதி அவர்கள் 21.11.2015 சனிக்கிழமை நேற்று அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான செல்லர்-சுவகி தம்பதியரின் அன்பு மகளும் அமரர்களான பொன்னர்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் பாலகிருஷ்ணன், பிரபாகரன், கிருஷ்ணலீலா, கிருஷ்ணவேணி, ராதாகிருஷ்ணன், கிருபாகிருஷ்ணன் ஆகியோரின் பாசம் நிறைந்த தாயாரும், அன்னார் அமரர் இராசையா (S.R) மற்றும் தங்கம்மா, நேசமணி திருமகள், பஞ்சவர்ணம், அருந்தவம், அருமத்துரை ,ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர்களான சிவபாக்கியம், தெய்வேந்திரம், சாந்தகுமார் மற்றும் கனகேஸ்வரி, குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சௌந்தலாதேவி, ரஜனி, பாலகுமார், கோபாலச்சந்திரன், காந்தரூபி, ரஜனிகா ஆகியோரின் அன்பு நிறைந்த மாமியாரும் யதுஷன், குயிலன், றம்ஷா, தில்ஷாந், அபினாஷ், மதுரா, அபிஷாந், தனுராஜ், சஞ்சனா, சங்கவி, கபிஷாந், மிதுஷாந், விதுர்ஜா, மிதுர்ஜன் ஆகியோரின் பாசம் நிறைந்த பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.11.2015 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில். (2550)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ஞானேஸ்வரி இராமநாதன்

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி இராமநாதன் (20.11.2015) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராமநாதனின் (இளைப்பாறிய உதவி விவசாயப் பணிப்பாளர், திருநெல்வேலி) அன்பு மனைவியும் உஷானி (பயிலுநர் ஆசிரியர், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), கிரிஷானி (மாணவி, இரஜரட்டை பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரமணானந்தன் (நமீபியா), இரத்தினேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, சர்வானந்தன் (லண்டன்), மகாதேவன் (யாழ்.மாநகரசபை), சத்தியானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலராணி (நமீபியா),சண்முகலிங்கம், ராஜேந்திரன், வனஜா (லண்டன்),பத்மினி(யாழ். இந்து மகளிர் கல்லூரி), தங்கமணி (லண்டன்) , விநாயகம்பிள்ளை ( ஓய்வு பெற்ற ஆசிரியர்), சண்முகநாதன் (கனடா), கனகரட்ணம் (பிரான்ஸ்), கோகிலாதேவி,கோணேஸ்வரி (கனடா)ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.11.2015) இன்று ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
நல்லூர். (2547)

தகவல்:
குடும்பத்தினர்
077 653 1820

## யாழ்.முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்திலுள்ள தடைகள், இதனைத் துரிதப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கடந்த ஜுன் மாதம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இம்மக்களின் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கு யாழ்.மாவட்டத்தில் தற்போது மீள் குடியேறி வாழும் மக்களின் தேவைகள் என்ன? என்ற விபரத்தை - தர வினை முதலில் தயார் செய் வதென்றும் இதன் பின்னர் இம்மக்களின் உடனடிப் பிரச்சினைகள், தேவைகளை நிறைவேற்றிக்கொடுக்கும் வகையில் நடமாடும் சேவை ஒன்றை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தற்போது இங்கு மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மக்களின் தகவல்கள் திரட்டப்பட்டு அறிக்கையாக தயார்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அடுத்தகட்டமாக இம்மக்களுக்கான நடமாடும் சேவை இம்மாதம் 19 அல்லது 21ஆம் திகதி நடத்துவதற்கு கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபருடன் நடந்த சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கடந்த வாரம் சீரற்ற காலநிலையினால் மழையும் வெள்ளமுமாக யாழ். குடாநாடு காட்சியளித்ததனால் பிறிதொரு தினத்தை ஒதுக்கித்தருவதாக அரசாங்க அதிபர் கூறியுள்ளார். இதற்கான ஏற்பாட்டினை மக்கள் பணிமனை முன்னெடுத்து வருகின்றது.

இந்நடமாடும் சேவையில் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய 13 இற்கும் மேற்பட்ட திணைக்களங்கள் பங்குபற்ற உள்ளன.

இந்நடமாடும் சேவையை மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்நடமாடும் சேவை தொடர்பாகவும் முன்னெடுக்கப்படவுள்ள மீள்குடியேற்ற திட்டங்கள், நடைமுறைகள் தொடர்பாகவும் முஸ்லிம் சமூக ஆர்வலர்களுடனான கலந்துரையாடலை அரசாங்க அதிபர் நாளை திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்துள்ளார் என மக்கள் பணிமனையின் தலைவரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான மௌலவி பி.ஏ. எஸ்.சுப்யான் அறிவித்துள்ளார். (இ

## ஆசிரியர் நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவும்

### யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய நியமனம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நியமனம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களினால் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா ஆகியோரிடம் நேரடியாக மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 38ஆவது அமர்வு கடந்த வியாழக்கிழமை அன்று கைதடியிலமைந்துள்ள பேரவைச்செயலகத்தில்இடம்பெற்றது.

இவ் அமர்வுகள் முடிவடைந்த பின்னரே மேற்படி பிரதிநிதிகளை சந்தித்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் தமது மனுவை கையளித்திருந்தனர்.

உயர்தொழில்நுட்ப கல்லூரியின் இயக்குநர் மற்றும் துறைத் தலைவர்களின் விண்ணப்ப கடிதங்கள் என்பனவும்மேற்படி மகஜருடன் இணைத்து கையளித்திருந்தனர்.

இதேவேளை தமது கற்கை நெறி தொடர்பிலும் கடந்த காலங்களில் தமக்கு வழங்கப்பட்ட ஆசிரியநியமனம் தொடர்பிலும்தெளிவுபடுத்தினார்கள்.

கடந்த 2013ஆம் ஆண்டில் 335 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. ஆனால் அக்காலத்திற்கு பின்னர் ஆசிரிய நியமனம் தொடர்பாக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறவில்லை எனவும் முதலமைச்சர் கவனத்திற்கு மாணவர்கள் கொண்டு வந்தனர்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஆசிரிய நியமனம் தொடர்ந்தும் வழங்கப்படாமை தொடர்பில் உரிய ஆய்வுகளை விரைவில் எடுக்கவுள்ளதாகவும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதன்போது மாணவர்களிடம் தெரிவித்திருந்தார்.

தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் தொடர்பிலான பாடங்களின் அதிகமான வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் இது தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார். அத்துடன் மாகாண சபை அமர்வில் இது தொடர்பில் ஆராயப்படும்போது எம்மால் முழு ஒத்துழைப்பினையும் வழங்கமுடியும் என எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.தவராசா மாணவர்களிடம் தெரிவித்தார். (இ-5-63)



யாழ். மாவட்டத்தின் சமூக அரசியல் கரிசனை எனும் தலைப்பில் சுவிஸ் நாட்டின் இலங்கைக் கான தூதுவர் ஹெய்ன் வால்கர் நெடெரகூனுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கி ழமை யாழ். முகாமையாளர் மன்றத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாட லில் பொறியியலாளர் எம். தில்லை நாதன், எம். ராமதாசன், வைத்தியர் ஆர். சுரேந்திரகுமார், வி. நிரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்- பொ. சோபிகா)

## அவதார தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஶ்ரீ சத்திய சாயி சேவாநிலையத்தில் 90ஆவது அவதார தின விழா நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • •

கோப்பாய் பகவான் ஶ்ரீ சத்திய சாயி நிலையத்தினரின் ஶ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார தினம் நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.55வரைநடைபெறவுள்ளது.


இந் நிகழ்வில் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம் பெறும். (இ-5-136)

## சோம வாரம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வர ஆலய சோம வார உற்சவம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது. இச்சோமவார உற்சவம் இம்மாதத்தில் வரும் நான்கு தினங்களும் இடம்பெறும். (இ-5)




# மரண அறிவித்தல்



## திரு அருணாசலம் விக்கினேஸ்வரமூர்த்தி

### (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

யாழ். கட்டுவனைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் விக்கினேஸ்வரமூர்த்தி அவர்கள் 18-11-2015 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), லோகதாசன் (லண்டன்), இராஜேந்திரக்குமார் (ஜேர்மனி), ரவிசங்கர் (லண்டன்), சுனில் கவஸ்கர்(லண்டன்), ரஜனி(சுவீடன்), பிரமிளா(நோர்வே), சுயனி (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பிஜயா,லீலாவதி அவர்களின் அன்புச் சகோதரரும் சத்தியபாமா, சத்தியசீலா, விஜிதா, குமுதினி, கிருஸ்ணதாஸ், ரமேஸ், கோணேஸ், பிறேமரஞ்சினி, அபயகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அருளீஸ்வரன், அஸ்வினீசன், ஆரணியா (சுவிஸ்), சாரங்கன், சபர்னா, சாருகா (லண்டன்), மதுவந்தி, துவாரகீஸ், அதிரதன், சச்சின்(ஜேர்மனி), ரவிராஜ், வைஸ்ணவி, அருந்ததி (லண்டன்), சாருஜன், கபீசன், றேகிதா (சுவீடன்), அபினயன் (நோர்வே), அஞ்சனா, அச்சுதா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 22-11-2015 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பின்னர் ஏழாலை

ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாச்சிமார் கோவிலடி, கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்

(2552)

# மாலியில் பயங்கரம்

## 2 தீவிரவாதிகள் உட்பட 27 பேர் தாக்குதலில் பலி

ஆபிரிக்க நாடான மாலியில் உள்ள ஹோட்டலில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இந்தியர்கள் உட்பட 170 பேரை சிறை பிடித்தனர். பல மணி நேர மோதலுக்கு பிறகு பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர். இருப்பினும் இரண்டு தீவிரவாதிகள் உட்பட 27 பேர் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். தலைநகரான பமாக்கோவின் மையப்பகுதியில் உள்ள அமெரிக்காவுக்கு சொந்தமான 'ராடிசன் புளூ' நட்சத்திர ஹோட்டலில், நேற்று முன்தினம் காலை உள்ளூர் நேரப்படி 7 மணிக்கு (இந்திய நேரம் பிற்பகல் 12.30 மணி) 2 தீவிரவாதிகள் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளுடன் காரில சென்று இறங்கினர். அந்த கார், தூதர்களுக்கு உரிய இலக்க பலகை யுடன் கூடியதாகும்.

இந்த ஹோட்டலில் கம்பனி ஒன்றில் பணியாற்றும் இந்தியர்கள் 20 பேர் நிரந்தரமாக தங்கி உள்ளனர். மேலும், வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் இங்கு வந்து தங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த ஹோட்டலில் சென்று இறங்கிய உடனேயே தீவிரவாதிகள் சரமாரியாக சுடத் தொடங்கினர். குண்டுகளையும் வெடி க்க செய்தனர். இதனால் அங்கே பதற்றம் தொற்றியது. அங்கிருந்த பலர் உயிருக்கு பயந்து தப்பி ஓட்டம் பிடித்தனர். இதற்கு மத்தியில், ஹோட்டலில் தங்கி இருந்த 140 விருந்தினர்கள், 30 ஊழியர்கள் என 170 பேரை பணயக்கைதிகளாக தீவிர வாதிகள் பிடித்து ஹோட்டலின் 7ஆவது தளத்திற்கு கொண்டு சென்று அடைத்தனர்.

தீவிரவாதிகள் தாக்குதல் குறித்த தகவல் அறிந்ததும் பொலிஸ் படையினர், இராணுவ வீரர்கள், ஐ.நா. அமைதிப்படையினர், பிரானஸ் சிறப்பு படையினர் அங்கு விரைந்தனர். ஹோட்டல் பகுதியை அவர்கள் சுற்றி வளைத்தனர். தீவிரவாதிகளுக்கு எதிராக அவர்கள் கடுமையான தாக்குதல் தொடுத்த னர். அவர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச்சண்டை காரணமாக அந்த பகுதி போர்க்களமாக மாறி, வெடிப்பு சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

### அனைவரும் மீட்பு

இந்த தாக்குதலில் மாலி சிறப்பு அதிரடிப் படை கமாண்டோக்கள் இணைந்தனர். அமெரிக்க சிறப்பு படையினரும் உதவினர். அவர்கள் அனைவரும் தாக்குதல் நடத்தி 20 இந்தியர்கள் உட்பட அனைத்து பணயக் கைதிகளையும் பத்திரமாக மீட்டனர். 20 இந்தியர்களும் மீட்கப்பட்டு விட்டதை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. இதே போன்று ஏர் பிரான்ஸ் விமான நிறுவனத்தின் சிப்பந்திகள் 12 பேர் வெற்றிகரமாக மீடகப்பட்டு விட்டதாக அந்த நிறுவனம் கூறுகிறது.

### 27 உடல்கள் மீட்பு

பல மணி நேரமாக நடந்த மோதலின் முடிவில், 2 தீவிரவாதிகளும் சுட்டுக்கொல்லப் பட்ட னர். இதை மாலி நாட்டு இராணுவம் தெரிவித்தது. மோதல் முடிந்த பிறகு, ஹோட்டலுக்குள் போய்ப் பார்த்தபோது, 27 பேரின் உடல்கள் கிடந்தன. அவை மீட்கப்பட்டன.

இதற்கிடையே சாத் நாட்டுக்கு மாநாடு ஒன்றில் பங்கேற்க சென்றிருந்த மாலி ஜனாதிபதி இப்ராகிம் பாவ்பாக்கர் கெய்ட்டா தனது பயணத்தை இடையில் முடித்துக் கொண்டு நாடு திரும்பினார் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-7)


### பணிப்பெண் தேவை

யாழ். நல்லூரடியில் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் உதவி செய்வதற்கு பணிப் பெண் தேவை. ஒவ்வொரு நாளும் வந்து போகலாம். அல்லது தங்கி நின்று வேலை செய்வதற்குரிய வசதியும் உண்டு.

சம்பளம் - 15000/- (2502)

தொடர்புகளுக்கு : 0769283179

### தேவை

புத்தகம் கட்டுனர்
(பெண்கள்-மட்டும்)
நன்கு வேலை அனுபவம் உள்ளவர்களும் வேலை பழக விரும்புவோரும் வருக.

மேனகா பிறிண்டேர்ஸ்
(கதிரேசன் கோவிலடி)
367-கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 9468 (2543)


# மீனவர்களின் பிள்ளைகளுக்கு கட்டுரை, சித்திரப் போட்டிகள்

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு மீனவர்களின் பிள்ளைகளுக்கான சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் அந்தந்த பிரதேச கடற்றொழில் பரிசோதகர் ஊடாக விண்ணப்ப படிவங்களை பெற்று தமது ஆக்கங்களை பாடசாலை அதிபர் ஊடாக உறுதிப்படுத்திய பின்னர் யாழ்.கடற்றொழில் நீரியல்வளத்துறை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குறித்த போட்டியில் பங்குபற்றுபவர்களின் கனிஷ்ட பிரிவினராக 8 வயது தொடக்கம் 12 வயதுக்கு உட்பட்டவர்களும் சிரேஷ்ட பிரிவினராக 12 வயது தொடக்கம் 18 வயதுடையவர்களும் பங்குபற்ற முடியும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் குறித்த ஆக்கங்கள் கொழும்பு கடற்றொழில் நீரியல்வளத்துறைதலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ் கண்ணா தெரிவித்துள்ளார். (இ-9)


### வைத்தியம்

தலைமுடி உதிர்தல், உடல்பருமன் குறைத்தல்/கூட்டுதல், தசை, எலும்பு, மூட்டு சம்பந்தமான நோய்கள், ஆண்/ பெண் மலட்டுத்தன்மை, தோல் சுருக்கங்கள், தழும்புகள் மறைய. முன்பதிவு அவசியம்.

Shan's Health Care,
255,K.K.S Road, Kokuvil.
(2519) 077 035 7307

### காணி விற்பனைக்கு

முரசுமோட்டை புலிங்கதேவன் முறிப்பில் 4 ஏக்கர் உறுதிக் காணி (இரண்டு போகம் செய்யக்கூடியது) 13 இலட்சம் ரூபாவுக்கும் உருத்திரபுரம் D 10 இல் 1 1/2 ஏக்கர் வீடு கட்டக் கூடிய உறுதிக்காணி 12 இலட்சம் ரூபாவுக்கும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: சதாசிவம் சண்முகலிங்கம்,
92/1, பிரம்படி லேன்,
கொக்குவில்.
(2549) 077 028 8360

### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:7<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: BBA/லண்டன் PR<br>தொ.இ: B/5240 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 43 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5236 |
| பிறப்பு: 1984 NON RC<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: B/5241 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 73 செவ். 12 இல்<br>தகைமை/தொழில்: தாதி நோர்வே குடியுரிமை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்.<br>தொ.இ: G/5238 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 67 செவ். 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:O/L சொந்தத் தொழில்<br>தொ.இ: B/5242 | பிறப்பு: 1978 RC<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 37 செவ். 8 இல்.<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBA, ACMA, CIMA/ அரச தொழில்<br>தொ.இ: G/5245 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 70 செவ்.8 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L கணக்காளர், லண்டன்<br>தொ.இ: B/5243 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:43 செவ்.10 இல்.<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்:BSC/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: G/5246 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# ராசி பலன்

22.11.2015
(கார்த்திகை 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 1.23 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 12.19 மணிவரை
இராகுகாலம் 4.40-6.10 மணிவரை
சுபநேரம் 9.10-10.40 மணிவ்ரை
உத்தான ஏகாதசி விரதம்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
மகம், பூரம்
சுபமுகூர்த்தநாள்

| | | | |
|---|---|---|---|
| சந் கேது | | | |
| | | | |
| | | | குரு |
| | சனி, சூரி புத | | செவ் ராகு, சுக் |

**மேடம்:** கொடுக்கல்-வாங்கல்களில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் கூடும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல் நலம் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** வார்த்தைகளில் நிதானம் தேவை, குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், விலகிச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**துலாம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, விருந்துகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** எதிர்பார்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், மறைமுகமான எதிர்ப்புகள் வந்து சேரலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள் வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்:** திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம்.

# சீன சுரங்கத்தில் திடீர் தீ விபத்து!

## 21 பேர் உடல் கருகிப் பலி!

(பீஜிங்)

சீனாவில் வடகிழக்கு பகுதியில் உள்ள ஹெய்லாங்ஜியாங் மாகாணம், ஜிக்ஸி நகரத்தில் அரசுக்கு சொந்தமான நிலக்கரி சுரங்கம் ஒன்று உள்ளது. இந்த நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் இரவு 38 ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அப்போது சுரங்கத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதனால், ஊழியர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியேறினர்.

இருப்பினும் இவ்விபத்தில் 21 பேர் உடல்கருகி உயிரிழந்தனர். 16 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். ஒருவரை காணவில்லை. அவரை மீட்பு படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

சுரங்கத்தில் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். (இ-7)

# இணுவையம்பதிக்கு பெருமைசேர்த்த பண்டிதர் இராசையா



சைவமும் தமிழும் செழித்து வளரும் இணுவையம்பதியில் பிறந்த பண்டிதர் நாகலிங்கம் இராசையா புகழ்பூத்த தமிழ்ஆசிரியராகத்திகழ்ந்தவர்.

இணுவில் இந்துக் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்த அமரர் தனது சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் 1943 ஆம்ஆண்டுசித்திபெற்று அதே ஆண்டில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற பண்டிதர் வகுப்பில் இணைந்து அப் பரீட்சையிலும் முதன்மை மாணவராக சித்தி பெற்று பண்டிதரானார்.

கற்பித்தலிலும்சமூகசேவையிலும் நாட்டம் கொண்ட அமரர் இராசையாஇலங்கை கல்வி திணைக்களத்தால் நடத்தப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு தோற்றி சித்தியெய்தினார்.

தனது வாழ்க்கையை ஆசிரியர் தொழிலுடன் ஆரம்பித்த அமரர் பண்டிதர் இராசையா முதலில் தனியார் பாடசாலையாக அரசில் பதிவு செய்து இயங்கி வந்த ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் இணைந்து தமிழ் கற்பிக்கும் முன்னணி ஆசிரியராக தனது தொழிலை ஆரம்பித்தார்.

தமிழைக் கற்பிப்பது மட்டுமன்றி சொற்பொழிவுகளை ஆற்றுவதிலும் நாடகங்களை மேடையேற்றுவதிலும் ஆர்வமுள்ளவராக விளங்கினார்.

பண்டிதர் இராசையாவின் 4 ஆம் ஆண்டு சிராத்த தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

அவர் மேடையேற்றிய முதல் நாடகமான சகுந்தலையின் தந்தையாக நடித்து எல்லோரிடமும் பாராட்டினைப் பெற்ற கலைஞராக விளங்கினார்.

இணுவில்கந்தசுவாமிகோவிலில் கந்தசஷ்டி படிப்புக்கும் இணுவில்பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் பிள்ளையார் கதை படிப்புக்கும் பொறுப்பாக இருந்து உரையாற்றுவதிலும் பொழிப்புரை வழங்குவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

இதன் காரணமாகவே இணுவில்கந்தசுவாமிகோவிலில்நடைபெற்ற கம்பசாகரம் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் இராதாகிருஷ்ணன் இந்தியாவில் இருந்து வருகை தந்தபோது அந் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்தி பலரது பாராட்டையும்பெற்றுக்கொண்டார்.

அமரர்பண்டிதர் இராசையா நல்ல மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்த காரணத்தால் பண்டிதர் க.பொ.இரத்தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து தான்செல்லும்மேடைகளிலெல்லாம் அவரையும் அறிமுகப்படுத்தி வந்தார்.

இதன் அடிப்படையில் அரசியல் பேச்சுக்களிலும் தமிழ் மொழிக்கான நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றும் பழக்கத்தை கொண்டவராக அமரர் பண்டி தர் இராசையா விளங்கினார்.

அமரர்பண்டிதர்இராசையா போர்ச்சூழல் காரணமாகஇடம்பெயர்ந்து கொழும்பிலும் பின்னர் தமிழ்நாட்டிலும் வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப் படும் என்ற முதுமொழிக்கிணங்க அமரரின் பிள்ளைகளான செல்வி ஆதிலக்சுமிஇராசையா பிரபல எழுத்தாளராக இன்று சுவிஸ் நாட்டில் விளங்குகிறார். அதேபோல்அவரது இருபுதல்வர் களும்இலங்கையிலும்வெளிநாட்டிலும் கணனி வல்லுநர் களாக பணியாற்றி வருகின்றனர். மொத்தத்தில் பண்டிதர் இராசையாவின் சமயப் பணியும் சமூகப் பணியும் எமது கிராமத்தால் எக்காலமும்மறக்கப்படமாட்டாதுஎன்பதனை உறுதிபடக்கூறுவதுடன்அவரின் நினைவுகள் என்றும் பசுமையுடன்மீட்கப்படும்என்பதையும் தெரிவித் துக் கொள்கிறேன்.

பேராசிரியர் கந்தையா தேவராஜா
தலைவர், வணிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

# புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த யாழ்.இளைஞர்கள் இருவர் விடுதலை

இந்திய கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு புழல் சிறைச்சாலையில் ஒரு மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கடந்த 17 ஆம் திகதி விடுதலை பெற்றுள்ளனர். அவர்களை அவர்களுடைய பெற்றோரிடத்தில்ஒப்படைத்துள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறை உதவிப்பணிப்பாளர் ரமேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரு இளைஞர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி படகில் ஏற்பட்ட இயந்திரப் பழுது காரணமாக இந்திய கடற்பரப்புக்குள் சென்றுள்ளனர்.

இவர்கள் இந்திய கடலோர காவற்படையினரால் கைது செய்யப்பட்டு புழல் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 17 ஆம் திகதி இங்குள்ள நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டு இந்திய கடலோர காவற்படையினரால் காங்கேசன்துறை கடற்படையினரிடம் கையளித்தனர். அவர்களிடம் இருந்து இருவரையும் கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் பொறுப்பேற்று குறித்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் கடந்த 18 ஆம் திகதி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-9)

# கூடுதல் வரி செலுத்துவோருக்கு ஜனாதிபதி, பிரதமரை சந்திக்க வாய்ப்பு

வருடாந்தம் 25 மில்லியனுக்கும் அதிகமான வரி செலுத்தும் தனிநபர்களுக்கு ஜனாதிபதி மற்றும் பிரதமரை இலகுவாகச் சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டுககான வரவு- செலவுத்திட்டத்தின் ஊடாக இது தொடர்பான பிரேரணையொன்றை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க முன்வைத்துள்ளார்.

அத்துடன் வரி செலுத்துவோரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு விமான நிலையங்களில் விசேட வரப்பிரசாதங்களை வழங்குதல், அரசாங்கத்தின் வைத்தியசாலை உள்ளிட்ட நிறுவனங்களில் முன்னுரிமை அளித்தல், அரச வைபவங்களுக்கு அழைப்பு கொடுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களையும் நிதியமைச்சர் முன்வைத்துள்ளார்.

அத்துடன் வரி செலுத்துவோரின் நன்மை கருதி வரி ஆலோசனைச் சேவையொன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இச்சேவை தொழிற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 160 | 130 | 150 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 800 | 600-700 | 600 | 450 | 600 |
| தக்காளி | 160 | 140 | 150 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 140 | 150 | 150 | 150 | 160 |
| கரட் | 100 | 110 | 200 | 90 | 150 |
| பூசணி | 60 | 40 | 60 | 40 | 50 |
| புடோல் | 140 | 160 | 100 | 70 | 140 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 200 | 180 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 | 150 | 150 |
| பாகற்காய் | 300 | 300 | 400 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 120 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 | 280 | 250 |
| லீக்ஸ் | 120 | 140 | 150 | 100 | 150 |
| பீற்றூட் | 80 | 100 | 120 | 90 | 70 |
| கறிமிளகாய் | 300 | 450 | 300 | 350 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 300 | — | 300 |
| போஞ்சி | 350 | 250 | 280 | — | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | 140 | 80 | — |
| கீரை – 1 பிடி | 40 | 50 | — | — | 50 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 25-60 | 35-45 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 120 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பிலாக்காய் | 50 | 60 | 60-100 | 50 | 50 |




1574 - சிலியின் ஜ/வான் பெர்னாண்டஸ் தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1908 - அல்பேனிய எழுத்துக்கள் அறிமுகப் படுத்தப்பட்டது.

1922 - துட்டன்காமுன் என்ற எகிப்திய பாரோ வின் 3,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமாதி கண்டுபிடிக்கப்பட்டது.

1935 - பசிபிக் பெருங்கடலைத் தாண்டி முதன் முறையாக விமானத் தபால்களை விநியோகிக்கும் பணியில் சைனா கிளிப்பர் என்ற விமானம் கலிபோர்னியாவை விட்டுப் புறப்பட்டது. (இவ்விமானம் நவம்பர் 29 இல் 110,000 தபால்களுடன் மணிலாவை அடைந்தது.)

1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியரின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து கிரேக்கப் படைகள் அல்பேனியாவுக்குள் நுழைந்து கோரிட்சாவை விடுவித்தனர்.

1942 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிய தளபதி பிரீட்றிக் பவுலஸ், ஸ்டாலின் கிராட்டில் தாம் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக ஹிட்ல ருக்கு தந்தி மூலம் செய்தி அனுப்பினான்.

1943 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில, சீனத் தலைவர் சியாங் காய்-செக் ஆகியோர் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் சந்தித்தனர்.

1943 - லெபனான், பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

1956 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மெல்பேர்ணில் ஆரம்பமாயின.

1963 - அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப். கென்னடி டெக்சாசில் லீ ஹார்வி ஒஸ்வால்ட் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். டெக்சாஸ மாநில ஆளுநர் "ஜோன் கொனலி" படுகாய மடைந்தார். அதே நாளில் உதவி-ஜனாதி பதி லிண்டன் ஜோன்சன் அமெரிக்காவின் 36வது அதிபராக ஆனார்.

1965 - இந்தோனீசியாவின் கம்யூனிசத் தலைவர் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

1974 - ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்றது.

1975 - பிரான்சிஸ்கோ பிராங்கோவின் மறைவை அடுத்து ஜ/வான் கார்லொஸ் ஸ்பெயின் மன்னனானார்.

1989 - மேற்கு பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் லெபனான் ஜனாதிபதி ரெனே மோவாட் கொல்லப்பட்டார்.

1990 - மார்கரட் தாட்சர் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியைத் துறந்தார்.

2002 - நைஜீரியாவில் உலக அழகிப் போட்டியாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதலில் 100 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

2003 - ஜோர்ஜியாவில் அதிபர் எடுவார்ட் ஷெவர்நாட்சேயின் எதிராளிகள் நாடாளுமன்றத்தைத் தம் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து அதிபரைப் பதவி விலகுமாறு கோரினர்.

2005 - ஜேர்மனியின் முதலாவது பெண் அதிபராக (சான்சிலர்) ஏங்கலா மேர்க்கெல் தெரிவு செய்யப்பட்டார்.

2005 - எக்ஸ் பாக்ஸ் 360 நிகழ்பட விளையாட்டு இயந்திரம் வெளியிடப்பட்டது.

2007 - இலங்கை அரசாங்கம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குத் தடை விதித்தது.

பிறப்புக்கள்ஜதொகுஸ

1830-ஜல்காரிபாய், இந்தியச் சுதந்திரப் போராட்ட வீராங்கனை (இ. 1890)

1890 - சார்லஸ் டி கோல், பிரெஞ்சுத் தளபதியும், அரசியலாளரும் (இ. 1970)

1939 - முலாயம் சிங் யாதவ், இந்திய அரசியல்வாதி

1970 - மாவன் அத்தப்பத்து, இலங்கையின் துடுப்பாளர்.

இறப்புகள்ஜதொகுஸ


1963 - ஜோன் எப். கென்னடி, 35-வது அமெரிக்க ஜனாதிபதி, (பி. 1917)

1976 - மு. திருச்செல்வம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் (பி. 1907)

சிறப்பு நாள்ஜதொகுஸ

லெபனான் - விடுதலை நாள் (1943)

# வீரவன்சவின் உறவினர்களால் அரசுக்கு 600 லட்சம் இழப்பீடு



விமல் வீரவன்ச அமைச்சராக செயற்பட்ட காலத்தில் அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்களில் அவரது உறவினர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகை காரணமாக அரசாங்கத்துக்கு 600 இலட்சம் இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கும் வகையில் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சஜித் பிரேமதாச, மத்தேகொட மற்றும் கஹது டுவை பிரதேசங்களில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சொகுசு மாடி வீட்டுத் திட்டங்களில் ஐந்து வீடுகள் விமல் வீரவன்சவின் உறவினர்களுக்கு சலுகை கட்டணத்தில் வழங்கப்பட்டுள்ளது.


இதன் காரணமாக அவர்கள் சுமார் 500 இலட்சம் வரை அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

அத்துடன் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி ஊடகப்பிரிவில் பணியாற்றிய ஒருவருக்கும் இவ்வாறு வீடொன்று வழங்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்சவின் உறவினர்களுக்கு முறைகேடாக வழங்கப்பட்ட வீடுகளை ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவர்கள் அரசாங்கத்திடம் மீண்டும் கையளித்துவிட்டனர். எனினும் ஜனாதிபதி ஊடகப்பிரிவில் பணியாற்றியவர் தொடர்ந்தும் குறித்த வீட்டில் வசித்து வருகின்றார்.

இவ்வாறான முறைகேடுகள் காரணமாக இந்த வீடமைப்புத் திட்டத்தில் மட்டும் சுமார் 600 இலட்சம் ரூபா இழப்பு அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# சம்பந்தனின் தோளில் தட்டிய மகிந்த



தேசிய அரசாங்கத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதன் போது முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ மாலை 4.55 மணியளவில் சபைக்கு வந்தார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தனது வரவு செலவு திட்டத்தை 2 மணிக்கு ஆரம்பித்து உரையாற்றிக் கொண்டிருக்கையில் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் கழிந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி சபைக்கு சமுகமளித்தார்.

முன்னைய ஆட்சியில் நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே வரவு செலவு திட்டத்தை சபையில் முன்வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமர்ந்திருந்த சபையின முன் வரிசையில் பவித்ரா வன்னியாராச்சி எம்.பி. மட்டும் அமர்ந்திருந்தார். இதன்போது பவித்ரா வன்னியாராச்சி எம்.பி மற்றும் தினேஷ் குணவர்தன எம்.பி.யும் முன்னாள் ஜனாதிபதியிடம் உரையாடினர்.

கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் உரையில் நிதி அமைச்சர் குறிப்பிடுகையில் எதிர்க்கட்சியினர் கேள்விகளை எழுப்பினர். இதன் போது நிதியமைச்சர் உங்கள் ஆட்சியில் செய்யாததை நாம் செய்கிறோம் என்றார்.

முன்னாள் ஜனாதிபதியுடன் அமைச்சர்களான ஜோன் அமரதுங்கவும், லக்ஷ்மன் கிரியெல்லவும் முன்வரிசையில் இருந்தவாறு புன்னகைத்துக் கொண்டிருந்தார்கள். முன்னாள் ஜனாதிபதியும் கையை அசைத்து எதையோ தெரிவித்தார்.

மாலை 5.25 மணியளவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபையை விட்டு வெளியேறினார். இவ்வாறு வெளியேறும் போது தனது அருகாமை ஆசனத்தில் அமர்ந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தோளில் இலேசாகத் தட்டிவிட்டு வெளியேறினார். இதன் போது எதிர்த்தரப்பில் சிலர் எழுந்து நின்று முன்னாள் ஜனாதிபதிக்கு கௌரவம் செலுத்தினர். (இ-7)

# தமிழ்க்கைதிகளை அரசு ஒரு போதும் விடுவிக்கவே கூடாது

## அமைச்சர் சம்பிக்க எதிர்ப்பு

(கொழும்பு)

**குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட விடுதலைப்புலி கைதிகளை யார் விடுவித்தாலும் அது பாரிய குற்றமாகும். எக்காரணத்தை கொண்டும் தமிழ்க் கைதிகளை அரசாங்கம் விடுவிக்கக் கூடாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். புலிகளுக்காக ஆதரவுக் குரல் எழுப்பும் தமிழ் தலைமைகள் ஏன் கே.பி, ருத்ரகுமாரன், பிள்ளையான், கருணா விடயத்தில் அமைதி காக்கின்றனர் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.**

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழர் அரசியல் தரப்பினர் அதிக அக்கறை காட்டிவரும் நிலையில் அது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யுத்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் நேரடியான தொடர்புகளை வைத்திருந்த அதேபோல் புலிகளின் ஆயுத போராட்டத்திற்கு ஆதரவாக செயற்பட்ட பலரை முன்னைய அரசாங்கம் கைது செய்தது. அதேபோல் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத குழுவில் போராடிய பல்லாயிரக்கணக்கிலான உறுப்பினர்கள் கடந்த காலத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகளின் மூலம் விடுதலையும் செய்யப்பட்டுள்ளனர். அதே சந்தர்ப்பத்தில் புலிகளின் நேரடி தொடர்பில் இருந்த சிலரே இன்றும் தடுப்புக்காவலில் உள்ளனர். இவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அவ்வாறான நிலையல் ஏதேனும் காரணங்களை காட்டி அவர்களை விடுவிக்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுப்புக்காவலில் உள்ள தமிழ்க் கைதிகளை நான் சுட்டிக் காட்டவில்லை. குற்றம் இல்லாத அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை. யுத்தத்தின் போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ்க் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை நானும வரவேற்கின்றேன். ஆனால் அப்பாவி தமிழ்க் கைதிகள் என்ற பெயரில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அனைத்து தமிழ்க் கைதிகளையும் விடுவிக்க முயற்சிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இந்த விடயத்தில் புலிகள் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள, நீதிமன்றத்தின் மூலம் நிரூபக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கையை யார் மேற்கொண்டாலும் அது தவறான விடயமாகும். புலிகளை விடுவிக்கும் நடவடிக்கைகளை எந்த அரசாங்கம் மேற்கொண்டாலும் அது பாரதூரமான குற்றமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)

# வாரம் ஒரு தகவல்

## வாழ்க்கை

ஆனால் அந்தச் சம்பிரதாயங்களெல்லாம் இன்றைக்கு அர்த்தம் குலையாமல் தங்கள் உண்மைத் தார்ப்பர்யம் மாறாமல் இருக்கின்றனவா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே இக்கால நடைமுறைக்கேற்ற விஞ்ஞான ரீதியான சில மாற்றங்களை ஏற்றுக் கொண்டு மற்றவற்றை புறக்கணிப்பதில் தவறில்லை. எல்லாவற்றையும் இகழ்ந்துரைத்து இடர்படவும் கூடாது. அனைத்தையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு சுய அறிவை இழந்து விடவும் கூடாது. இதுவே என் வேண்டுகோள்.

எதையும் அனுபவித்துச் செய்யும் போது அதில் அழகுணர்ச்சிமிளிருகிறது. அழகுணர்ச்சியே கலை. நீங்கள் செய்யும் எல்லாச் செயல்களும் முருகியல் உணர்ச்சியுடன்– அழகியல் உணர்ச்சியுடன் செய்யப்பட்டால் வாழ்க்கை முழுவதும் கலையாகி விடுகிறது. அது தான் வாழும் கலை!

உலகம்தோன்றியநாள்முதல் இன்றையநாள்வரை எத்தனையோ ஞானிகள் தீர்க்கதரிசிகள் சிந்தனாவாதிகள், தத்துவ மேதைகள் தோன்றிருக்கின்றனர்.

அவர்களின் சிந்தனையெல்லாம் சேர்த்துப் பார்க்கும் போது அவர்கள் எல்லோரும் வாழ்க்கையைப் பற்றிய வரையறையாக வெவ்வேறு விதமாகக் கூறியிருப்பதைக் அறியலாம். ஒவ்வொருவர் கண்ணோட்டமும் ஒவ்வொரு மாதிரி அமைந்திருப்பதை உணரலாம். சில சித்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று மாபெரும் முரண்பாடுடையனவாய் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடிவது வாழ்க்கை அல்ல: வாழ்க்கை பற்றிய ஒரு வரையறை வகுத்து விட முடியாது என்பதைத்தான்.

# சீனா இதுவரை 10 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது

## சீனத் தூதுவர் சுட்டிக்காட்டு

இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா இதுவரைக்கும் 10 பில்லியன் டொலர்களை பங்களித்துள்ளது என்று சீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தின் மத்திய பிரதேசத்தில் இலங்கை அமைந்துள்ளது. எனவே முதலீடுகளுக்கு முக்கிய இடமாக இலங்கை கருதப்படுகிறது. இலங்கை காரணமாக ஏனைய நாடுகளும் நன்மைகளை பெறுகின்றன.

இந்தநிலையில் இலங்கை சீன–உறவு அவசியமாகிறது என்று சீன தூதுவர் ஜி சியாங்லியாங் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல் முதலீட்டாளர்கள் என்ற இடத்தை சீனா பிடித்திருந்தது.

இதன்போது சீனா, இலங்கையில் 24 திட்டங்களில் 239மில்லியன் டொலர்களை முதலீடு செய்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# வெள்ளநீர் பள்ளத்தில் விழுந்து ஒரு வயதுக் குழந்தை மரணம்

மட்டக்களப்பு, ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள களுவன்கேணியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒரு வயதுக் குழந்தை சமீ த்தில் பெய்த வெள்ள நீர் நிரம்பியிருந்த பள்ளத்தினுள் விழுந்து மரணமடைந்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் களுவன்கேணியைச் சேர்ந்த கங்காதரன் கடாலினி என்ற குழந்தையே மரணித்துள்ளது.

குழந்தையின் தாய் வீட்டில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த போது குழந்தை வீட்டின் பின்புறமாக நகர்ந்து சென்று இந்த நீர் நிரம்பிய பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

சற்று நேரத்தில் தாய் குழந்தையைத் தேடிச் சென்ற போது குழந்தை நீரில் மூழ்கிக் கிடந்துள்ளது.

தாய் குழந்தையை மீட்டு உடனடியாக செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்குக் எடுத்து வந்தபோதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டிருந்ததாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# அ' புரம் சிறையிலிருந்து கைதி தப்பியோட்டம்

அநுராதபுரம் திறந்தவெளி சிறைச்சாலையில் இருந்து கைதியொருவர் தப்பியோடியுள்ளார்.

மதுபானம் தொடர்பிலான குற்றச்சாட்டு தொடர்பில் குறித்த நபர் சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாக அநுராதபுரம் சிறைச்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேசத்தை சேர்ந்த நபர்ஒருவரே சிறைச்சாலையில்இருந்து தப்பியோடியுள்ளதாக குறித்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2015-16.12.2015 வரை



**கணக்குத் தவறாமல் காய் நகர்த்திப் பார்த்துக் காரிய வெற்றி காணும் துலாம் ராசி நேயர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசி நாதன் சுக்ரன் மாதத் தொடக்கத்திலேயே நீச்சம் பெற்றிருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். ஆதாயம் எந்தச் செயலிலும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் குறைவாகவே கிடைக்கும்.

திடீர் இடமாற்றம் உருவாகலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அனுசரிப்பு இல்லாததால் தூரத்தில் உள்ள ஊர்களுக்கு துணிந்து மாறுதல் செய்யமுன்வருவர். இத்தனைக்கும் மத்தியில் நீங்கள் எதையும் பெரிதுபடுத்த மாட்டீர்கள். வருவது வரட்டும் எதிர்கொள்ளலாம் என்று இருப்பீர்கள். காரணம் 'துலாத் தோன் எவ்விடத்திலும் துவளான்' என்பது பழமொழி. எனவே துவண்டு போகாத மனம் உங்களுக்கு உண்டு. மற்றராசிக்காரர்களாக இருந்தால் மனப்பயத்தாலே முடங்கிப்போய் விடுவர். ஆனால் உங்களைப் பொறுத்த வரை பயந்த சுபாவத்தைப் போல் தோற்றமளித்தாலும் நயந்து பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

விரயஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் முற்றுகையிடுகின்றன. அவற்றில் ஒன்று தனாதிபதி செவ்வாய், மற்றொன்று ராகு, மூன்றாவது உங்கள் ராசிநாதன் சுக்ரன். விரயஸ்தானம் பலம் பெற்றிருக்கும் பொழுது, சுபவிரயங்களை நீங்கள் அதிகமாகச் செய்வதன் மூலம் வீண்விரயங்களிலிருந்து விடுபட இயலும். சுப விரயங்கள் என்றால் என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

வீடு கட்டும் முயற்சி, கட்டிய வீட்டைப்பழுது பார்க்கும் நிலை, குழந்தைகளின் கல்யாணக்கனவுகளை நனவாக்கும் அமைப்பு, திருமணத்திற்கான சீர்வரிசைப் பொருட்களை வாங்குவது, அணிந்து மகிழ நல்ல ஆடை, ஆபரணங்கள் வாங்குவது, நடந்து செல்லாமல் வாகனத்தில் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வது போன்ற வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது சுபவிரயங்களாக கருதப்படும். தனஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் தேவைக்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும்.

முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் கவலை களில் இருந்து விடுபட வாய்ப்பு உருவாகும்.

### ராசி நாதன் ராசியில் சஞ்சரிக்கும் நேரம்!

ராசி நாதன் சுக்ரன் நவம்பர் 30 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இது உன்னதமான நேரமாகும். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பும், இழந்த பதவிகளைப் பெறும் வாய்ப்பும் இக்காலத்தில் உருவாகும். கலைந்த மேகமாக இருந்த நீங்கள் கரு மேகமாகி மழை பொழிந்து உதவுவது போல, இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெற்று எல்லோருக்கும் உதவிசெய்ய முன்வருவீர்கள். பரந்தமனம் படைத்த உங்களுக்கு பக்கத்தில் உள்ள உறவினர்கள் பகையாகாமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்படுவீர்கள். காரணம் ஏழரைச்சனி இன்னும் இருக்கிறது.




## விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் நேரம்

### பொன்னான புதனின் பெயர்ச்சி!

புதன் உங்கள் ராசிக்கு 9, 12 இற்கு அதிபதியானவர். அவர் டிசெம்பர் முதல் திகதி சகாயஸ் தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். எனவே தூரதேசப் பயணங்களால் நன்மை கிடைக்கும்.

தொழில் முயற்சியில் பிற இனத்தாரின் பங்கு அதிகரிக்கும். தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும். விற்ற பூர்வீக சொத்துக்களுக்கு இணையாக புதிய சொத்துக்கள் வாங்க முன்வருவீர்கள். அலைபேசி வழித்தகவல் ஆனந்தமளிக்கும். பாதியில் நின்ற பணிகள் யாவும் இப்பொழுது முடிவடையும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். புதிய வாகனசேர்க்கை உண்டு. தொழிலில் புதிய முதலீடுகள் செய்யபுதிய கூட்டாளிகள வந்திணைவர். இம்மாதம் ஆனைமுகப்பெருமான் வழிபாடு ஆனந்தமளிக்கும். ஏழரைச் சனிக்கு பரிகாரமாக சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் பணம் வந்த மறு நிமிடமே செலவாகிறதே என்று கவலைப்படுவீர்கள். எப்படிக் கொடுத்தாலும் உங்கள்கைகளில் பணம் புரண்டு கொண்டேயிருக்கும்.

கணவன்- மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி நலன கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். தாய் வழி ஆதரவு பெருகும். பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகைவந்து சேரும். நிகழ்காலத் தேவைகள் இம் மாதத்தில் பூர்த்தியாகும்.

அருகில் இருக்கும் சிவாலயத்திற்குச் சென்று அனுமனை சனிக்கிழமை தோறும் வழிபட்டு வாருங்கள். இனிக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சினம் கொண்டவரைப் போல காட்சியளித்தாலும் குணத்தில் தங்கம் என்று பெயர்பெற்ற விருச்சிக ராசி நேயர்களே!**

கார்த்திகை மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே புதனும், சூரியனும் உங்கள் ராசியில் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். புதன் ஆதித்யயோகம் என்னும் பொன்னான யோகத்தோடுதொடங்கும் மாதம் இது என்பதால் பொருளாதார நிலை உயரும், புகழ்கூடும், ஆடை, ஆபரணங்களையும் வாங்குவதில் ஆர்வம்காட்டுவீர்கள். நிதி நிலை உயரும் மாதமாக இம் மாதம் விளங்குவதால் நிகழ்காலத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும்.

உங்கள் ராசிக்கு தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் சூரியன், உங்கள் ராசிக்கு லாபாதிபதியாக விளங்குபவர் புதன். தொழில் மற்றும் இலாபத்திற்கு அதிபதியான இருவரும் ஒரு சேர இணையும் இதுபோன்ற காலங்கள் பொற்காலங்களாக அமையும். அசோகர் காலம்பொற்காலம் என்று சமூகவியலில் படித்திருப்பீர்கள். அதே போல புதன் ஆதித்யயோகம் செயற்படும் காலமும் ஒரு பொற்காலம் தான் என்பதை நீங்கள் அனுபவததில் அறிந்து கொள்ளலாம்.

ஜென்மச் சனி வலிமை இழந்திருப்பதால் மண், பூமி சேர்க்கை ஏற்படும். பொன், பொருள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புகழேணியின் உச்சிக்கு செல்லும் வாய்ப்பு கைகூடிவரும்.

இல்லத்தில் மங்கள நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும்.

ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். வெள்ளி தோறும் விநாயகப்பெருமான் வழிபாடும் செவ்வாய் தோறும் செந்தில் வேலன் வழிபாட்டையும் முறையாக செய்தால் குறையாத செல்வம்சேரும்.

குடுமபத்தில் அமைதி கூடும். மாதத் தொடக்கத்தில் வரும் சூரசம்ஹாரத்தன்றும், கார்த்திகையன்றும், கந்தப்பெருமானை வழிபாடு செய்யுங்கள். சங்காபிஷேகத்தன்று சிவனையும், உமையவளையும் வழிபட்டு செல்வ நிலையை உயர்த்திக் கொள்ளுங்கள்.

### சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!

உங்கள் ராசிக்கு 7, 12இற்கு அதிபதியானசுக்ரன்நவம்பர் 30 ஆம் திகதி துலாம் ராசியில் சஞ்சரிக்கப் போகிறார்.

எனவே பயணங்களால பலன் கிடைக்கும். தூர தேசத்திலிருந்து வரும் தொலைபேசிவழித்தகவல் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். நீண்ட நாட்களாக நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். ஆன்றோர்களின் ஒத்துழைப்பும், அருகிலிருக்கும் குடும்பப்பெரியவர் களின் ஒத்துழைப்பும், தாய், தந்தையரின் ஒத்துழைப்பும், சகோதரர்களின் ஒத்துழைப்பும் ஆழ்ந்து பேசிப்பழகும் அன்பு நண்பர்களின் ஒத்துழைப்பும் கூடுதலாகக் கிடைக்கும் நேரமிது.




## சாதனை நிகழ்த்த வைக்கும் ஆதித்ய யோகம்

### புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வைக்கும் புதனின் பெயர்ச்சி!

8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். வெற்றி இனி உங்கள் பக்கமாக வரப் போகின்றது. வீட்டில் உள்ளவர்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வீர்கள்.

பொதுவாக லாபாதிபதி 2 இல் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் லாபம் கிடைக கும். வங்கி சேமிப்பு வரலாறு காணாத அளவு உயரும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சிக்குரிய தகவல் வந்து சேரும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வீடுவாங்கும் ஆசை நிறைவேறும. இம்மாதம ஆனைமுகப்பெருமானையும், ஆறுமுகப்பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது. அதற்கு உகந்த நாள் செவ்வாய் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் உங்களுக்கொரு இனிய மாதமாகும். பாசம் மிக்கவர்களின் நேசம்கூடும். ஆசைப்பட்ட பொருட்களை எல்லாம் வாங்கி மகிழ்வீர்கள். ஆதித்ய யோகம் இருப்பதால் படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். கணவன், மனைவிக்குள் அன்பும், அன்னியோன்யமும் பெருகும். வீடுகட்டும முயற்சியில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கலாம். ஆரோக்கியத் தொல்லை அகலும். சகோதர வர்க்கத்தினர் உங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பர். ஆனைமுகப்பெருமான் வழிபாடும, ஆறுமுகப்பெருமான் வழிபாடும்ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

# விவசாயிகளுக்கு நெல்லினங்கள் விநியோகம்

## முல்லை.,வவுனியா ஆகிய மாவட்டங்களின் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்த நிலையில் விவசாயிகள் மீளவும் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு உதவும் பொருட்டு ஜனாதிபதி செயலகத்தினால் பாரம்பரிய நெல்லினங்களை அழிவில் இருந்து பாதுகாக்கும் திட்டத்தின் ஊடாக விவசாயி களுக்கு இலவசமாக நெல்லினங்கள் விநியோகிக்கப்படும் என முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் அறிவித்துள்ளார்.**

இதற்கமைய சீனட்டி,பச்சைப் பெருமாள்,மொட்டைக்கறுப்பன் ஆகிய நெல்லினங்கள் ஏக்கருக்கு 30 கிலோ வீதம் வழங்கப்படுவதாகவும இதனைப்பெற விரும்பும் விவசாயிகள் தமக்கு அருகாமையில் உள்ள கமநல சேவை நிலையங்களுடன் தாமதமின்றி தொடர்பு கொள்ளுமாறு முல்லைத்தீவு, வவுன்யா ஆகிய மாவட்டங்களின் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அண்மையில் பெய்த மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலகங்களிலும் சுமார் 15 ஆயிரத்து 500 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதனால் பல விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலையில் உள்ளதால், அவர்களை பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இதன் ஒரு அங்கமாக ஜனாதிபதி செயலகத்தினால் பாரம்பரிய நெல்லினங்களை அழிவிலிருந்து பாதுகாக்கும் திட்டத்தின் ஊடாக இயற்கை பசளைகள், இயற்கை கிருமிநாசினி என்பவற்றை பயன்படுத்தி நெல் விதைப்பை மேற்கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு விதை நெல்லினங்களையும் கிருமிநாசினிகளையும் இலவசமாக வழங்கி வருகிறோம்.

இத்திட்டத்தின் ஊடாக நெற்பயிரழிவை சந்தித்த விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 30 கிலோ வீதம 10 ஏக்கர் வரை நெல் விதைப்பை மேற்கொள்வதற்கு 300 கிலோ விதை நெல்லையும் இலவசமாக இயற்கை கிருமிநாசினிகள் ஏக்கருக்கு ஒரு லீற்றர் வீதம் 10 ஏக்கருக்கும் 10 லீற்றர் வழங்கப்படும்.

அறுவடையின் பின்னர் எவ்வளவு கிலோ நெல் அறுவடையானாலும் அவை அனைத்தையும் கிலோ 60 ரூபா வீதம் கொள்வனவு செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## திறப்பு விழா

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் முகமாலை உபஅலுவலக இலவச ஆயுள்வேத வைத்திய சாலை நாளை திங்கட்கிழமை பி.ப.4மணிக்கு வடக்கு மாகாண சபை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செயலாளர் மா.மகாதேவன தலைமையில் நடைபெறும் இந நிகழ்வில் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளதுடன் தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்படவுள்ளது. மாணவர்களது நடன நிகழ்வும் இடம்பெறும். (2-29)






(மல்லாவி)

கிளிநொச்சி பொது நூலகத்திற்கு முன்பாக பாரியளவில் பார்த்தீனிய செடியின் பரம்பல் காணப்படுவதாகவும் இதனை அழிப்பதற்கு எவரும் முன்வரவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த பகுதி கரைச்சி பிரதேச சபையின் பொறுப்பின் கீழ் உள்ளதால் அதனை அழிக்க ஏன் காலம் தாழ்த்துவதாக பொது மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே பொது நூலகத்திற்கு செல்லும் பகுதியில் இவ்வாறு பற்றையாக வளர்ந்து காணப்படும் பார்த்தீனியச் செடிகளை விரைவாக அழிக்க கரைச்சி பிரதேசசபையினர் முன்வரவேண்டும்என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

விவசாயத்தின் எதிரி எனக் கூறப்படும் பார்த்தீனியச்செடிகளை அழிப்பதே சாலச்சிறந்தது. (2-15)

## முல்லைத்தீவில் நடமாடும் சேவை டிசெம்பர் முதலாம்,இரண்டாம் திகதிகளில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட பொதுமக்களில் இதுவரை காலமும் தேசிய ஆள் அடையாளஅட்டைகளைப் பெறாதவர்களுக்காக நடமாடும் சேவையொன்று எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப் படவுள்ளதாகமுல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் முதலாம் திகதி கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு , ஒட்டுசுட்டான், வெலிஓயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலும்,

மறுநாள் 2 ஆம் திகதி துணுக்காய் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு துணுக்காய் பிரதேச செயலகத்திலும் வைத்து நடத்தப்படவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், முத்திரைச்செலவு, தபால் செலவு, புகைப் படச்செலவு போன்றவை அரச செலவிலேயே மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி தேவையுடையோர் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

## தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(வவுனியா)

இலங்கை திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைத தொழிற்பயிற்சி அதிகார சபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்தினால் 2016 ஆம் ஆண்டின்முதலாம் பிரிவிற்கான தொழிற்கற்கை நெறிகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிலுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள். கோரப்படுகின்றன என உதவிப் பணிப்பாளர் பண்டார மற்றும் நிகழ்ச்சித் திட்டமிடல் அலுவலர் கோரியுள்ளனர்.

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் NVQ (தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்) மட்டத்திலான புதிய தொழிற்பயிற்சி கற்கை நெறிகளின் முதலாம் பிரிவுகள் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. தகைமைக்கேற்ப தொழிற் பயிற்சியுடன் கூடிய விரும்பிய தொழிலை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் 6 மாத கால கற்கை நெறி, முடிவின் பின்னர் மேலதிக பயிற்சியுடன் இணைக்கப்படுவதுடன் தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளா குளிரூட்டலும் வளி சீராக்கலும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தோற்பொருள் உற்பத்தியாளர், மின்னியலாளர், காய்ச்சி இணைப்பவர், அழகுக்கலையும் சிகை அலங்காரமும், தையல், அலுமினியம் பொருத்துநர், தச்சு வேலை மற்றும் கணனி பட வரைஞர் போன்றவற்றுக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு, இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, இல.108, புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அல்லது 024-2221617, 071-1213357 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கூடாக தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (2)

## வீதியில் குவிக்கப்பட்டுள்ள கிரவல்மண் பரவப்படவில்லை போக்குவரத்துக்கு இடையூறு



கிளிநொச்சி திருநகர் ஜெயந்தி நகர் ஊடான பிரதானவீதிக்கான திருத்தப்பணி கரைச்சி பிரதேச சபையினரால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்டன.

குறித்த வீதித் திருத்த வேலைக்கென ஜெயந்திநகரில் உள்ள வீதியை முழுமையாக மூடி கிரவல் மண் பறிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது.

உருத்திரபுரத்தில் இருந்து ஜெயந்தி நகரிற்கு திரும்பும் பிரதான வீதியின் இருமருங்கும் சீமெந்தினால் கட்டப்படும் வேலைகள் நடைபெற்று வருகின்றது.

இவ்விடத்தைத் தவிர்த்து ஏனைய இடங்களில் பறிக்கப்பட்ட கிரவலை இதுவரை பரவிச் செப்பனிடும் வேலை நடைபெறாமையால் இவ்வீதியை பயன்படுத்தும் பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் குறிப்பாக கிளி/இந்து மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் மாணவர்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தற்போதைய மழைவெள்ளம் காரணமாக அநேகர் இந்த வீதியை பயன்படுத்தவேண்டியுள்ளது. எனவே வீதியில் போடப்பட்டுள்ள கிரவலை வீதிக்குப் பரவி மாணவர்களினதும் பொதுமக்களினதும் நலனுக்கு ஏற்ற வகையில் கரைச்சி பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது. (2-254)


## இலவச சட்டக் கருத்தரங்கு

வவுனியா பிரதேச செயலகம், வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள், தமிழ் விருட்சகம் ஆகியன இணைந்து நடத்தும் இலவச சட்டக் கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நடைபெறும்.

கருத்துரைகளை பெண்கள் உரிமையும் சட்டமும் எனும் தலைப்பில் சட்டத்தரணி செல்வி சர்மிளா அபூபக்கர், பிள்ளைகள் உரிமையும்-சமுதாய பொறுப்பும், பெற்றோர்கள் கடமையும் எனும் தலைப்பில் சட்டத்தரணி திருமதி குணவதி, இடப்பெயர்வும் காணி பிணக்குகளும் எனும் தலைப்பில் சட்டத்தரணி திருமதி ஆர்த்தி கிருஸ்ணநந்தன், இலவச சட்ட உதவியும் பொதுமக்களும் எனும் தலைப்பில் சட்டத்தரணி செல்வி தர்சினி அண்ணாத்துரை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் பொது அமைப்புக்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோர் கருத்துக்களை வழங்கவுள்ளனர். (2-29)

# பட்ஜெட் முன்மொழிவுகள்




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசின் முதலாவது வரவு செலவுத்திட்டம் நிதியமைச்சர் ரவிகரு நாயக்கவினால் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் வருமாறு,

நான் முன்மொழிகின்றேன்.

ஒட்டுசுட்டானில் வாழ்வாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக சிவப்புக் களி தொழிற் சாலையொன்றினை தனியார் அரசாங்க பங்குபற்றுதலுடன் ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

எமது நாட்டின் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் முக்கியத்துவமானது, அவ்வியா பாரங்களானது வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் போதும், வருமான விநியோகத்தின் போதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் போன்றன



## வடக்கு கிழக்கு அபிவிருத்தி

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் துயரங்கள் தொடர்பில் எமது அரசாங்கம் மிகவும் கரிசனை கொண்டுள்ளது. கடந்த பல வருடங்களாக அவர்கள் தமது அடிப்படைத் தேவைகளை முன்னேற்றித் தருமாறு கேட்டுவருகின்றனர். அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்காக குறிப்பிடத்தக்க நிதியினை ஒதுக்கீடு செய்துள்ள அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கில் புனரமைப்பு பணிகளுக் காக இருதரப்பு மற்றும் பல்தரப்பு முகவர்களிடமிருந்து ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்காக 2016 இல்

வற்றின் போதும் பிரதேச அபிவிருத்தியின் போதும், சமூக ஒன்றிணைப்பின் போதும் பெரும் பங்காற்றுகின்றது.

இன்று நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை எமது பொருளாதார உபாயங்களில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன.

பொருளாதாரத்தில் பெரும் பங்கைக் கொண்டுள்ள பிரதான துறைகளாக மரத் தளபாடங்கள், தகவல் தொழில்நுட்பம், பால் சாரந்த உற்பத்திப் பொருட்கள், வீட்டுத் தோட்டம், உணவுக் கைத்தொழில், காய்கறிகள், பழங்கள், நன்னீர் மீன் வளர்ப்பு, அழகுக் கலை, அலங்கார மீன் வளர்ப்பு போன்ற இன்னோரன்ன துறை களே விளங்குகின்றன.

நுண், சிறிய, மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் வளர்ச்சியின் போது பங்காளர்களாவதற்கு கவனம் செலுத்துகின்றது.

எனவே, ஏற்கனவே எம் மால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் ஒட்டுமொத் தப் பிரச்சினைகளையும் உள்ளடக்கக் கூடிய வகையில் அவை தொடர்பான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் நுண் நிதி வர்த்தகத் தினை நிர்வகிப்பதற்காக, இப்பாராளுமன்றத்தில் சட்ட மூலம் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு, இத்துறையினை ஒழுங்கு முறைப் படுத்துவதற்கு அவசியமான ஒழுங்கு முறை அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்படும். அதே போல சகல நுண் நிதி நிறுவனாங்களும் இவ்வதிகார சபையின் கீழ் ஒரு அலகுக்கு ரூபா 25,000 வீதம் வருடாந்தக் கட்டணத்துக்குப் பதிவு செய்ய வேண்டுமெனப் பிரேரிக்கின்றேன்.

கௌரவ பிரதமர் அவர்களால் 2015 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி முன் வைக்கப்பட்ட கொள்கைக் கூற்றில் காட்டப்பட்டவாறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரப் பிரிவினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனைக் குழுவொன்று ஸ்தாபிக்கப்படும்.

அதே போல, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரப் பிரிவின் எதிர்கால நடவடிக்கைகள் அவர்களின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

இத்துறையில் காணப்படும் உயர்வான நிர்வாகச் செலவு மற்றும் இடர் காரணமாக நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான தொழில முயற்சியாளர்களுக்கு தற்போது உள்ள வங்கிகள் உள்ளடங்கலாக நிதி நிறுவனங்களினால் கடன் வழங்கும் போது அதிக விருப்பக் குறைவு காட்டப்படுகின்றது.

அதேபோன்று தற்போது காணப் தொகையொன்றை தெரிவு செய்யப் பட்ட நித்தி நிறுவனங்களின் உதவியுடன் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடன பாதுகாப்பு நிகழ்ச் சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு முன் மொழிகின்றேன்.

இப்பிரேரணைத் திட்டத்தின் கீழ் கடனைச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அடிப்படைக் கடன் தொகையில் 75 சதவீதமான கடனுக்கு உத்தரவாதமளிக்கப்படும். இதன மூலம் இத்துறையல் தொழில் முயறசியாளர்களுக்கு ஒப்பீட்டளவில் மலிவான நீண்ட கால நிபந்தனைகளின் கீழ் பதில் நிதி நிறுவனத்திற்குப் பிரவேசிப்பதற்கான வசதிகள் விரிவாக்கப்படும்.

இது தொடர்பாக இத்துறைக்கு சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தின் கீழ் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்த உதவி வழங்குவ தற்கு ஐக்கிய அமெ ரிக்க டொலர் 100 மில்லியன் கடன் வரிசையொன்று ஆசிய அபிவி ருத்தி வங்கியினால் பெற்றுக் கொள்வதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் சிறிய மற்றும் நடுததர அளவிலான தொழில் முயற்சிக்கு உதவுவதற்காக நடைமுறைப்படுத்தப்படும்

யீட்டினைக் குறிப்பிடலாம்.

ஆயினும், வியாபாரமானது மிக விஷேடமான அபிப்பிராயங்களுடன் ஆரம்பிக்கப்படுவதனால், பிணையாக வைக்கக் கூடிய அளவுக்கு தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் அவர்களிடமில்லை.

எனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான பங்குரிமை நிதியீட்டு வசதிகளை வழங்குவதற்காக வங்கிப் பாதுகாப்புக் கம்பனி,

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் தொடர்பில் அரசு மிகவும் கரிசனை கொண்டுள்ளது

அபிவிருத்திப் பங்காளரகளின் மாநாடொன்றினை நடத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர் களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோம். எனவே உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர் களை மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக நாம் எடுப்பதுடன் ஏற்கனவே மீள் குடியேறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளையும் அடிப்படைத் தேவைகளையும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக முறையான துப்புரவேற்பாட்டு வசதிகள், சுத்தமான குடிநீர் மற்றும் மின்சாரம் என்பவற்றுடன் மன்னார் மற்றும் முல்லைதீவு மாவட்டங்களில் 20,000 வீடுகளை நிர்மாணிப் போம். நெடுந்தீவு இறங்குதுறை நிர்மாணம், வேலணை, ஊர்காவற்றுறை பாதை புனரமைப்பு, சிகிச்சை கழிவு முகாமைத்துவ் முறைமையினை தாபித்தல் போன்றன இடம் பெறும். இதற்காக ரூபா 14,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு



தொழில் முயற்சிகளினால் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, இத் தொழில் முயற்சியாளர்கள் மூலதனத்தினையும், கடனையும், பெற்றுக் கொள்ளும் போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளின் காரணமாக இவ்வியாபாரத்தினை விரிவடையச் செய்தலானது, சிரமமான ஒரு விடயமாகவுள்ளது.

எனவே, எமது அரசாங்கம் இத் படும் நிதி நிறுவனாங்கள் பிணையை அடிப்படையாகக் கொண்டு நிதியியல தொடர்பாக அதிக நம்பிக்கை வைப்பதனால் புதிய தொழில் முயற்சியாளர்களும், தற்போது உள்ள தொழில் முயற்சியாளர்களும் இப் பிணையை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, 2016 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூபா 500 மில்லியன் அடிப்படைத் சௌபாக்ய திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்-நிதிக் கருத்திட்டம் ஆகிய கடன் பிரேரணைத் திட்டங்கள் பாரிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வசதியளிப்பொன்றாக அதனுடன் இணைக்கப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு இன்று காணப்படும் பொது வான் ஒரு நிதி முறையாக பிணயை அடிப்படையாகக் கொண்ட படு கடன் நிதி ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிககை நிதியம் மற்றும் வெளிநாட்டு நிதியை உள்ளடக்கிய "நிதியத்தின் நிதி"யினை ஸ்தாபிப்பதன் ஊடாக வியாபார மூலதனப் பிரவேசத்திற்கு ஆரம்பம் ஒன்றினை வழங்குவதற்கு முன் மொழிகின்றேன்.

இங்கு நான் இதற்கான நிதி உதவியினை வழங்குமாறு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத் திடமும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் வேண்டிக் கொள்கின்றேன்.

அதேபோன்று, தனியார் துறை வியாபாரங்களுக்கும் இந்நிதியத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். இந் நிதியத்தின் ஊடாக பொறுப்பு வாய்ந்த வியாபார மூலதனக் கம்பனிகளுக்கு குறைவான திரும்பலொன்று கிடைக்கக் கூடிய வகையில் கடன் வசதிகள் வழங்கப்படும்.

அதன் பிரகாரம், அவ்வியாபாரக் கம்பனிகளினால் இச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு அவசியமான பங்குரிமை முதலீட்டினை மேற்கொள்ளப்படும்.

(தொடரும்...)

ஒரே ஒரு சட்டம்தான் உண்டு. தன்னை உணர்ந்து கடமை உணர்வுடன் ஒவ்வொருவரும் வாழ்வதே உண்மையான சட்டம். – சத்ய சாயிபாபா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாகாண சபை கூடும் நேரத்தை பயனுறுதி உடையதாக மாற்றுங்கள்

வீதியில் சென்ற இளைஞர்கள் இருவரை மானிப்பாய் பொலிஸார் கண்டபாட்டில் தாக்கிய சம்பவம் பொலிஸாரின் அத்துமீறலைக் காட்டுகிறது. இவ்வாறு தாக்கப்பட்ட இளைஞர்களில் ஒருவர் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவின் மகன் என்று தெரிய வருகிறது.

வீதியில் சென்ற இரண்டு இளைஞர்கள் மீது தமக்குச் சந்தேகம் ஏற்பட்டதால் அவர்கள் இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மிக மோசமாகத் தாக்குவதென்பதற்குள் தமிழ் இளைஞர்கள் என்ற அடிப்படை இருப்பதைக் காண முடியும்.

பொலிஸாரின் அத்துமீறல்கள் பல இடங்களில் நடக்கின்ற போதிலும் எதுவும் செய்ய முடியாது. நடவடிக்கை எடுக்க முற்பட்டால் தொடர்ச்சியான பழிவாங்கலுக்கே ஆளாக வேண்டி வரும் என்ற நிலைமை காரணமாக பேசாதிருக்கின்ற சம்பவங்களே நடந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னர் பாராளுமன்றத்தில் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான தவராசாவின் மகனுக்கு இங்ஙனம் நடக்கிறது எனில் சாதாரண மக்களின் நிலைமை என்ன? என்பதை ஒரு கணம் நாம் சிந்தித்தாக வேண்டும்.

செய்திகள் வெளிவரவில்லை என்பதற்காக எதுவும் நடக்கவில்லை என்று யாரும் நினைத்து விடக்கூடாது. அதிலும் குறிப்பாக வீதிப்போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்ற பொலிஸாரில் சிலர் பொதுமக்களை கடுமையாக அவகௌரவப்படுத்துகின்ற சம்பவங்கள் நிறையவே நடக்கின்றன.

இத்தகைய நிகழ்வுகளுக்கு பின்னணியாக இன விவகாரம்தான் இருக்கிறது என்று எண்ணத் தோன்றும். எதுவாயினும் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் மாகாண சபையின் நேரத்தில் மக்களுக்கு பயனுறுதி மிக்க விடயங்களை எடுத்துக் கொண்டு பேசுவது நல்லது.

எதிர்க்கட்சித் தலைவரிடம் சிறந்த ஆளுமை இருப்பது வெளிப்படையானது. அதற்காக முதலமைச்சரை எதிர்க்கின்ற ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டு முதலமைச்சரிடம் கேள்வி கேட்பது என்பது அவ்வளவு நல்லதல்ல. இது முதலமைச்சருக்கு எதிரானவர்கள் உங்களை உசார்ப்படுத்தி முதலமைச்சருக்கு எதிரான செயற்பாட்டை வலுப்படுத்தச் செய்யும் நடவடிக்கையாகும்.

கடந்த மாகாண சபை அமர்வின் போது அமைச்சர்கள், செயலாளர்களின் வாகனங்கள் தொடர்பில் நீங்கள் கேள்வி எழுப்பியிருந்தீர்கள். அந்தக் கேள்வியின் இறுதிப் பயன்பாடு என்ன என்பதை உணர முடியவில்லை.

முதலமைச்சரைக் கொண்டு பதில் அளிக்க வைப்பதை ஒரு வெற்றிச் செயலாகக் கருதிக் கொள்கின்ற அற்பத்தனமான செயல்களை மாகாண சபை உறுப்பினர்கள் செய்தாலும் அத்தகைய நேர விரயங்களை தடுப்பதில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் தாங்கள் பங்காற்ற வேண்டும்.

ஆக, தமிழ் மக்கள் எத்தனையோ துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். தங்கள் மகன் உட்பட இரண்டு இளைஞர்களை மானிப்பாய் பொலிஸார் கடுமையாகத் தாக்கிய சம்பவத்தை பாருங்கள். இது போன்ற ஏகப்பட்ட கொடுமைத் தனங்கள், நிர்வாகத் தாமதங்கள், பழிவாங்கல்கள், பதவி எதேச்சாதிகாரங்கள் நம் மண்ணில் மிகத் தாராளமாக நடக்கின்றன. இதற்கு எதிராகக் குரல் கொடுங்கள். அது பயனுறுதி மிக்கதாக இருக்கும்.

இதை விடுத்து நீங்களும் சபையைக் குழப்புவர்களுடன் சேர்ந்தால், பாவம் தமிழ் மக்கள் என்று சொல்வதைத் தவிர வேறு வழி எதுவும் இருக்காது.

# அரசியல் பிரச்சினையாக மாறும் இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை

## இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சினைகள் அரசியல் ரீதியாக செல்வதாக யாழ்.இந்திய துணைத்தூதுவர் என்.நடராஜ் தெரிவித்துள்ளனர்.

இப் பிரச்சினை அரசியல் ரீதியாக செல்வதனால் இது பற்றி பேசுவதனை தான் தவிர்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக மீனவர் தினம் நேற்றைய தினம் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தூதுவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சினை என்பது நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

உலகில் பிரச்சினை இல்லாத நாடுகளுமில்லை; வீடுகளுமில்லை அந்த வகையில் பிரச்சினை என்பது சகஜமாகும்.

இந்த மீனவர் பிரச்சினை என்பது சிறு பிரச்சினையாகும். இதனை தீர்ப்பதற்கு இரு நாடுகளும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

இலங்கை–இந்திய மீனவர்களிடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். நீங்களும் நம்பிக்கை கொள்ளுங்கள். கடலில் வாழும் மீன்களுக்கு எல்லை கிடையாது. ஆனால் அந்த மீனைப் பிடிக்கும் மனிதர்களுக்கே எல்லைகள் வகுக்கப்பட்டுள்ளன.

சில வேளைகளில் எல்லை தாண்டுபவர்களிற்கு தண்ணீரில் எல்லை தெரியாமல் போகலாம். தரை என்றால் எல்லை தெரிவதற்கு வாய்ப்புண்டு. இழுவைப்படகுகளை பயன்படுத்துவதற்கு இந்திய அரசும் எதிர்ப்பினை தெரிவித்துக் கொண்டுதான் உள்ளது.

தொப்புள்கொடி உறவுகளாகிய நாம் இச் சிறிய பிரச்சினையை பேசித் தீர்ப்போம் என்றார் அவர். (எ-4)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கெறிரேச் றோட்டறிக் கழகமும் சுன்னாகம் அந்தோனியார் இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்தானம் செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-12)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

“ஒவ்வொரு மரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது”

*–வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)*

# நம் பாதங்களைக் கழுவிக் கொண்டு எமதருகிலேயே இருக்கும் அரசரின் வழியை பின்பற்றுவோமா?



இன்று கிறிஸ்து அரசர் பெருவிழா. இன்று நமக்கு தரப்படும் பைபிள் பகுதி கிறிஸ்துவை ஒரு அரசர் என்று நினைவுபடுத்துவதுடன் கிறிஸ்து அரசர் எவ்விதம் மற்ற அரசர்களில் இருந்து மாறுபட்டவர், இந்த அரசருக்கே உரிய முக்கிய பண்பு என்ன என்பதை எமது மனதிற்கு கொண்டு வருகின்றது. கிறிஸ்து, அன்பினால் ஆளும் அரசர், இவர் தன்னை எவரிலும் திணிக்கமாட்டார். மாறாக, மனித சுதந்திரத்தை மதிப்பவர் கிறிஸ்துவின் அரசாட்சி, இவ்வுலகின் ஆட்சியாளர்கள் போன்றதல்ல, மாறாக, அது தீமையையும் மரணத்தையும் தோற்கடிக்கும் வல்லமையைக் கொண்டது.

## பரமபிதா காட்டிய பாதை

கடின மனங்களிலும்கூட நம்பிக்கையை எழுப்புவது. கிறிஸ்துவின் அரசவல்லமை, நித்திய வாழ்வை வழங்கும் இறைசகதி. அது தீமையிலிருந்து விடுதலை தருகிறது, மரணத்தின் ஆட்சியை மேற்கொளளச் செய்கிறது. கிறிஸ்துவைத் தேர்ந்து கொள்வது, இவ்வுலக போக்கின்படி வெற்றக்கு உத்தரவாதம் அல்ல, ஆனால அது, அவர் மட்டுமே தரவல்ல அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் உறுதியளிக்கின்றது.

ஒருமுறை படித்த சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது நல்லது: கலிங்கப் போர் முடிந்தும் அசோகச் சக்கரவர்த்தியின் சேனைகள் வெற்றிப் பெருமிதத்தோடு நாடு திரும்பின. மன்னன் மட்டும் தன் வெற்றியைக் கணிக்க போர்க்களத்தைப் சுற்றிபார்வையிட்டான். நாட்டுக்காக உயிர் துறந்த வீரர்களின் சிதைந்த உடல்கள், அங்கங்களையிழந்து துடிதுடித்த வீரர்கள், ஆறாய் பெருக்கெடுத்து ஓடிய இரத்த வெள்ளம் என காட்சிகள் நீண்டன. இவையாவும் அசோகரின் உள்ளத்தை ஈட்டி முனைகளாக துளைத்தன. கணவனையும், மகனையும் இழந்த தாய்க்குலத்தின் அழுகுரல் போர்க்களத்தையே சாக்காடாக மாற்றியது. வெற்றிவாகை சூடிய மன்னன் தலை குனிந்து நின்றான். எதிரியை வென்று விட்டாய. ஆனால் உன்னையே வெல்லத் தவறிவிட்டாயே என்று அவனுக்குள்ளிருந்தே ஒரு குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. மண் ஆசைக்கு இத்தனை உயிர்கள் பலியாவதா? என்று ஒரு கணம் சிந்தித்த அரசன், இனி போர் புரிவதில்லை என்று முடிவு செய்தான்.

தன்னையே வெல்ல முடியாதவன் பிறர் மீது ஆட்சி செலுத்த முடியாது. தன் அரசு நிலைக்கப் பிறர் உயிரை வாங்குபவன் உண்மைக் காவலனாகவும் இருக்க முடியாது. இன்று கிறிஸ்துவை அரசராகக் கொண்டாடுகிறோமே இது காலத்திற்கு ஏற்றதா? சமுதாயத்தில் சமநிலை ஏற்பட உழைக்கும்போது, வலிமையும், மகிமையும் பொருந்திய அரசராக இயேசுவைக் கொண்டாடுவது முறையா? என்ற கேள்விகள் எம் மனத்தில் எழும் போது இயேசு எப்படிப்பட்ட அரசர்? அவரது அரசாட்சி எதில் அடங்கியுள்ளது? என்று சிந்திக்கவும் கடமைப்பட்டுள்ளோம. இயேசுவின் அரசாட்சி அதிகாரம், படை பலம், பண பலம் இவற்றில் அடங்கியதன்று. இவற்றில் எல்லாம் தன்னையே வென்றவர்தான் இயேசு. அதனால் தான் அப்பத்தை உண்ட மக்கள் அவரை அரசாக்க முயன்றபோது அவரால் அதை உதறித்தள்ள முடிந்தது. இஸ்ராயேலின் அரசை மீட்டுத்தரும் மெசியாவாகத் தம்மை மக்கள் எதிர்பார்த்தும் இயேசு அரசன் என்ற வார்த்தையைத் தமக்குப் பயன்படுத்தவில்லை.


பிலாத்து இயேசுவிடம், அப்படியானால் நீ அரசன்தானோ? என்று கேட்டான். இயேசு, அரசன் என்பது நீர் சொல்லும் வார்த்தை. உண்மையை எடுத்துரைப்பதே என் பணி என்றார். ஆனால் இறைதந்தையின் அரசோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார். இறைதந்தையின் அரசை நிலை நாட்டுவதில் தான் அவரது அரசுத்தன்மை வெளிப்படுத்துகிறது. அவ்வரசை வார்த்தைகளில் போதித்த இயேசு செயல்களில் வடிவம் பெறவும் செய் கிறார். அவரது அரசில் நமக்கும் பங்குவேண்டுமா? அப்படியென்றால் பசியுற்றோர், சிறுமையுற்றோர், நோயுற்றோர், சிறையுற்றோர் இவர்களுடைய துன்பங்களில் நாமும் பங்கு பெற வேண்டும். வசதிகளைக் குறைத்துப் பிறருக்கு உதவ வேண்டும். இதுவே இயேசுவின் அரசில் குடியுரிமைபெற ஒரேநிந்தனை. தம் வாழ்வு சிறக்கப் பிறரைப் பயன்படுத்துவது இயேசுவின் வழியன்று. மாறாக, பிறர்வாழ்வு உயர தம் வாழ்வைச் செலவிடுவதே அவர்காட்டும் வழி.

இயேசுவும் ஓர் அரசை நிறுவியவர். அந்த அரசுக்குச் சொந்தக்காரர். அவர் நிறுவிய அரசுக்கு நிலப்பரபபு கிடையாது. இயேசு கொணர்ந்த அரசுக்கு இறைவனைத்தவிர எதுவுமே தேவையில்லை. இறைவன் ஒருவரே தேவை, அவர் ஒருவரே போதும் என்று சொல்லக்கூடிய மனங்களில் இநத அரசு நிறுவப்படும். அப்படிச் சேர்ந்து வரும் மனங்களில் இறை தந்தையை அரியணை ஏற்றுவதுதான் இயேசுவின் முக்கிய பணி. இயேசுவுக்கு அரியணை இல்லையா? உண்டு. தந்தைக்கும், இயேசுவுக்கும் அரியணைகளா? ஆம். இந்த அரசில் யார் பெரியவர் என்ற கேள்வி இல்லாததால், இந்த அரசில் எல்லாருக்குமே அரியணை, எல்லாருக்குமே மகுடம், எல்லோரும் இங்கு அர்சர்கள். இந்த அரசர்கள் மத்தியில் இயேசு ஓர் உயர்ந்த, நடுநாயகமான அரியணையில் வீற்றிருப்பார் என்று நாம் தேடினால், ஏமாந்துபோவோம். அவர் நம் பாதங்களைக் கழுவிக்கொண்டு இருப்பார். மக்கள் அனைவரையும் அரயணை ஏற்றி, அதன் விளைவாக, அம்மக்களின் மனம் எனும் அரியணையில் அமரும் இயேசு என்ற மன்னரின் அரசுத்தன்மையைக் கொண்டாடத்தான் இந்த கிறிஸ்து அரசர் திருநாள்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரை வென்றது இங்கிலாந்து




நான்காவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 84 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி, நான்கு போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன், தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என தெரிவித்தார். இங்கிலாந்து அணியில் மாற்றம் ஏதும் செய்யப் படாத போதும், பாகிஸ்தான் அணியில், காயத்திலிருந்து மீண்ட யசீர் ஷா, ஸபார் கோகருக்கு பதிலாகவும், அஹமட் ஷஷாத், இஃப்திகார் அகமட்டுக்கு பதிலாகவும் இடம்பெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 355 ஓட்டங்களைக் குவித்தது. முதல் நாற்பது ஓவர்களில் மூன்று விக்கெட்களை இழந்து 226 ஓட்டங்களை பெற்றிருந்த அவ்வணி, இறுதிப் பத்து ஓவர்களில் இரண்டு விக்கெட்களை இழந்து 129 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக, ஜொஸ் பட்லர் 52 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 8, ஆறு ஓட்டங்கள், 10 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 116 ஓட்டங்களையும், சர்வதேசப் போட்டிகளில் தனது கன்னிச் சதத்தை பூர்த்தி செய்த ஜேசன் ரோய் 102 ஓட்டங்களையும, ஜோ ரூட் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதில், தனது 50 ஓட்டங்களை 30 பந்துகளில் பூர்த்தி செய்த பட்லர், அடுத்த 22 பந்துகளில் 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். 46 பந்துகளில் சதத்தை பூர்த்தி செய்த பட்லர், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பெறப்பட்ட ஏழாவது வேகமான சதம் என்ற சாதனையை சமப்படுத்தினார். இந்தச் சதம், இங்கிலாந்து சார்பாக பெறப்பட்ட வேகமான சதம் என்பதோடு, இங்கிலாந்து சார்பாக பெறப்பட்ட இரண்டாவது, மூன்றாவது வேகமான சதங்களையும் பட்லரே கொண்டிருக்கின்றார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக அணித்தலைவர் அஸார் அலி, மொஹமட் இர்பான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்ததோடு, யசீர்ஷா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி துடிப்போடு வெற்றி பெறும் நோக்கில், அதிரடியாக வெற்றியிலக்கை விரட்டிய போதும், தொடர்ச்சியான இடைவேளைகளில் வீழ்த்தப்பட்ட விக்கெட்டுகள் காரணமாக 40.4 ஓவர்களில் 271 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து தோல்வியடைந்தது.


துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக ஷோய்ப் மலிக் 52 ஓட்டங்களையும், பாபர் அஸாம் 51 ஓட்டங்களையும் அஸார் அலி 44 ஓட்டங்களையும் மொஹமட் ஹபீஸ் 37 ஓட்டங்களையும் சஃப்ராஸ் அகமட, அன்வர் அலி தலா 24 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக அதில் ரஷீத், மொயின் அலி தலா மூன்று விக்கெட்டுக்களையும் டேவிட் வில்லி 2 விக்கெட்டுக்களையும் ரீஸ் டொப்லி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் இங்கிலாந்து அணியின் ஜொஸ் பட்லர் தெரிவானார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று இருபது - 20 சர்வதேச போட்டித் தொடர் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (க)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து மும்பையை வென்றது கவுகாத்தி




2 ஆவது இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து (ஐ.எஸ்.எல்.) போட்டி இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணியுடன் தலா இரண்டு முறை மோத வேண்டும். லீக் ஆட்டங்கள் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

அசாம் மாநிலம் கவுகாத்தியில், நார்த் ஈஸ்ட் யுனைடெட், மும்பை அணிகளுக்கு இடையிலான இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.,) காற்பந்து தொடரின் 42 ஆவது லீக் போட்டி நடந்தது. இதன் 41 ஆவது நிமிடத்தில் நார்த் ஈஸ்ட் யுனைடெட்க்கு கிடைத்த "பெனால்டி" வாய்ப்பில் புரூனோ ஹெரேரோ முதல் கோல் அடித்தார். இதற்கு மும்பை அணியினரால் பதிலடி தர முடியவில்லை. முதல் பாதி முடிவில் நார்த் ஈஸ்ட் அணி 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய நார்த் ஈஸ்ட் அணிக்கு 85 ஆவது நிமிடத்தில் கமாரா ஒரு கோல் அடித்தார். சுனில் செத்ரி, நிகோலஸ் அனேல்கா உள்ளிட்ட வீரர்கள் இருந்தும் கடைசி நிமிடம் வரை போராடிய மும்பை அணியால ஒருகோல் கூட அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் வடகிழக்கு அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதுவரை விளையாடிய 11 லீக் போட்டிகளில் 5 வெற்றி, ஒரு சமநிலை 5 தோல்வியை பெற்ற வடக்கு கிழக்கு அணி 16 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்துக்கு முன்னேறியது. ஐந்தாவது தோல்வியை பெற்ற மும்பை அணி 12 புள்ளிகளுடன 6 ஆவது இடத்தில் நீடிக்கிறது. (க)

## எம்.பிக்களுக்கு...

பொருளாதார விவகார ராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகபெரும எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த வருடத்திற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டு நிதி இன்னும கிடைக்கவில்லை எனவும் அழகபெரும குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த ராஜாங்க அமைச்சர், இந்த வருடம் மற்றும் அடுத்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகளை சேர்த்து அடுத்த வருடம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா 15 மில்லியன் ரூபாய் வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## கடவையை...

ளது. கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள ரயில்வே கடவையில் மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியியலாளரும் இரு பிள்ளைகளின் தந்தையுமான வில்வராஜா சுதாகர் (வயது41) என்பவரே உயிரிழந்தவராவார். அத்துடன் எஸ். ஆதவன் (வயது 28), அரவிந்தன் (வயது 28), கம்பதாஸன் (வயது 23) ஆகிய மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சேரி நல்லூர் வீதியில் மோதுண்ட கார் சுமார் 150 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு சோமசுந்தரம் வீதியில் உள்ள கடவையில் வீசப்பட்டுள்ளது. புகையிரத சமிக்ஞையை கவனிக்காமல் சென்றதனாலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகிறது. ஆனால், அங்கு பாதுகாப்புக் கடவை இல்லாததே இதற்கு முக்கிய காரணம் என சுட்டிக் காட்டப்பட்டது.

குறித்த கார் புகையிரத கடவையினை கடக்க முயன்ற போது காரின் நடுப்பகுதியிலேயே புகையிரதம் மோதியுள்ளது. இதன் போது புகையிரதம் மோதிய பக்கத்தில் இருந்தவர்கள் மோசமாக படுகாய மடைந்துள்ளதோடு ஒருவர் உயிரிழந்துள்ளார். மறுபக்கம் இருந்தவர்களான சாரதி மற்றும் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

150 மீற்றர் தூரம் வாகனம் இழுத்து செல்லப்பட்டதனால் வாகனம் முற்று முழுதாக உருக்குலைந்துள்ளதோடு, காரின் சில்லுகள் நான்கும் கழன்றுள்ளன. விபத்தில் படுகாய மடைந்த அனைவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த யாழ்.பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4,9)

## கண்ணிவெடி...

அதுல் கேஷான் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதனை சந்தித்தவேளை இந்த தகவல் பரிமாறப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக ஐக்கிய அமெரிக்கா குடியரசு தொடர்ந்து ஆதரவுகளை வழங்கிய நிலையில் 1993ஆம் ஆண்டு முதல் இதுவரையில் கண்ணிவெடிகள் அகற்றுவதற்காக 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது இலங்கையினுள் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக 1.74 மில்லியன் பணம் வழங்கும் நடவடிக்கைகளும் இதன் போது மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி, மீள் குடியேற்றம் மற்றும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா, இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாக செயற்படுவதாக அதுல் கேஷான் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# மகிந்தவின் அதிகாரத்தை மீண்டும் கொண்டுவர இரகசியத் திட்டம்

(கொழும்பு)

தற்போதைய கூட்டு அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்தி இதன் ஊடாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காக முன்னாள் ஜனாதிபதிக்கு நெருங்கியவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களும் தொடர்புபட்டுள்ளதாக குறித்த தகவல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போதைய அரசாங்கம் சிங்கள பெளத்த மக்களை கண்டுகொள்வதில்லை என்று சமூகத்தில் நம்பிக்கையையேற்படுத்துவதற்காக இனவாத அமைப்புகள் சிலவற்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இதற்காக நல்லாட்சிக்கு எதிராக திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதோடு சில வர்த்தகர்கள் இதற்கு பணம் செலவிடுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கம் சர்வதேசத்துடன் ஏற்படுத்தியுள்ள உறவினை காட்டிகொடுப்பென காட்டுவதற்கும் சிறுபான்மையினருக்கு அதிக சலுகை வழங்குவதாக மக்களுக்கு சுட்டிக்காட்டி நல்லாட்சியை அழிப்பதே குறித்த சிலரின் எதிர்பார்ப்பாகும்.

இதற்காக வடக்கு மாகாணத்துக்கு உட்பட அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை இலக்கு வைத்தே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறுதி நேரத்தில் இந்த திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்காக நல்லாட்சியில் அமைச்சு பதவி பெற்றுக் கொண்டுள்ள சுதந்திர கட்சி முக்கியஸ்தர்கள் சிலரும் நல்லாட்சியில் இருந்து விலகி ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரையில் நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சர்களுக்கு இடையில் காணப்படுகின்ற விமர்சனங்கள் தொடர்பில் மக்களின் அவதானத்தை திருப்பி அரசாங்கத்தின் மீது தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களும் செயற்படுத்தப் படுவதாக இரகசிய தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-11)

## ஜெனிவா தீர்மானம்...

பிட்டுள்ளார்.

இதனிடையே ஜெனிவா யோசனையை செயற்படுத்தும் போது அதன் நடவடிக்கை மற்றும் முன்னேற்றத்தை அவதானிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையில் விசேட அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த உள்ளதாக தெரியவருகிறது.

அதேவேளை ஜெனிவா யோசனை செயற்படுத்தப்படும் விதம் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர பிரதிநிதியான சமந்தா பவர் நேற்று இலங்கை வந்துள்ளார். (எ-11)

## 20 கைதிகளுக்கு...

வழங்கப்பட்டுள்ளன.

எனினும் இரகசியம் காரணமாக குறித்த பெயர் விபரங்களை வெளியிடமுடியவில்லை.

இதேவேளை 20 தமிழ் அரசியல் கைதிகள் வவுனியா பூந்தோட்ட புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டு அங்கு அவர்களுக்கு வாழ்க்கைப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதியை சட்டமா அதிபர் வழங்கியுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளரும் அறிவித்துள்ளார். (எ-11)

## இறுதி யுத்தத்தில்...

ட்ட குற்றச்சாட்டினை முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட நிராகரித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர்,

திருகோணமலையிலோ அல்லது வேறு இடங்களிலோ சித்திரவதைக் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. சித்திரவதைக கூடங்களை நடத்த வேண்டிய அவசியம் எதுவும் இருக்கவில்லை.

மாறாக, தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிளவடைந்த கருணா தலைமையிலான தரப்பினர் படையினருடன் இணைந்து கொண்டனர். அவ்வாறானவர்களே திருகோணமலை முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு அரச படையினரிடம் சரணடைந்த கருணா தலைமையிலான புலிப்போராளிகளை பயன்படுத்தப்படாத கட்டடங்களில் தங்க வைத்திருந்தோம்.

2004ஆம் ஆண்டு புலிகளிடமிருந்து பிளவடைந்த கருணா அம்மான் தலைமையிலான பெருமளவிலான முன்னாள் புலிகள் படையினருடன் இணைந்து போராட்டத்தில் பங்கேற்றனர். இவ்வாறு அரசாங்க படையினர் சார்பில் போராட்டத்தில் ஈடுபட்ட பலர் அம்பாறை மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களாவர். படையினர் சித்திரவதை கூடங்களை அமைத்து எவரையும் சித்திரவதை செய்யவில்லை எனவும் இந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுப்பதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார். (எ-12)

# கரன்னகொடவை கைது செய்ய வேண்டும்

## சுமந்திரன் வலியுறுத்தல்

(கொழும்பு)

திருகோணமலைக் கடற்படைத் தள இரகசிய வதைமுகாம் தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட போன்றவர்களை கைது செய்து விசாரிக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

நாடாளும்மன்றத்தில் நேற்று வரவுசெலவுத்திட்ட இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர்,

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் உள்ள நிலத்தடி சிறைக் கூடங்கள் ஆட்களைத் தடுத்து வைக்கப் பயன்படுத்தப்ப ட்டுள்ளது என்பது, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட வெளியிட்டுள்ள கருத்தின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பிரித்தானியர் காலத்து சிறைக் கூடத்தை சந்தேக நபர்களை தடுத்து வைப்பதற்கு தாம் பயன்படுத்தியதாகவும், ஆனால் அவர்களை சித்திரவதை செய்யவில்லை என்றும் அட்மிரல் கரன்னகொட ஊடகவியலாளரிடம் கூறியிருக்கிறார்.

இந்த வதை முகாம் தொடர்பாக அட்மிரல் வசந்த கரன்னகொட கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்.

அவர் இப்போது சுதந்திரமாகத் திரிகிறார். இது எப்படிச் சாத்தியம்?, அவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் தற்போது எங்கே உள்ளனர்? அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனரா? என்று அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும்.

திருகோணமலை வதை முகாம் போன்ற இரகசியத் தடுப்பு முகாம்கள் பற்றிய தகவல்கள் தெரிய வந்து விடும் என்பதால் தான், முன்னைய அரசாங்கம் ஐ.நா பணிக் குழுவை இலங்கைக்கு அனுமதிக்கவில்லை என்பது இப்போது தெளிவாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார். (எ-11)

## சமந்தா பவர்-மங்கள சமரவீர சந்திப்பு



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு நேற்று இரவு 07 மணியளவில் விருந்துபசாரத்துடன் நடைபெற்றது அதனைப் படத்தில் காணலாம்.

# சந்தேகங்களை நீக்கவே சர்வதேச நீதவான்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

யுத்தக்குற்றம் குறித்த உள்நாட்டு விசாரணையின்போது, தமிழ் மக்களின் சந்தேகங்களை நீக்கவே வெளிநாட்டு நீதவான்களை உள்ளடக்கக் கோருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் போது வெளிநாட்டு நீதவான்களின் பங்களிப்பு அவசியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

எனினும், உள்ளக விசாரணையில், சர்வதேச நீதவான்கள் பங்களிப்புச் செய்வதனை சிங்கள மக்களும் படையினரும் விரும்பவில்லை எனவும், இதன்மூலம் தமக்கு அநீதி இழைக்கப்படும் என அஞ்சுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். யுத்தக் குற்றச்செயல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான நீதிமன்றில் சிங்களவர்கள் மட்டும் விசாரணை நடத்துவதனை தமிழர்கள் விரும்பவில்லை எனவும், அவ்வாறு சிங்களவர்கள் மட்டும் விசாரணை உட்படுத்தப்பட்டால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டு விடுமோ என தமிழ் மக்கள் கருதுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (எ-11)

நடமாடும் மிருகவைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில், மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு
0779738802
0212242502 (2542)
காலை 9-12, நாவலர் றோட், நல்லூர்.

தேவை
உணவகமொன்றுக்கு அனைத்து வேலையும் செய்யக்கூடிய உதவியாளர் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் கொடுக்கப்படும். (2555)
தொடர்பு:- 0771258072

## பவர் இன்று யாழ்...

பவர் இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நேற்றைய தினம் இலங்கை விஜயம் செய்த அவர் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல்வேறு சந்திப்புக்களிலும் ஈடுபடவுள்ளார்.

முன்னதாக காலை ஒன்பது மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் பளிக்காரவை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். பின்பு பத்து மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனை அவரது அலுவலகத்தில் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்புக்களின் போது வடக்கு மக்களின் தற்போதைய நிலை, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

பதினொரு மணியளவில் ஒஸ்மானியா கல்லூரி செல்லும் அவர் அங்கு போரினால் சேதமடைந்து புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடம் ஒன்றினையும் திறந்து வைக்கவுள்ளார். பின்பு இரண்டு மணியளவில் பாரம்பரிய ஓலைச்சுவடிகளினை பாதுகாப்பதற்கான நிதிதொகையினையும் வழங்கி வைக்கவுள்ளார்.

சமந்தா பவரின் யாழ்.விஜயத்தினை முன்னிட்டு அமெரிக்க பாதுகாப்பு பிரிவினரும் யாழ்ப்பாணம வருகை தந்து பாதுகாப்புநடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இதேவேளை நேற்றைய தினம்இலங்கை வருகை தந்த அவர் எதிர்வரும் 23-ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(C-2765)
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1013 மாணவர்கள் French கற்றுள்ளனர்
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் உள்ளது.
181, பிரதான வீதி நெல்லியடி. TP: 021 320 2973
கண்டி வீதி, சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(சி-2764)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் மிகப்பெரிய வலையமைப்பை கொண்ட சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136 நாடுகளில் 1092 கிளைகள்(இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்)எமது தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது. www.ambafrance-lk.org
- ஆசிரியர்கள்: பிரான்ஸிலிருந்து வருகைதரும் நிபுநர்களால் பயிற்றுவிக்கப்படும் சிறந்த ஆற்றலும் அனுபவமுள்ளவர்கள், யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF ஆசிரியர்கள் மட்டுமே சர்வதேச பரீட்சைகளை நடத்துகிறார்கள்.
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகிறது. இச்சான்றிதழ்களை எந்தவொரு நாட்டிலும் சமர்ப்பிக்க முடியும்.
- பிரெஞ்சு மொழிபெயர்புகள். VISA FORM நிரப்புதல்...
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA...(திருமணம் மூலம்/தொழில்/ படிப்பிற்காக)செல்கிறார்கள். எமது மாணவர்கள் விரைவாக பிரெஞ் பேசுகிறார்கள்..

ஆரம்பம் சில நாட்களில். உடன் பதிவை உறுதிப்படுத்துக
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)
(2530)

முல்லைத்தீவு கல்வி வலய ஆதரவில்
மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்
இடம் :- மு/ வித்தியானந்தாக் கல்லூரி
காலம் :- 24.11.2015 முதல் 02.12.2015 வரை
நேரம் :- காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை
★ அனைத்து புத்தகங்களுக்கும் 10% முதல் 20% வரை விசேட விலைக்கழிவு
★ அப்பியாசக் கொப்பிகளுக்கு 10% முதல் 40% வரையான விசேட விலைக்கழிவு
ஏற்பாட்டாளர்கள்:
யாழ் புத்தகசாலை
305,307,309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 021 221 7874 077 834 9507
(C-2774)

Study Medicine in Dalian Medical University-China
MBBS ADMISSIONS OPEN FOR THE YEAR 2016
~Very Low Course Fees
~Taught in English Medium

APPROVED
APPLY RIGHT NOW
Next Intake-Feb 2016
iCS Study Overseas
77,Clock Tower Road,Jaffna
021-4926222,077-3013060
(சி-2768)

கண்ணீர் அஞ்சலி

அமரர்
வில்வராஜா சுதாகர்
முன்னாள் பகுதி நேர விரிவுரையாளர் (BCAS JAFFNA CAMPUS)
மலர்வு 12.06.1974
உதிர்வு 21.11.2015
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.
BCAS CAMPUS JAFFNA
(சி-2773)

SPEED LANKA EXPRESS

வெளிநாடுகளுக்கான தபால் பொதி விநியோக சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926
(C-2567)

அசல் SONY இலத்திரனியல் உபகரணங்களை இலங்கையில் சந்தைப்படுத்துபவர்கள்
SINGER Plus


3 வருட சிங்கர் உத்தரவாதம் (நிபந்தனைக்கு உட்பட்டது)
SONY 40" LED தொலைக்காட்சியுடன்
SONY Home Theatre
ஒன்று இலவசம்

DAV - TZ 140 - Rs.26,750 - இலவசம்
SINGER Plus காட்சியறைகள்...
(சி-2769)

| யாழ்ப்பாணம். | பருத்தித்துறை | கொடிகாமம் | மானிப்பாய். | சங்கானை | சுன்னாகம். | நெல்லியடி. | சாவகச்சேரி | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 226 3411 | 0774643424 | 021 225 5343 | 021 225 1100 | 021 224 0555 | 021 226 4937 | 021 227 0197 | 021 228 0199 | 076 8622213 | 021 229 0180 |


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 22.11.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 41




# கைதிகளை விடுவிப்பதில் ஓய்ந்துபோன தமிழ்த் தலைமை



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரை நீக்க சதித்திட்டம் நடக்குதாம்

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இது கார்த்திகை மாதம். யுத்தத்தில் உயிரிழந்த எங்கட உறவுகளுக்கு மரியாதை செலுத்துகின்ற மாதம்.

எல்லோரும் எழுந்து எங்கட மௌன அஞ்சலியைச் செலுத்துவம். பண்டிதர் பரமலிங்கம் இப்படி அறிவித்ததும் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** எங்கட தமிழ்ச் சனங்கள் பட்ட துயரம் கொஞ்சமல்ல. எத்தனை இழப்புகள், அழிவுகள், இடப்பெயர்வுகள் எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் வாழ வேணும் என்பதற்காக எங்கட பிள்ளைகள் களத்தில சமராடி வீர மரணத்தை தழுவிக் கொண்டதை நினைக்க...

(வாத்தியார் வைத்திலிங்கம் இப்படிச் சொன்னதும் விதானையார் விசுவலிங்கம் விம்மி விம்மி அழுதார்)

**கங்காணி:** விதானையார் அழாதீங்கோ.

**மூப்பர்:** ஏன் வாத்தியார் உங்களுக்குத் தெரியாதோ விதானையாற்ற கடைசிப் பெடியன் மாவீரர் என்று. அதை நீங்கள் ஞாபகப்படுத்திப்போட்டியள். இனி விதானையாரைச் சமாளிக்கிறது என்னென்று?

**வாத்தியார்:** ஓமோம் நான் விதானையாற்ற கடைசிப் பெடியன மறந்து போனன். விதானையார் குறைநினைச்சுப் போடாதீங்கோ. பிள்ளைகளின்ர இழப்பை அனுபவிக்கின்ற பெற்றோருக்குத்தான் அதன் கொடுமைத்தனம் விளங்கும்.

எல்லாவற்றையும் எல்லாரும் புரிந்து கொள்ள ஏலாது. சிலவற்றை வாழ்க்கையில அனுபவித்தால் தான் அதன் கடிமைத்தனம் புரியும்.

இது கார்த்திகை மாதம். வழமையில் மாவீரர்களை - யுத்தத்தில் உயிரிழந்து போன எங்கள் உறவுகளை நினைவுகூருகின்ற காலம் என்பதால அதைப் பற்றி சொன்னனான். அது விதானையாருக்கு மகனை ஞாபகப்படுத்திப் போட்டுது. என்ன செய்யிறது. விதானையாருக்கும் நீங்காக் கவலை. இம்...

**கங்காணி:** நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்குது. கார்த்திகை மாதத்தில வருகின்ற புனித வாரத்தில நற்பணிகளைச் செய்வம் என்று அவர்கள் கூறியிருக்கினம். நல்ல காரியம் தானே! அதிலும் நவம்பர் 27ஆம் திகதி அனைவரும் எங்கட தேசிய உடையை அணிந்து கொள்ளுமாறும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் கேட்டிருக்கிறது. உண்மையில அது நல்ல கருத்து.

எங்கட வாழ்வுக்காக உயிரிழந்த உறவுகளை நினைத்து இரத்ததானம் செய்யிறது, மரம் நடுகிறது- கூட்டாகச் சிரமதானம் செய்யிறது எல்லாம் உண்மையில நல்ல காரியங்கள். எங்கட ஆக்களுக்கு எங்கட தேசிய உடை என்றால் பிடிக்காது. நாகரிகம் இல்லை எண்றொரு நினைப்புப்போல.

**விதானையார்:** நவம்பர் மாதம் 27ஆம் திகதி எங்கட தேசிய உடையை அணியுமாறு கேட்ட யாழ்ப் பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் இன்னுமொரு கோரிக்கையையும் விடவேணும். அது என்னவென்றால், நாம் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதியில் இருந்து எங்கட தமிழ் அரசியல் வாதிகள் வேட்டி, நஷனல் உத்தரியம் இவற்றை அணிவதென்றும் வெளி நாட்டுப் பயணங்களின் போதும் எங்கட தேசிய உடையில தான் செல்லுறது என்றும் சத்தியம் எடுத்துக்கொள்ள வேணும் எண்டு கேட்க வேண்டும்.

**வாத்தியார்:** விதானையார் சொல்லுறது நூறு வீதம் சரி. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவர்களெல் லாம் தங்கட தேசிய உடையில தானே வெளிநாடெல்லாம் போய் வருகினம். ஆனா எங்கட அரசியல் தலைவர்கள் வெளிநாடு என்றவுடன் தங்கட வேட்டியளை கழற்றி வைச்சிடுவினம்.

இதெல்லாம் இனப்பற்று இல்லாததன் வெளிப்பாடுதானே.

உண்மையில சொல்லுறன் இனப்பற்று, மதப்பற்று இதுகளை தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள வர்களிட்ட இருந்து கற்றுக்கொள்ளவேணும்.

**மூப்பர்:** ஏன், எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்த்தன, ஆர்.பிறேமதாச இவர்கள் எல்லாரும் தேசிய உடையிலதானே வெளிநாடுகளுக்குப் போய் வந்தவர்கள் நாங்கள் எண்டால் வெள்ளைக்காரனே மறந்து போன கோட் சூட்டுக்களை மாட்டிக்கொண்டு அடையாளம் இல்லாத ஒரு இனமாக மாறி விடுவம்.

**பண்டிதர்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோள் மிகவும் நல்லது. காலசூழ்நிலைகளுக்கு ஏற்ற மாதிரியானது. இருந்தும் அவர்களிடம் ஒரு கோரிக்கையை நான் விட விரும்புகிறன்.

**விதானையார்:** என்ன கோரிக்கை பண்டிதர்.

**பண்டிதர்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரை பதவியில இருந்து நீக்கிறதுக்கு ஒரு சிலர் கடுமையாகப் பாடுபடுகினமாம். அதிலும் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒரு சில விரிவுரையாளர்கள் இது விடயத்தில கடும் முயற்சி செய்வதாகக் கேள்வி. ஆனால் ஒன்று சொல்லுறன் எல்லாவற்றையும் சரிப்படுத்துறம் சரிப்படுத்துறம் எண்டு சொல்லிப் போட்டு தீய சக்திகளின்ர உள் நோக்கங்களுக்கு உலை வைச்சுக் கொடுக்காதீர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவப் பெருவள்ளல் சேர்.பொன். இராமநாதன் கொடுத்த காணியில இயங்குவது கூட சிலருக்குத் தெரியாது போல, தங்கட பதவி உயர்வுக்காக தங்களுக்குத் தேவையானவர்களைத் துணை வேந்தராக்க எடுக்கிற முயற்சி யாழ்ப்பாணத்தில சமயப் பாகுபாடுகளை ஏற்படுத்திப் போடும் கவனம்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா, இப்ப டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவுறதாகக் கேள்வி. சில நாட்களுக்கு முன்னர் சுண்டிக்குளி - சோமசுந்தரம் அவனியூவில டெங்கு காய்ச்சலுக்கு ஆளான சிறுமி ஒருவர் பரிதாபகரமாக இறந்து போனமை பெரிய வேதனை. காய்ச்சல் வந்தவுடனேயே யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில அந்தப் பிள்ளையை அனுமதிச்சிருக்கினம்.

இருந்தும் டெங்கு அந்தப் பிள்ளையைப் பலி எடுத்துப் போட்டுது. எல்லாம் விதி எண்டு நாங்கள் சொல்லிப்போட்டுப் போகலாம். ஆனால் எதிலும் கவனமாக இருந்தால் அருமந்த உயிர்களைப் பாதுகாக்கலாம் என்பது என்ர தாழ்மையான கருத்து.


**கங்காணி:** அதுமட்டுமல்ல சுண்டுக்குளி சோமசுந்தரம் வீதியில ஐந்து பேருக்கு டெங்கு காய்ச்சல் தொற்று ஏற்பட்டிருக்காம். நாங்களும் ஆலடியில குந்தியிருக்கிறனாங்கள். கவனமாக இருக்க வேணும்.

இப்படி கங்காணி கூறிய போது ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.


ஆதித்தன்

# கைதிகளின் விடுதலையில் ஓய்ந்து போன தமிழ்த் தலைமை

## தமிழர்களுக்காக குரல் கொடுத்தால் சம்பந்தருடன் இந்தியா பகைக்குமா?



குருஷேத்திரம்



இந்தியாவை நீங்கள் நம்புகிறீர்களா? இந்தியாவை நம்புங்கள். நாங்கள் உங்களுக்குரியதைச் செய்வோம். இப்படிக் கூறியவர் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி. இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வருகை தந்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவை நம்புகிறீர்களா? என்று மோடி கேட்டமை மிகப்பெரும் அதிர்ச்சிக்குரியது. இந்தியாவை நம்பி நம்பியே அழிந்துபோன ஓர் இனம் தான் ஈழத்தமிழினம்.

இறுதியாக 2009 ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடூரம் போரின்போது பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் யுத்தத்திற்குள் அகப்பட்டனர். இவ்வாறு அகப்பட்டவர்கள் தங்களைக் காப்பாற்றுமாறு கெஞ்சினர், மன்றாடினர். இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்று நம்பினர். அந்த நம்பிக்கைக்கான பரிசு என்ன என்பதை இந்தியா நன்கு அறியும்.

இது ஒரு புறம் இருக்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அண்மைக்காலப் போக்குகள் தமிழ்மக்களுக்கு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தன்னைத் தெரிவு செய்த-தான் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ்மக்களுக்கு விசுவாசமாக இருப்பதைத் துறந்து; இலங்கை அரசுக்கும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் நல்ல பிள்ளையாக அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுகின்றவராக இருப்பதில் மிகக் கவனம் செலுத்துகின்றார்.

இந்தியா விரும்பாது என்பதற்காகவே அவர் பல விடயங்களை விட்டுக் கொடுத்துள்ளார். முன்பு சரத் பொன்சேகாவை ஆதரித்தது, பின்னர் மைத்திரியை ஜனாதிபதியாக்க உதவி யது என அனைத்தும் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகச் சம்பந்தர் செய்து முடித்தவைதான்.

பரவாயில்லை இந்தியா எங்களின் அண்டைநாடு. அங்குள்ள தமிழ்மக்கள் எங்கள் சகோதரர்கள். எனவே இந்தியாவை அனுசரித்துப்போவது நல்லதும் தேவையானதும் என்று கருதிக்கொண்டால் இந்தியாவும் தமிழ்மக்களுக்கான உதவிகளைச் செய்யவேண்டுமல்லவா!

இந்தியா செய்கின்ற உதவி என்பது தமிழ்மக்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பதாகவே இருக்க வேண்டும்.

ஆனால் அதுவிடயத்தில் இந்தியா மௌனமாக இருப்பதைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை. அமெரிக்காவைப் பொறுத்தவரையும் இந்தியாவின் நிலைப்பாடுதான் காணப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கைக்குள் சீனாவின் நுழைவுக்கு இடம் கொடுக்கிறார் என்ற ஒரே காரணத்திற்காகவே அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாக இணைந்து மகிந்தவைப் பதவியில் இருந்து இறக்க மறைமுகமாகப் பாடுபட்டன.

மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்ற அமெரிக்க- இந்திய நிலைப்பாடு சீனாவின் ஊடுருவலால் ஏற்பட்டதேயன்றி தமிழ்மக்களைக் கொன்றொழித்ததால் எடுக்கப்பட்ட நிலைப்பாடன்று.

ஆக,சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் இருந்து முற்றுமுழுதாக கட்டுப்படுத்த மகிந்தவைத் தோற்கடித்து மைத்திரியை ஜனாதிபதியாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இருந்தது. அது நடைமுறைப்படுத்தப்பட்டாயிற்று.

தமிழ்மக்கள் மீது இந்தியாவுக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ ஏன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கோ கரிசனை இருந்திருக்குமாயின் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பை ஜனாதிபதி மைத்திரியிடம் இருந்து பெற்றுக் கொடுத்திருக்க முடியும்.

ஜனாதிபதி மைத்திரியுடன் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தொலைபேசியில் சொல்லியிருந்தால் அல்லது அமெரிக்கா தனது நாட்டுத் தூதுவர் மூலம் மன்னிப்பு வழங்குக என்று ஜனாதிபதி மைத்திரிக்கு கட்டளையிட்டிருந்தால் காரியம் கனகச்சிதமாக முடிந்திருக்கும். அவர்கள்தான் செய்யவில்லை என்றால் இரா.சம்பந்தராவது, ஐயா! நான் உங்களுக்காக எத்தனையோ செய்து விட்டேன். நீங்கள் எங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக தலையிடக் கூடாதா என்று கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் அப்படியான எந்தக் கேள்வியையும் சம்பந்தர் கேட்டிலர்.

இவ்வாறானதொரு கேள்வியை தான் கேட்பதன்மூலம் சம்பந்தர் என்னை புலிப்போராளிகளைக் காப்பாற்ற நினைக்கிறாரா என்று அமெரிக்காவும் இந்தியாவும் ஐயம் கொண்டால் அது தனது நன்மதிப்புக்குப் பங்கமாகும் என்ற பயத்தில் சம்பந்தர் எதுவும் பேசாமல் விட்டுவிட்டார்.

சுருங்கக்கூறின் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவுக்கு இருக்கக்கூடிய துணிவு, அரசியல் இராஜதந்திரம்கூட நம் தமிழ் அரசியல் தலைமைகளிடம் இல்லை எனலாம்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை மகிந்த ராஜபக்ஷ சிறையிலடைத்தபோது அவருக்கு இனி விடுதலை இல்லை என்ற நிலைமையே இருந்தது. இருந்தும் சரத்பொன் சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா மற்றும் சரத்பொன் சேகாவின் ஆதரவா ளர்கள் அமெரிக்காவைப் பற்றிக் கொண்டனர்.

சரத் பொன்சேகாவுக்கு விடுதலை பெற்றுத் தாருங்கள் என்ற அவர்களின் கோரிக்கைக்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது. சரத் பொன்சேகாவை விடுதலை செய்தே ஆகவேண்டும் என்ற அமெரிக்காவின் கட்டளைக்குப் பயந்த மகிந்த ராஜபக்ஷ சரத் பொன்சேகாவை விடுதலை செய்தார்.

இவ்வாறாக நிலைமை இருந்தபோது மைத்திரியின் நல்லாட்சியில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய முடியவில்லை என்றால் அதற்கான பலவீனம் முழுவதையும் தமிழ் அரசியல் தலைமையே பொறுப் பேற்றுக் கொள்ள் வேண்டும்.

எது எவ்வாறாயினும் இந்தியா- அமெரிக்கா- இலங்கை அரசு இவை மூன்றுக்கும் இசைவாக சம்பந்தன் நடந்து கொள்வதன் மூலம் எதைச் சாதிக்கப்போகிறார் என்பது புரியாத புதிரே.

ஏதோ போகும் காலத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்குமேயன்றி வேறு எதுவும் நடக்காதென்பது நிறுதிட்டமான உண்மை.

விதுரன்




# போரை நிறுத்திய தெனாலி



ஒருமுறை தெனாலிராமன் வாழ்கின்ற நாட்டு மன்னருக்கு அண்டை நாட்டு அரசன் ஒருவர் ஓலை அனுப்பியிருந்தார்.

*மதிப்புக்குரிய ராஜாவுக்கு,*

*உங்கள் நாட்டின்மேல் போர் தொடுக்க உத்தேசித்துள்ளேன். மூன்றாவது பௌர்ணமி அன்று, உங்கள் நாட்டிற்கு எதிராக போர் முரசு கொட்டப்படும். எனது நாட்டுப் படையைப்பற்றி நீங்கள் அறியாததா? நீங்கள் போருக்கு சம்மதமா? கத்தியின்றி இரத்தமின்றி போர் முடிய வேண்டும் என்றால், நீங்களும், உங்கள் நாடும் என்னிடம் தோல்வியை ஏற்றுக் கொண்டு, நாட்டினை என்னிடம் கொடுக்க வேண்டும்.*

*அப்படி நீங்கள் செய்தால், உங்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து, நாட்டின் எங்கேயாவது ஒரு ஓரத்தில் நீங்கள் வாழ்ந்து கொள்ளலாம்.*

*இப்படிக்கு ராஜராஜசிம்மன்.*

மன்னர் உடனே அரச சபையினை நோக்கி, அவர்களது கருத்துக்களை கூறச் சொன்னார்.

சேனாதிபதி முதல் மந்தரிகள் வரை ராஜராஜசிம்மனின் படையை வெல்ல முடியாது என்பதை ஆணித்தரமாக கூறினார்கள். மன்னனுக்கும் தெரியும் அந்தப் படையை வெல்ல முடியாது. மேலும் போர் ஏற்பட்டால் எண்ணற்ற மக்கள் உயிரை இழப்பார்கள், பெரும் சேதம் ஏற்படும்.

இதற்கு என்னதான் வழி என்று கேட்டார் மன்னர்.

உடனே அனைவரும் ஆளுக்கு ஒன்றாக பேசினார்கள். அனைவரின் கருத்தும் போரிடாமல் எதிரிக்கு தலை வணங்கலாம் என்பதே.

இவ்வளவு நேரமும் அமைதியாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த தெனாலிராமன் பேசத்தொடங்கினார். "மன்னா! எதிரிமன்னன் ராஜராஜ சிம்மனிடம் நீங்கள் மண்டியிட்டுவிட்டால், நாளைய வரலாறு நம் நாட்டையே கேலி செய்யும். இத்தனை நாள் நீங்கள் பெற்றிருந்த புகழ் எல்லாம் மங்கிப்போய் விடும். மக்களுக்கும் பெரிய அவமானமாகி விடும். அதற்குப் பதில் போரிட்டு மடிந்தாலும், மாபெரும் படையுடன் போரிட்டு செத்து மடிந்தார்கள் என்று வரலாறு இருக்கும்."

அரசரை தவிர அனைவரும் தெனாலிக்கு பித்துப்பிடித்துவிட்டது என்று கூறி அவருடன் வாக்குவாதப்பட்டார்கள். முடிவில் மன்னர் சொன்னார்...

"தெனாலிராமன் சொல்வதில் உண்மை இருக்கின்றது. அடிமையாக வாழ்வதை விட போர் செய்து மடியவே விரும்புகிறேன்" என்றார்.

அத்தோடு அரச சபை கலைந்து விட்டது. அதன் பின்னர் மன்னரும் தெனாலியும் நீண்ட நேரம் தனிமையில் உரையாடினார்கள். இதற்கு மாற்றுவழி உண்டா என்று ஆய்வு செய்தார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் அரச சபை கூடியது.

அரசரைப்பார்த்து "மன்னா உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருந்தால், இந்த விடயத்தை என்னிடம் விடுங்கள் நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார் தெனாலி.

அதற்கு மன்னர் சம்மதம் தெரிவித்தார். தெனாலி கூறுவதைப்போன்று ஒரு ஓலை எழுதி மோதிர முத்திரை பதித்துக்கொடுத்தார் தெனாலியிடம்.

அந்த ஓலையை எடுத்துக்கொண்டு தெனாலி, எதிரி நாட்டு மன்னர் ராஜராஜ சிம்மன் முன்னால் போய் நின்றார். அரசர், கொடுத்த ஓலையை உரக்கப் படித்தார்.

"மதிப்புக்குரிய மன்னர் ராஜராஜசிம்மனுக்கு உங்கள் படைக்கு சற்றும் சளைத்தவர்களல்ல எம் வீரர்கள். போருக்கான நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். உங்கள் படையின் மனபலம் உங்ளுக்குச் சரியாகத் தெரியவில்லை என்று நினைக்கிறேன். அவர்கள் எங்கள் படையோடு போர் செய்வதற்கு பயந்து நடுங்குகிறார்கள். எதற்கு கோழைகளின் உயிரை கொல்லவேண்டும் என்று எண்ணுகிறேன். இந்த ஓலையை எடுத்து வந்த வீரர் எங்கள் படையில் மருத்துவ உதவி செய்பவர். இவரை உங்கள் நாட்டு சேனாதிபதி சண்டையிட்டு வென்றுவிட்டால் எனது நாட்டை உங்களுக்குப் பரிசாகக் கொடுத்துவிடுகின்றேன்."

ஓலையில் எழுதியிருப்பதைக்கேட்ட ராஜராஜசிம்மன், தெனாலியை மாறி, மாறிப் பார்த்தார்.

மெலிந்த உருவம் கொண்ட தெனாலியை கேலியாகப் பார்த்தார். "யார் அங்கே இவனை பிடித்து சிறையில் அடையுங்கள்" என்றார் மன்னர்.

"மன்னிக்கவும் மன்னா, ஒருநாட்டின் தூதுவராக வந்தவரை சிறையில் அடைப்பது போர்மரபுகளை மீறும் செயல் அல்லவா?" என்றார் தெனாலி.

"உமது மன்னர் உம்மை எமது சேனாதிபதியுடன் சண்டை செய்யும்படி அனுப்பியுள்ளதாக இந்த ஓலையில் எழுதியிருக்கிறார். இது தெரியுமா உனக்கு."

தெனாலி "அப்படியா? மன்னா. எங்கள் மன்னர் இதைப்பற்றி எனக்கு எதுவும் கூறவில்லை. ஆனாலும், எங்கள் மன்னர் உத்தரவுக்கு கட்டுப்படுகிறேன். ஆனால், ஒரு வேண்டுகோள் எங்கள் நாட்டுச் சட்டம், சண்டை செய்யும் முன் சண்டை செய்யும் இருவரும் மூன்று நாட்களுக்கு சிறையில் இருக்கவேண்டும் என்பதே. அதன்படி என்னையும், உங்கள் சேனாதிபதியையும் சிறையில் அடையுங்கள், நான்காம் நாள் அவருடன் நான் போட்டி போடுகிறேன்."

அப்போது தான் தெனாலி சேனாதிபதியைக் கண்டார். ஏழு அடி உயரத்தில் ஒரு மாமிசமலை போன்று இருந்தான் அவன். தெனாலியும் சேனாதிபதியும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இருவரும் அடுத்தடுத்த சிறையில் அடைக்கப் பட்டார்கள்.

இருவருக்கும் இடையில ஒரு சுவர் இருந்தது. இருவரும் பார்த்துக்கொள்ள முடியாது. ஆனால், பேசிக்கொள்லாம்.

இருவருக்கும் நன்றாக சாப்பாடு கொடுத்தார்கள். சாப்பாடு முடிந்ததும், "இப்போ சாப்பிட்டதைப் போலத்தான் சண்டையில் உன்னை கொன்று... சாப்பிடுவேன்" என்று கத்தியபடி இருப்பான் சேனாதிபதி.

"சரிசரி அப்போது பார்த்துக்கொள்வோம்" என்று மாத்திரம் சொல்வார் தெனாலி. சேனாதிபதி நித்திரையானதும் இருவருக்கும் இடையில் இருந்த சுவரை தண்ணீர் ஊற்றி மெல்ல மெல்ல கரண்டியால் சுரண்ட ஆரம்பித்தார் தெனாலி. விடியும்போது ஒரு அடிக்கும் அதிகமான அகலம்கொண்ட சுவரை சுரண்டி மெல்லியதாக ஆக்கிவிட்டார்.

இது ஏதும் சேனாதிபதிக்கு தெரியாது. மறுநாள் சாப்பாடு முடிந்ததும், சேனாதிபதி கத்த ஆரம்பித்துவிட்டான். உன்னை கொல்வேன் தின்னுவேன் என்று. "சரி, சரி சேனாதிபதி, நாளை சண்டையின்போது அதைப்பார்ப்போம். இப்போ நான் வெற்றிலை சாப்பிடுகின்றறேன்; உன்னிடம் சுண்ணாம்பு இருந்தால் தா."

"சுண்ணாம்பு இருக்கின்றது எப்படித் தருவது என்றான் சேனாதிபதி."

"இதோ விரலில் பூசிவிடு" என்று தான் சுரண்டிய சுவரில் கையால் குத்தினார் தெனாலி. அவரின் கை அடுத்த பக்கம் வந்துவிட்டதைப் பார்த்து பயந்து விட்டான் சேனாதிபதி.

சேனாதிபதி சுண்ணாம்பை பூசிவிடும்போது கை நடுங்குவதை கவனித்த தெனாலி, "என்ன சுவரை உடைத்ததற்கே இப்படிப் பயப்படுகின்றீர்? எங்கள் நாட்டில் நான் ஒரே அடியில் ஒரு யானையைக் கொன்றிருக்கிறேன் தெரியுமா? நான் எல்லாம் சும்மாதான். எங்கள் சேனாதிபதி தனது ஒரு கையால் யானை தூக்கிச் சுற்றுவதை நீ பார்க்கவேண்டும். யாரிடமும் சொல்லிவிடாதே, எங்கள் நாட்டிற்கு வந்த ஒரு முனிவர், எங்கள் படையில் இருக்கும் வீரர்கள் அனைவருக்கும் அசுர பலம் கிடைக்க வரம் தந்தார். அதன்பின்னர்தான் எங்களுக்கு இப்படி அசுர பலம் கிடைத்தது" என்றார் தெனாலி.

எல்லாவற்றையம் கேட்ட சேனாதிபதி நன்றாகப் பயந்துவிட்டார். மறுநாள் நாட்டு மக்கள் அனைவரும் சண்டையைக் காண வந்திருந்தார்கள்.

மன்னர் தனது வாளை சேனாதிபதிக்கு கொடுத்து "தலையை கொய்து விடு" என்றார். தெனாலியைப் பார்த்து "உமக்கு என்ன ஆயுதம் வேண்டுமோ கேட்டு வாங்கிக்கொள்ளும்" என்றார் மன்னர். "எனக்கு ஆயுதம் வேண்டாம். வெற்றிலை மாத்திரம் கொடுங்கள் போதும்" என்றார்.

மன்னர் சிரித்துக்கொண்டு "ஆகட்டும்" என்றார். இரண்டு வீரர்கள் ஓடிவந்து, ஒருவர் வெற்றிலை கொடுத்தார். மற்றவர் சுண்ணாம்பு கொடுக்கப் போனார்.

"சுண்ணாம்பை சேனாதிபதியின் நெற்றியில் வையுங்கள் நான் எடுத்துக்கொள்கிறேன்." சேனாதிபதியின் நெற்றியில் சுண்ணாம்பை வைத்ததும் தனது கை முட்டியை முறுக்கினார் தெனாலி. அவ்வளவுதான், "ஐயோ என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள்" என்று தெனாலியின் கால்களில் விழுந்துவிட்டார் சேனாதிபதி.

"மன்னா! இவர்கள் நாட்டின் மேல் ஆசைப்படுவதை விட்டுவிடுங்கள். இவர் ஒருவரே நம் படையை அழித்துவிடுவார்..." என்று எல்லாவற்றையும் சொன்னான். சுவரைப்போய்ப் பார்த்த மன்னனும் உண்மையென்றே நினைத்து விட்டார்.

ஒரு குதிரை வண்டியில் நிறைய பொற்காசுகளை தெனாலியின் மன்னருக்கு பரிசாகக் கொடுப்பதாகவும் தன்னை மன்னித்து விடும்படியும் மன்னர் ஓலை எழுத்தித் தெனாலியிடம் கொடுத்து விட்டார். வெற்றியோடு நாடு திரும்பும் தெனாலியை வரவேற்க மன்னரும் மக்களும் எல்லையில் காத்திருந்தார்கள்.



செல்வி உ. ஸ்ரீநயா
மாதர்சங்கப் பாலர் பாடசாலை
சித்தன்கேணி






வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532




சுயநல அரசியல்வாதிகளைப் பற்றி?

இப்போதைய காதலர் பற்றி?

அனிருத் பற்றி கொஞ்சம் சொல்லுங்க?

கோபி — மந்திகை

அங்கிள் உங்களது பிறந்தநாள் எப்போது?

பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே பனி பொழிந் திடும் மார்கழி மாதத்திலே...

(மார்கழி 20 அன்று வலம்புரியின் பிறந்த நாள்)

ஜது — கொக்குவில்

அனிருத் பற்றி கொஞ்சம் சொல்லுங்க?

1990 ஒக்டோபர் 16-ல் பிறந்த அனிருத் நடிகர் தனுசின் நெருங்கிய நண்பன். 3 படத் தில் இசைமைப்பாளராக அறிமுகமாகி கொல வெறி என்ற ஒற்றைப் பாடலுடன் உலகெங் கும் பிரபல்யமானார். இருந்தாலும் பிறமொழி மியூசிக்கை திருடுகிறார் என்ற கெட்ட பெயரும் இவருக்கு இருக்கிறது.

சிறுபிள்ளைகளைகள் திருடினால் தவறில்லை தானே?

வாசகன் — யாழ்ப்பாணம்

வியாசர் அங்கிள் உங்கள் உண்மையான பெயர் என்ன?

நான் கணேசனாக இருந்து சிவாஜியாகவோ சிவாஜிராவ் ஆக இருந்து ரஜினி ஆக மாறிய வனோ இராமச்சந்திரனாக இருந்து எம்.ஜி.ஆர் ஆக மாறியவனோ வெங்கட்பிரபுவாக இருந்து தனுஷாக மாறியவனோ சரவணனாக இருந்து சூர்யாவாக மாறியவனோ அல்ல அப்பவும் வியாசர் இப்பவும் வியாசரே எப்பவும் வியாசரே.

ரவீனா — சுதந்திரபுரம்

இப்போதைய காதலர் பற்றி?

'காக்கை கூட உன்னை கவனிக்காது இந்த உலகமே உன்னை உற்றுப் பார்ப்பதாய் உணர்வாய்'

இது காதலர் பற்றி வைரமுத்து எழுதிய கவிதை ஒன்று. இப்போது காதலரைப்பற்றி எழுதினால் காக்கை கூட உன் செயலைப் பார்த்து காறித்துப்பும். ஆனால் நீ அதை கவனிக்கமாட்டாய். இந்த உலகமே உன்னை கண்டுகொள்ள வில்லையென உணர்வாய் கேவலப்படுவாய் கெட்டுகுட்டிச்சுவராவாய்.

கிருஷா — வரணி

பாம்பிடம் கடிபட்ட சந்தர்ப்பம் ஏதும் உண்டோ?

கொடிய விடத்தை வைத்துக் கொண்டும் நெஞ்சில் கொத்தத் துணிவின்றி முதுகில் கொத்திய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

குருபரன் — அல்வாய்

அரசியல் கைதிகள் விடுதலை புலிகளா?

இனவெறி பிடித்தவர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்.

அரவிந் — புலோலி

வியாசர் அடிக்கடி தியேட்டர் பக்கம் சுத்துகி றீராமே?

பித்தம், வாதம், முட்டு, இழுப்பு, தொய்வு, சலரோகம், பிறசர், காட்டற்றாக், மூட்டுவாதம், மொழிவாதம், முன்னடைப்பு, பின்னடைப்பு, தலையிடி, தடிமன், காய்ச்சல், சளி, குளி ரென்டா, சன்னி வெயிலெண்டா வென்னி என்று நான் ஒரு சர்வரோக சாம்ராச்சியம். அப்படி யென்றால் 0 தியேட்டர் பக்கம்தானே நிக்க வேனும்.

சமீதரன் — நயினாதீவு

செவ்வாய்க்கிரகம் போய்வர எனக்கு ஆசை?

ஐயா சாமி போன போக்கில் அங்கே போய் காணி பிடித்து வீட்டைக் கட்டாமல் முதலில் மழை பெய்தால் வெள்ளம் வழிந்தோடி கட லைச் சேரவடிகாலை அமையுங்கள். அதன் பின் வீடு கடைகளைக் கட்டுங்கள். யாழ் பாணம் மாதிரி கண்ட இடத்தில் காப்பற்றும் நின்ற இடத் தில் புகையிரதப்பாதையும் அமைத்துவிட்டு மழையை குறை சொல்ல நேரிடும் கவனம்.



பதுங்குகுழியில் இருந்த மன்னர் எப்படி எதிரியிடம் மாட்டிக்கொண்டார்? பதுங்குகுழிக்கு புதுகுழி புகுவிழா கொண்டாடினதால்தான்!

**அன்பு வாசகர்களே!**

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்வி களை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீ கம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

சுரேன் — மானிப்பாய்

சுயநல அரசியல்வாதிகளைப் பற்றி?

ஈ.வே.ரா. பெரியாரை சந்தித்த அன்பர் ஒருவர் பொதுநலத்துக்கும் சுயநலத்துக்கும் என்ன வித்தியாசம் எனக் கேட்டார். மழை பெய்கிறதே அது பொதுநலம். அந்த மழைக்கு நீர் குடை பிடித்து வந்தீரே அது சுயநலம் எனக் கூறினார். எம் அரசியல்வாதிகளுக்கு பொருந்தக் கூறினால்

**மழைபெய்தல் - தேர்தல் வாக்குறுதிகள்**

- இராணுவம் மக்களின் நிலங்களிலிருந்து வெளியேறவேண்டும். அரசியல் கைதிகள் விடுதலையாகவேண்டும். திம்புக் கோட் பாட்டின் அடிப்படையில் தீர்வு. நடைபெற்றது இன அழிப்பே.

**குடைபிடித்தல் - தேர்தலின் பின்**

- வரிவிலக்கு வாகன பெமிட்டை எடுக்க வேண்டும். எப்படியாவது கொழும்பில் செற்றில் ஆகிவிடவேண்டும். நடைபெற்றது இன அழிப் பல்ல. என் அரசியல் பயணத்திற்காக எவரை யும் அடிப்பேன் எவர்காலையும் பிடிப்பேன்.

கரன் — புதுக்குடியிருப்பு

வேதாளம் புலியை வென்றுவிட்டதா?

வேதாளம் வெளியாகி 8 நாட்களில் 100 கோடியை எட்டிவிட்டது. அஜித் இன்னுமொரு சாதனையை செய்திருக்கிறார். தமிழ் நாட்டில் மட்டும் முதல் 7 நாட்களில் 60 கோடி வசூல் செய்து எந்திரன் ரஜனி முதலிடத்திலிருக்க வேதாளம் 50 கோடி வசூல் செய்து இரண்டாம் இடத்தில் இருக்கிறது.

முகுந்தன் — கிளிநொச்சி

சம்பந்தன் ஐயா சமஸ்டிபற்றி பேசமாட்டாரா?

ஏன்பேசமாட்டார். இற்றைக்கு மூன்று மாதங் களுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தல் பிர சாரக் கூட்டங்களில் பேசியிருக்கிறாரே. அது பற்றி இப்போது அவர் பேசுவதில்லை. அவ ருக்கு தலைசிறந்த எதிர்க்கட்சிதலைவர் என்ற புகழை பிரதமர் சூட்டியுள்ளார்.

தீபன் — கொக்குவில்

உங்களுக்கு யாராவது தொல்லை தந்தது உண்டா?


சமீபகாலமாக ஒருவர் என்னைபேஸ்புக் (முகப் புத்தகம்) பார்க்கசொல்லிறொம்ப அடம்பிடிக்கிறார்.

கதிர் — கீரிமலை

சமீபத்தில் உங்களை சிந்திக்கவைத்த விடயம்?

அடிச்ச மழை வெள்ளத்துக்கு பாடசாலை எல் லாம் லீவு விட்டாங்கள் .ஆனால் எந்தவொரு நிறு வனத்துக்கும் லீவு விடல அப்பதான் புரிஞ்சுது படிப்புக்கும் வாழ்க்கைக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று.ஸ்ரீ

# கவிதைக் கலசம்



## ஆண்களின் போராட்டம்

எத்தனையோ நாதாரிக் கூட்டத்திலும்
நரிகளின் அட்டகாசத்தின் மத்தியிலும்
நல்லவன் என்று சொல்வதற்கும்
நம் நாட்டிலும் பலர் உண்டு
பெண்மைக்கும் பெண்ணடிமைக்கும்
வன்புணர்வுக்கும் கலாசார சீர்கேட்டிற்கும்
ஒட்டுமொத்தமாய் ஆணினத்தை
திட்டித் தீர்த்து விடுகிறோம்
எத்தனை ஆண்மகன்கள்
அத்திபாரம் தொடங்கி
அடியில் இருந்து நுனிவரை
நேர்வழியில் செல்லும்
ஆண்மகன்களின் கேள்விகளுக்கு
என்ன பதில்
சொல்லப்போகிறது பெண்மை இனம்
எதற்கெடுத்தாலும்
சாட்டுக்கள் சூடப்படுகின்றன
ஆண்களின் தலையில்
பொறுப்புக்கள் மூட்டப்படுகின்றன
செய்யாத பிழைகளுக்கும்
பொய்யான சாட்டுக்கள்...
திட்டுவதா...?
திட்டினால் கொடுமையென முறைப்பாடு
அடங்கிப் போனால் கோழையென
ஏச்சுக்கள் அனைத்தும் ஆண்மகன் தலையில்!
விடைகாண முடியுமா பெண்ணினமே
நல்ல ஆண்மைக்காய்!

**விசுவமடு அபிக்குட்டி**
**கிளி/ முருகானந்தா கல்லூரி**

## இமயம் தொட

இரவுகளுக்குள் முடங்காதே
உனது தேவை எதுவோ
அதைத்தேடிப் பெற்றுக்கொள்
மின்மினிகளைப் பார்
தனக்கான ஒளியை
தன்னிடத்தே கொண்டிருக்கும்
அவைதான் நீ
ஒளிர் உன்னில் ஒளியாய்
மிளிர்வாய் இது நிச்சயம்

மாவை, நா.கஜேந்திரன்

## பிரான்சில் உயிரிழந்த உறவுகளுக்காக

நெப்போலியன் தேசத்தில்
நெருப்பூட்டியது யார்?
அணுகுண்டு தேசத்தில்
வெடிகுண்டு வைத்தது யார்?
வீட்டோ பவர் கொண்டவனை
வீழ்த்த நினைத்தது யார்?
பாசவாதிகள் நிறைந்த தேசத்தை
நாசவாதிகள் சிதைத்ததென்ன?
பாரிசின் நகருக்கு குருதியை
பரிசாய் கொடுத்ததென்ன?
திறமைவாதிகள் கொண்ட நகரில்
தீவிரவாதிகள் புகுந்ததேனோ?
வெள்ளைமாந்தர் செங்குருதியை
வீணே ஓட வைத்த தேனோ?
பட்டினியால் உலகு பரிதவித்தபோது
பாரிசும்தானே
அரிசி போட்டது.
சமாதானப்பயிர் வளர்க்க
அதுவும்தானே உரம் இட்டது.
உலக உணவுத் திட்டத்துக்கும்
ஊட்டச்சத்து பணியதற்கும்
இவர்கள் கரங்களும்தானே
ஏராளம் இடுகிறது.
அந்தக் கரங்களில்
மலர்களை வையாமல் வெடி
மருந்துகளை வைத்தவன் யார்?
சாப்பாட்டு விடுதியை
சடல விடுதி ஆக்கியவனே..
காற்பந்து மைதானத்தில்
உயிர்ப்பந்து ஆடியவனே
படமாளிகை தன்னை
வெடிமாளிகை ஆக்கியவனே..
மூளைச்சலவை செய்வதெல்லாம்
உயிர்ச்சலவை செய்யத்தானா?
ஐரோப்பிய காவல்துறையிடம்
அகப்படாமல் போகலாம்
ஆண்டவரின் அகோரப்பிடியில்
எப்படிநீ தப்பலாம்???

**யோ.புரட்சி**
**வள்ளுவர்புரம்**

## அரசாங்க வேலை

பட்டப்படிப்பு முடித்தும்கூட
படிப்பிற்கேற்ப
பதவிக்காய்;
பத்திரப்படுத்திய விண்ணப்பத்தின்
பதிலுக்காக...
படலையின் காகித மணி ஒலியை
பத்தோடு பதினொன்றாய்
பலதடவை கேட்டுவிட்டோம்
கல்விக் கடன்
கட்டி முடிக்க முன்
காலம் உருண்டோடுதென்று
கன்னியவளைக் கரைசேர்க்க-ஓர்
கண்ணாளன் தேடினர்
கரம்பிடித்த- அவள் மகள்
கல்லூரி சென்றாலும்
கண்டிப்பாக கிடையாது போல
அரசாங்க வேலை எமக்கு

**பொன்.ஞானம்**
**பருத்தித்துறை**

# மௌனத்தின் தேடல்- 275



## அன்னையின் அன்பு

ஆர்ப்பரிக்கும் என்
அழுகையை அடக்கி
"அம்மா" எனும் சொல்லால்
மகிழ வைத்தாயே- பிஞ்சு காலால்
நெஞ்சில் உதைத்த போதும் உன்
நெஞ்சில் சுமந்து
அன்பு மழை பொலிந்தாயே
வானளவு உயர்ந்த உள்ளம்
கடலளவு ஆழ்ந்த அன்பு- அன்பை
மட்டுமே அள்ளிக் கொடுக்கும்
அமுதசுரபி அம்மா

*டயானி.லி*
*மறவன்புலோ மத்தி*

## உனக்காக தவிப்பேன்

அம்மா உன் இடைமீது
நான் இருக்கையில்
சிலவேளை என் மனம்
தவிப்பில் துடித்திருக்கும்
நான் அழுதால் நீ அழுவாய்
நான் சிரித்தால் நீ சிரிப்பாய்
நான் உறங்கினால் நீ ரசிப்பாய்
என் தலைகோதி மடிசாய்ப்பாய்
உன் அன்பில் நான்
நனைந்திருப்பேன்
இத்தனைக்கும் நீ இல்லாமல்
போயிருந்தால் நான்
தனிமரமாய் எங்கிருந்திருப்பேன்

*பு.பிரசாத்*
*அல்லைப்பிட்டி*

## பெருமை

பெண்ணாகப் பிறந்ததனால்
பேதையென் றெண்ணாதே?
மண்ணையும் மனையையும்
ஆள்பவள் பெண்தான்!
உண்ணாமல் உறங்காமல்
கண்ணாகக் காப்பவள்!
பெண்கள் போதைப்பொருளல்ல
போற்றுதற்குரியவர்கள்
விண்ணரும் பிறந்தது
பெண்ணாலே! பெண்ணாலே!

*அபீ அருண் நிஷாந்தினி*
*யாழ்ப்பாணம்*

## காத்திருப்பு

கார் இருட்டின் நடுவே
கடல் அலைகளின் மேலே
படகெடுத்துப் போன
கணவனின் வருகைக்காக
கால்கடுக்க வாசலிலே
காத்து நிற்கிறாள் காரிகை
கையில் குழந்தையுடன்
நம்பிக்கை இழக்காமல்

*யோ.காண்டீபன்*
*மானிப்பாய்*

## அதனால்

பொத்திப்பொத்தி வளர்த்திடு தாயே
பித்துப்பிடிக்கவைத்து
கொத்திக் குதறிக் கனவுகள்
பத்தி எரிந்திட-நாளை
தத்து எடுத்திடும் வாழ்க்கைத்துணை
அதனால்...

*துர்க்கா*
*மிருசுவில்*

## மனமே

தாய்மொழியே
புரியாத குழந்தை
உள்ளத்தையும்
புரிந்துகொள்ளும்
கள்ளம் இல்லாதவள் தாய்
தாயின் பரிவு
எந்த குழந்தைக்கும்
உயர்வு தருகின்றது
வாழ்வே புரியாத
அநாதைக்குழந்தைக்கும்
தாய் உள்ளத்தை
அறியவைப்பவள் தெய்வம்

*க.அபர்ணா*
*வட்டுக்கோட்டை*

## அன்னையின் அரவணைப்பு

நடைபெற்ற பெரும் போரில்
காணாமற்போன கணவனை
மீண்டும் வரவேண்டுமென்று
படைத்த கடவுளை வேண்டும் வேளை
அடைமழை பொழிந்ததால்
உடைந்த வீட்டினுள் வெள்ளம்
குடையுமில்லை பிடிப்பதற்கு
அம்மா படுந்துயரமறியாத பிள்ளை
அன்னையின் அரவணைப்பில்
ஆனந்தமாய் தூங்குகிறான்

**துரை, தென்மட்டுவில்**

## வாழ்விற்கு ஏங்கும் அபலைப்பெண்ணே

ஆணினத்தால் வஞ்சிக்கப்பட்டு
கைக்குழந்தையோடு
வாழ்விற்கு ஏங்கும்...
அபலைப்பெண்ணே!
கோழைகள்போல்
மனம் நொந்துன்
உயிரை மாய்த்துக்கொள்ளாதே...!
மானத்தோடு வாழ்வதற்கு
கற்ற கல்வியை
கையிலெடுத்து
உழைத்து முன்னேற
உறுதியை வளர்த்துக்கொள்

*வ.ச.செல்வராசா*
*திருநாவலூர்*

# மௌனத்தின் தேடல் -276



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 25.11.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மோடியை வீழ்த்திய மூவர்



நரேந்திர மோடி

இந்தியாவின் சகல பிரச்சினைகளுக்கும் சர்வ ரோக நிவாரணியாக விளம்பரம் செய்யப்பட்ட மோடி பிராண்ட், பீகாரில் வேலை செய்யவில்லை ஏற்கனவே அது டில்லியிலும் செல்லுபடியாக வில்லை. படா படா வாக்குறுதிகளை எல்லாம் அள்ளித் தெளித்து ஆட்சிக்கு வந்த நரேந்திர மோடி, 18 மாத காலத்தில் சிறு சலனத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை, பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவு காட்டியிருக்கிறது.

இந்தக் குரல், பா.ஜ.கவுக்கு வெளியே அல்ல... உள்ளேயே கேட்கிறது. " டில்லி சட்டமன்றத் தேர்தல் தோல்வியில் இருந்து கட்சி பாடம் கற்காததையே, பீகார் சட்டமன்றத் தேர்தல் தோல்வி காட்டுகிறது' என அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, அருண் ஷோரி, யஷ்வந்த் சின்கா, சாந்தகுமார், கே.என். கோவிந்தாசார்யா உள்ளிட்ட பா.ஜ.க தலைவர்கள் தங்களது கோபத்தையும் கொந்தளிப்பையும் வெளிக்காட்டியுள்ளார்கள். அத்வானியும் ஜோஷியும் அந்தக் கட்சியை உருவாக்கியவர்களில் முக்கியமானவர்கள் மோடி, இந்த அளவுக்கு வளர பாதயாத்திரைப் பாதை போட்டுக்கொடுத்தவர்கள். இவர்கள் வெளியிட்ட அறிக்கைதான், பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளை விட மோடிக்கு மோசமானது.

"நானே', 'நான்மட்டுமே', "நான் போதுமே' என்ற முடிவுகளோடு செயற்படும் மோடி மாதிரியான ஆட்கள், எல்லா வெற்றிகளுக்கும் தங்களுக்குத் தாங்களே மகுடம் சூடிக்கொள்வார்கள். சிறு தோல்வியையும் அடுத்தவர் மீது போடுவார்கள். "வெற்றிக்குக் காரணம் இருவர் தோல்வி என்றால் கட்சி!'

பீகார் சட்டமன்றத் தேர்தலை, மினி நாடாளுமன்றத் தேர்தல்போல உருவகப்படுத்தியவர்கள் மோடி - அமித் ஷா இருவரும்தான். கடந்த இரண்டு மாத காலமாக பீகாருக்குள் 30இற்கும் மேற்பட்ட கூட்டங்களில் மோடி பேசினார். 80இற்கும் மேற்பட்ட கூட்டங்களில் அமித்ஷா பங்கேற்றார். நிதீஷ்குமாரை வீழ்த்துவது என்பது தனது வாழ்நாள் இலட்சியங்களில் ஒன்று என மோடி நினைத்தார். அதற்கு தனிப்பட்ட காரணம் ஒன்று இருந்தது. அகில இந்தியாவிலேயே நரேந்திர மோடிக்கு எதிராக முதல் எதிர்ப்புக் குரல் எழுப்பியவர் நிதீஷ்குமார்.

தனனை பிரதமர்வேட்பாளராக மோடி முன்னிலைப் படுத்திக்கொள்ள முன்னேறி வந்தபோது, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்த நிதீஷ்குமார், "மோடியை நாங்கள் ஏற்க மாட்டோம்' என, முதலில் அறிவித்தார். மோடிதான் வேட்பாளர் என முடிவானதும அந்தக்கூட்டணியில்இருந்தே விலகினார். எனவேதான் பீகாரில் பா.ஜ.க ஆட்சியை உருவாக்கு வதைவிட, நிதீஷ்குமாரை அழிப்பதே மோடியின் முதல் இலக்காக இருந்தது. அதனால்தான், நிதீஷ் - லாலு - காங்கிரஸ் ஆகியோர் அடங்கிய கூட்டணியை "த்ரீ இடியட்ஸ்' எனத் தரம் தாழ்ந்து விமர்சிக்கும் அளவுக்கு மோடி தரையில் தவழ்ந்தார். ஆனாலும் தரைதட்டியது பா.ஜ.க கப்பல். மதச்சார்பற்ற மகா கூட்டணி, மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது.



லாலு - நிதீஷ்குமார்

தாங்கள் வெல்வோம் என ஆரம்பத்தில் லாலுவுக்கே நம்பிக்கை இல்லை. மாட்டுத் தீவன ஊழலில் சிக்கிய லாலுவுக்கு அந்தப் பெயர் இன்னமும் அழியவில்லை. தொடர் தோல்விகளில்தான் உட்கார்ந்து கொண்டிருந்தார். நிதீஷ்குமார் ஒன்றும் பீகாரில் மிகச் சிறந்த ஆட்சியைக் கொடுத்துவிடவில்லை. இநதச் சூழ்நிலையில் மாஞ்சியிடம் விபர்மே இல்லாமல் முதலமைச்சர் பதவியைக் கொடுத்து, பரிதாபமாக மாட்டிக்கொண்டார் நிதீஷ். காங்கிரஸைப் பற்றி சொல்லவே வேண்டாம். "லாலு-நிதீஷ் கூட்டணியில் தங்களுக்கு இடம் கிடைத்தால் போதும்' என நினைத்தது காங்கிரஸ்.

இப்படிப்பட்ட மூன்று பலவீனங்கள் சேர்ந்து வென்று காட்டியதற்குக் காரணம் மோடி - அமித்ஷா கூட்டணியின் அதிகப் படியான பிரசாரங்களே. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அனைவரையும் வீழ்த்தி வென்ற மோடி, இந்த 18 மாதங்களிலும் "படம்' மட்டுமே காட்டிக்கொண்டிருக்கிறார். "வளர்ச்சி, "வல்லரசு' போன்ற வார்த்தைகளைத் தாண்டி யதார்த்தத்துக்கு அவர் இன்னும் வரவே இல்லை. மக்களுக்கு முதலில் தேவை அடிப்படை வசதிகள் அடுத்து அமைதி. இந்த இரண்டையும்தருபவர்களே மக்கள் மனதை ஈர்க்க முடியும். "வளர்ச்சியைக் கொண்டுவருகிறேன்', "வல்லரசு ஆக்குகிறேன்' என மோடி, 18 மாதங்களும் சொப்ட்வேர் கம்பனி பிசினஸ் ஹெட்போல ஓடர்கள் பிடிக்க அயல்நாட்டில் அலைந்தாரே தவிர, சொந்த நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க நேரம் செலவிடவில்லை.

நாடாளுமன்றத்துக்குச் சரியாக வரவில்லை... வந்தாலும் விவாதங்களில் பேசவில்லை. "நாடாளுமன்றக் கூட்டம் நடக்கும் போதே வெளிநாட்டில் இருந்த பிரதமர்' எனப் பெயர் எடுத்துவிட்டார் மோடி. எந்தப் பெரிய பிரச்சினைக்கும் தனது ஆட்சியின் கருத்தாக, சொந்தக் கருத்தாக மறந்தும்கூட எதையும் சொல்வது இல்லை... பத்திரிகையாளர்களைச் சந்திப்பதும் இல்லை. வெளிநாட்டுப் பயணத்தின்போது பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்று விளக்கம் தருவது வழக்கம். அதுவும் இப்போது மெள்ள மறைகிறது.

"கறுப்புப் பணம் மீட்கப்படும்' என்றார்கள். கறுப்புப் பணம் எவ்வளவு இருக்கிறது என்ற முழு விபரமே வெளியாகவில்லை. "விலைவாசி குறையும்' என்றார்கள். அது ஏகத்துக்கும் எகிறிக்கிடக்கிறது. வெளிநாட்டு முதலீடுகளின் பூச்சியங்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறதே தவிர, முதலீடு பளிச்செனத் தெரியவில்லை. "பாகிஸ்தான் இந்தியாவை அடிக்கிறது' என்றால், "பலவீனமான பிரதமர் இருந்தால் அடிக்கத்தான் செய்யும்' எனக் கிண்டலடிததார் மோடி. ஆனால, அவர் பிரதமரான பிறகும் பாகிஸ்தான் அடிக்கவே செய்கிறது. எல்லை தாண்டிய ஊடுருவல் தொடர்கிறது. இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை இழுத்துச் செல்வதற்கு நிரந்தரத் தீர்வு இல்லை... நித்தமும் நடக்கிறது. "கடலோர மாநிலங்களைச் சேர்த்து கூட்டமைப்பு அமைக்கப்படும். தமிழ்நாட்டுக்கு இலங்கையால் பிரச்சினை என்பதைப்போல, குஜராத் மீனவர் களுக்கு பாகிஸ்தானால் பிரச்சினை' என மோடி சொன்னதைக் கேட்ட போது நன்றாக இருந்தது. ஆனால், அப்படி ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்படவே இல்லை. வாக்குறுதிகள் அப்படியே கிடக்கின்றன.

அதிகப்படியான வாக்குறுதி, விளம்பரங்களால்தான் ஆபத்தே. தகுதிக்கு மீறி மோடி விளம்பரப்படுத்தப் பட்டதால்தான், விழி பிதுங்கி நிற்கிறார். உடை மாறிக் கொண்டே இருக்கிறது. இறுக்கமான முகம் இன்னமும் மாறவே இல்லை.

ஏற்கனவே சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர்கள், மக்களை அச்சப்படுத்தும்தேவையற்ற வாக்குறுதிகளை தினமும் தந்தார்கள். பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கும் பாகிஸ்தானுக்கும் என்ன சம்பந்தம்? "பா.ஜ.க தோற்றால், பாகிஸ்தானில் வெடி வெடித்துக் கொண்டாடுவார்கள்' எனப் பேசினார் அமித் ஷா. தலித் சிறுவர்கள் இருவர் எரிக்கப்பட்டது தொடர்பான கேள்வி கேட்டபோது, "நாய் மீது கல் எறிந்தால் கூட மத்திய அரசு பொறுப்பேற்க முடியுமா?' எனக் கேட்டவர் மத்திய அமைச்சர் வி.கே. சிங். மாட்டு இறைச்சியை தேசியப் பிரச்சினையாக மாற்றி, மற்ற பிரச்சினைகளைப் பின்னுக்குத் தள்ளினார்கள். "இடஒதுக்கீட்டை ரத்துசெய்ய வேண்டும்' என ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் பேசினார்.

"இது எங்கள் கருத்து அல்ல' என் விளக்கம் சொல்வதிலேயே பா.ஜ.க-வின் பெரும்பாலான நேரம் கழிந்தது. பீகார் வாக்காளர்களை பீதி அடையவைத்தவை இந்த வாக்குறுதிகள் தான். இதை அருண் ஜெட்லியால்கூட மறைக்க முடியவில்லை. "பா.ஜ.க தலைவர்கள் வாய்க்கு வந்தபடி பேசியது தேர்தலில் எதிரொலித்துள்ளது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்' என அவரே புலம்பியிருக்கிறார்.

"எங்களின் தேர்தல் தோல்விக்கு யாரும் பொறுப்பு அல்ல. கட்சி, கூட்டாகவே வெற்றி பெறுகிறது. கூட்டாகவே தோல்வி அடைகிறது' என்றும்அருண் ஜெட்லி சொல்லியிருக்கிறார். ஆனால், இதை அத்வானியும் ஜோஷியும் ஏற்கவில்லை.

"பீகார் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க ஒருவேளை வெற்றிபெற்றிருந்தால் அதன் மொத்தப் புகழும் யார் யாருக்கு எல்லாம் உரித்தாகியிருக்குமோ... அவர்களே இந்தப் படு தோல்விக்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்' என மோடி - அமித்ஷா பக்கமாக பந்தை உருட்டியிருக்கிறார்கள் இந்தப் பழம்பெரும் தலைவர்கள்.

பீகார் சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு நடந்த தேசியச் சட்டப் பணிகள் ஆணையத்தின் ஆண்டு விழாவில் பேசிய பிரதமர் மோடி, "எந்த அமைப்பும் நிலையாக இருந்துவிட முடியாது. ஒவ்வோர் அமைப்பும் மாறிக் கொண்டே இருக்க வேண்டும். காலத்துக்கு ஏற்ற மாற்றங்கள் தவிர்க்க முடியாதது. நாம் சிந்திக்கும் முறையே மாறவேண்டியது அவசியம்' எனச் சொல்லியிருக்கிறார். முதலில் மாறவேண்டியது மோடியும் அமித் ஷாவும்தான்!

**ஜூனியர் விகடன்**

# நேபாளத்தின் மீது அறிவிக்கப்படாத பொருளாதார தடை



இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு கடந்த செப். 20ம் தேதி முதலாக நடை முறைக்கு வந்துள் ளது. 2006-ம் ஆண்டில் மன்னராட்சிக்கு எதிரான நேபாள மக்களின் பேரெழுச்சிக்குப் பின்னர், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு, மன்னராட்சி முறை 2008-ம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் கடந்த 8 ஆண்டுகளாக இழுபறியில் இருந்த புதிய அரசியலமைப்புச் சட்டம், தற்போது அரசியல் நிர்ணய சபையில் அறுதிப் பெரும்பான் மையுடன் இறுதியாக்கப்பட்டுள்ளது. நேபாள ஐக்கிய மா-லெ கட்சியின் தலைவரான பிரசாத் சர்மா ஒளி, நேபாளத்தின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்:

விகிதாச்சார பிரதிநிதித்துவ அடிப்படையில் அரசியல் கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறை,. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடுகள், குடிமக்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுதல், மைய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி - என மூன்று மட்டங்களில் அரசாங்கம் இயங்குதல் முதலான அம்சங்களைக் கொண்டுள்ள இப்புதிய அரசியல் சட்டம், நேபாளத்தை மதச்சார் பற்றக் குடியரசாக அறிவித்துள்ளது.

இதுநாள்வரை, உலகின் ஒரே இந்து நாடு என்று நேபாளத்தைப் பெருமையுடன் குறிப்பிட்டு வந்த இந்துத்துவ சக்திகள், இப்போது அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் நேபாளத்தை மதச்சார்பற்ற குடியரசாகப் பிரகடனம் செய்துள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்துள்ளன. பசுபதிநாதர் கோயில் பூசாரியை மாற்றியதற்கே நேபாளத்தில் தலையிட்ட இந்தியா, இப்போது தன்னை மதச்சார் பற்ற நாடாக நேபாளம் அறிவித்துள்ள நிலையில் சும்மா இருக்குமா?

இச்சட்டம் இறுதியாக்கப்பட்ட பிறகு, இந்திய அரசு தனது வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கரை நேபாளத்துக்கு அனுப்பி அரசியலமைப்புச் சட்டம் பிரகடனம் செய்யப்படுவதை நிறுத்திவைக்க நிர்ப்பந்தித்தது. அது பலனளிக்காமல் போனதால், இந்திய எல்லையை ஒட்டிய நேபாளத்தின் தென்பகுதியில் வாழும் மாதேசியினரைக் கொண்டு கலகத்திலும் சீர்குலைவு நடவடிக்கைகளிலும் இந்திய அரசு இறங்கியது.

மாதேசிகள் எனப்படுவோர் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னர் நேபாளத்தின் தென்பகுதி எல்லையில் குடியேறிய இந்திய வம்சாவளியினர். இவர்களில் பெரும்பான்மையோர் நிலப்பிரபுத்துவ ஆதிக்கஅமைப்பினராவர். இன்றும் கூட உ.பி., பீகார் பகுதிகளில் இரத்தவழி உறவுகளையும் வர்த்தக உறவுகளையும் கொண்டுள்ளவர்கள். ஏற்கெனவே மாதேசிகளைக் கொண்டு நேபாள அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற விடாமல் பல வழிகளிலும் சீர்குலைத்து வந்த இந்திய அரசு, இப்போது அவர்களைக் கொண்டு நேபாள அரசியல் சட்டத்துக்கு எதிரான கலவரங்களைத் தூண்டிவிட்டு வருகிறது. மாதேசிகள் நடத்திவரும் கலவரங்களினால் இதுவரை 40-க்கும் மேற்பட்டோர் மாண்டு போயுள்ளனர்.

மாதேசிகள் அடர்த்தியாக வாழ்ந்துவரும் பகுதிகள், நேபாளத்தின் புதிய மாகாணங்கள் பலவற்றிலும் பிரிக்கப்பட்டு, அவர்கள் நாடாளுமன்றத்திலும் அரசு அதிகாரத்திலும் முக்கிய பங்கு வகிக்க முடியாதவாறும், நேபாளிகளே அதிக அளவு பிரதிநிதித்துவம் பெறும் வகையிலும் புதிய அரசியல் சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாதேசி மக்களைக் கொண்டு நேபாள அரசியலில் தலையிட்டுத் தனக்குச் சாதகமான சூழலை உருவாக்கிக் கொள்வதுதான் இந்தியாவின் நோக்கமாக உள்ளது. இதன்படியே, அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'மதச்சார்பின்மை' என்ற சொல்லை அகற்ற வேண்டுமெனவும், மாதேசிகளுக்கென தனி மாநிலம் அமைக்கப்பட வேண்டுமெனவும் கருப்புக் கொடியேற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் நகலை எரித்து, இந்திய உளவுத்துறை அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் கலவரங்களை நடத்திய மாதேசிகள், இந்திய எல்லையை ஒட்டிய நெடுஞ்சாலைகளை மறித்து சரக்குப் போக்குவரத்தை முற்றாக முடக்கி வைத்துள்ளனர்.

### நேபாள இளைஞர்கள் ஆர்ப் பாட்டம்

"நேபாளத்தில் தலையிடாதே! பொருளாதாரத் தடை விதித்து அச்சுறுத்தாதே!" என்ற முழக்கத்துடன் இந்திய அரசுக்கு எதிராக நேபாள மாணவர்கள் - இளைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

தமது நாட்டுக்குள் நுழையும் அனைத்து அந்நிய வாகனங்களுக்கும் முழுப் பாதுகாப்பு அளிப்பதாக நேபாள அரசு உறுதியளித்துள்ள போதிலும், மாதேசிகள் நடத்தும் போராட்டம் காரணமாக இந்தியாவிலிருந்து சரக்கு வாகனங்களை அனுப்ப முடியவில்லை என்று நியாயவாதம் பேசிக்கொண்டு சரக்கு போக்குவரத்தை இந்திய அரசு வேண்டுமென்றே முடக்கி வைத்துள்ளது. இதனால் எரிபொருள், மருந்து, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதலானவை கிடைக்காமல் நேபாள மக்கள் தத்தளிக்கின்றனர். அமெரிக்க மேலாதிக்க வல்லரசு கூட ஒரு நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை, தனது சூப்பர்-301 சட்டத்தைக் காட்டியோ அல்லது ஐ.நா. மன்றத்தின் மூலமோ அறிவித்து விட்டுத் தான் செய்கிறது. ஆனால், நேபாளத்தின் புதிய அரசியல் சட்டத்தை வரவேற்பதாகக் கூறிக் கொண்டே, மறுபுறம் அந்நாட்டின் மீது அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை விதித்து இந்தியா அச்சுறுத்தி வருகிறது.

இப்பொருளாதாரத் தடையை நீக்கக் கோரி நேபாள துணைப் பிரதமர் கமல் தாபா, டெல்லிக்கு வந்து 3 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரும், நேபாளத்தின் மீதான இந்தியாவின் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடை இன்னமும் நீக்கப்படவில்லை.

தெற்காசிய மேலாதிக்க வல்லரசாக உள்ள இந்தியா, நேபாள விவகாரத்திலும், இலங்கை, மாலத்தீவுகள், பூடான் முதலான அண்டை நாடுகளின் உறவிலும் *பெரிய அண்ணன* அணுகுமுறையைத்தான் தொடர்ந்து பின்பற்றி வருகின்றது. அது இப்போது உச்சத்துக்குச் சென்றுள்ளது. தங்கள் நாட்டுக்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள நேபாளத்துக்கு உள்ள சுயாதிபத்திய உரிமையை அலட்சியப்படுத்தி, தனது இந்துத்துவ மற்றும் பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கு ஏற்ப நேபாளம் இருக்க வேண்டுமென நிர்பந்திக்கும் வகையில்தான் இந்திய அரசின் அணுகுமுறை உள்ளது.




மாதேசி விவகாரத்தை வைத்து இந்திய அரசு மூக்கை நுழைப்பதை, இந்தியா தேவையில்லாமல் தலையிடுவதாகவும், வரம்பு மீறுவதாகவும் நேபாள ஊடகங்கள் கடுமையாக எதிர்த்துச் சாடி வருகின்றன. நேபாளத்தில் ஒளிபரப்பாகும் இந்தியத் தொலைக்காட்சிகளை அந்நாட்டு ஆபரேட்டர்கள் நிறுத்தியுள்ளனர். இந்தியாவின் இப் பொருளாதார முற்றுகையானது, நேபாள சாமானிய மக்களிடம் ஆத்திரத்தைக் கிளறிவிட்டு, இந்தியாவின் தேசியக் கொடியும் இந்தியப் பிரதமர் மோடியின் உருவப் பொம்மைகளும் தீயிடப்பட்டு ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.

"சார்க்" நாடுகளுக்கிடையே வர்த்தக ரீதியான வாகனப் போக்குவரத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதற்கு நேர்மாறாக இந்தியாவின் செயல்பாடுகள் அமைந்துள்ளன என்று சாடுகிறார், வங்கதேச வர்த்தகத் துறை அமைச்சர். நேபாளத்தில் தலையீடு செயாதே என்று இந்தியாவின் பல்வேறு மனித உரிமை அமைப்புகள், பிரபல கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அறிவுத்துறையினரும் கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டு இந்திய அரசின் இம் மேலாதிக்க நடவடிக்கையைக் கண்டித்துள்ளனர்.

ஆனாலும், நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாட்டுக்குச் செல்லும் அத்தியாவசியப் பொருள் போக்குவரத்தை அண்டை நாடுகள் தடை செயக் கூடாது என்ற அனைத்து நாட்டு பொதுவிதிகளுக்கு எதிராகவே இந்தியா நடந்து கொள்கிறது.

ஏற் கெனவே பின்தங்கிய நிலையிலுள்ள நேபாளத்தில் கடந்த ஏப்ரலில் நிலநடுக்கப் பேரழிவு ஏற்பட்டு அந்நாட்டின் மக்கள் இன்னமும் மறுவாழ்வின்றி தத்தளிக்கின்றனர். குளிர்காலம் நெருங்கும் சூழலில் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடை விதித்து, நேபாளத்தை இந்து நாடாக்கு,



இல்லையேல் பட்டினியிலும் குளிரிலும் செத்துத் தொலை என்று மறைமுகமாக எச்சரிக்கிறது இந்திய மேலாதிக்க அரசு. அநீதியான, மனித நேயமற்ற இப் பொருளாதாரத் தடையையும் நேபாளத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கத்தையும் எதிர்த்து இந்திய குடிமக்கள் அம்பலப்படுத்திப் போராடுவதுமட்டும்தான், இந்தியாவின் பொருளாதார முற்றுகையால் பரிதவிக்கும் நேபாள மக்களுக்கு உதவும் உண்மையான ஒரேயொரு கருவியாக தற்சமயம் உள்ளது.

சர்வதேச ஊடகம்- குமார்

# அம்மா எங்கேப்பா...?



## சிறுகதை

"அப்பா! அம்மா எங்கேப்பா? அம்மா எங்கேப்பா..?" தலையை இருகைகளாலும்சொறிந்தபடிமழைத் தண்ணியில்நனைந்தவளாக இடைவிடாமல் கேட்டுக்கொண்டே இருந்தாள் இசையாள். "உனக்கு எத்தினை தரம்சொல்லுறது அம்மாகடவுளிட்டை போட்டா எண்டு. தண்ணீக்கை நிக்காமல் உள்ள போ...! போ... அவளுக்கு என்ன? நிம்மதியாய் போய்ச் சேர்ந்திட்டாள். நான் தனியக் கிடந்து சீரழியிறன்."

மழையில நனையாமல் முதலில் உள்ள போ...! கோபம் தாங்கமுடியாமல், அவளைவிரட்டி உள்ளே அனுப்பினான். கொட்டும் மழையின் வெள்ளம் உள்ளே வரவிடாமல் அணை போட்டுக்கொண்டிருந்த ராகவன், தன் காலைப் பார்ப்பதும், சரிசெய்வதும் என்று மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கநனைந்துநனைந்துவெள்ளத்துக்கு அணை போட்டுக்கொண்டு இருந்தான். ஓலையில் இருந்து வடியும் தண்ணீர் ஒழுக்குகளில் விளையாடிக்கொண்டு இருந்தாள் இசை.

தொப்பு, தொப்பு என்று விழும் தண்ணிக்கு பாத்திரம் வைத்தாள் மீனாட்சி. "இசை நனையாதை சளி பிடிச்சு காய்ச்சலாக்கிபோடும் பிறகு நான் ஆஸ்பத்திரிக்கு கொண்டுதிரய ஏலாது. சொல்லிப்போட்டன். உன்னை வைச்சு என்ன செய்யப்போறேனோ ஆண்டவனுக்குத்தான்தெரியும்" புறுபுறுத்துக் கொட்டினான் ராகவன். மழையில் நனைந்து தோய்ந்தவனின் தலையை துடைத்து கோப்பி கொடுத்தாள் மீனாட்சி.

"அப்பம்மா... எனக்கு?"

"ம்ம்... மழையில விளையாடிக் களைச்சுப்போய்இருக்கிறாகுடுங்கோ... அவாவுக்கு. விளையாடும்நேரத்துக்கு இரண்டு வாய்ப்பாடு பாடமாக்கியிருக்கலாம்.

"அடுத்த வருஷந்தானே.. ரைம் இருக்கே. இப்ப என்ன அவசரம்..?" இசையின் வாய்த்துடுக்கு அப்படி.

"நாங்கள் தான் ஒண்டும் ஒழுங்காப் படிக்கேல..." இது ராகவன்.

"அதுக்குத் தான் சொல்றன்..." இது மீனாட்சி.

"சரி, சரி விடு....ஆ...ஆ..அம்மா" என்றபடி காலை தூக்கினான் ராகவன். "அப்பம்மா... அப்பாவுக்கு நீங்களா அம்மா...? அப்ப...எண்ட அம்மா... எங்க? நானும் அம்மாட்டை கடவுளிட்டை போகட்டா..?"

"இசை... இங்கே வா... அதெல்லாம் அப்பம்மாக்கு தெரியாது பேசாமல் போயிரு..

அம்மா கொஞ்சம் இளம் சுடு தண்ணி தாங்கோ... கால்வலிக்கிது."

"தெரிஞ்சும்தெரிஞ்சும்... நீ போய் தண்ணியில நிண்டால் சரியே..?"

"என்ன.. என்னம்மா..! நாங்கள் குளிருக்கை நனைஞ்சு கிடந்தாலும் பரவாயில்லை. பிள்ளையை என்ன செய்யிறது.?"

இதுக்குத்தான் ஆயிரம்தடவை கெஞ்சிக்கேட்டன். அவள் பவித்திராவை கட்டு எண்டு. அவளைக் கட்டினால் மாமாவுக்கும் நிம்மதி. உன்னைவிட அவள்வயசும்குறைவு தானே. இந்த நேரத்திலதானே அவளுக்கும்சரி உனக்கும்சரி மனசுக்கு ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும். மாமா அவுஸ்திரேலியா அனுப்புறதைவிட அவள் இங்க இருந்திட்டால் அவரின்டை கடைசிக்காலமும்சந்தோசமாய் இருக்கும்... ம்ம்ம் என்ன செய்வம் எல்லாம் விதிதான்...

...நாங்கள் என்ன பாவம் செய்தும்நானும்அப்பாவைஇழந்தன். நீஉன்ரை பெண்சாதியை இழந்தாய். பவி, புருஷனை இழந்தாள்... இசைக்கு அம்மா இல்லை... என்டை ஐயோ.. என்டை ஐயோ. எங்களை ஏன் சித்திரவதை செய்யிறாய்? நாங்கள் யாருக்கு என்ன பாவம் செய்தும்...தலையில்அடித்து அழுதாள்" மீனாட்சி.

அடிக்கடி அவள் இப்படி புலம்பிப் புலம்பியே.. உருமாறிப்போனாள். இவள்மனதின் ஆசைகள் அண்ணன் சுந்தரமூர்த்திக்குத்தெரியும்.

மழைபெய்துகொண்டிருந்தது. தாழ்வாரத்தில் குடையை சுழட்டியவளாய் "மாமி.. மாமி.. மழைஓயவிட்டுஉங்கள அப்பா ஒருக்காவந்திட்டுப்போகட்டாம்." பட்டாம் பூச்சியாய் சிறகடித்தாள் பவித்திரா.

"உள்ளே வா... பிள்ளை. இந்த மழையில என்ன அவசரமாம். அண்ணைக்கு வயசுபோயும் இன்னும் அவதிக்குணம் போகேல்லை நான் கத்தினது ஏதும் கேட்டுதோ... பேசப் போறார்போல..."

மீண்டும் "சாப்பிட்டியா பிள்ளை... உள்ளேவா..." கண்ணீரை தோள்மூட்டு கையினால் தேய்த்து மூக்கை உறுஞ்சினாள்.

"இசை... படுத்திட்டாளா ... மாமி..?" அவளைத் தொட்டுபார்த்தாள் பவி.

"இவள நேரம்.. மழையில விளையாடிட்டு தகப்பனிட்ட பேச்சு வாங்கீட்டுக் கிடக்கிறா. அது வர வர கேக்கிற கேள்வியள் என்ன பிள்ளை? இப்ப உள்ள பிள்ளைகளின்ரை அறிவோ.... செ..! அடம்பிடிப்பும் கூடிப்போட்டுது." இசையைப்பற்றி புராணம்வேற புழுகினாள் மீனாட்சி. அவளின் கனவெல்லாம் எப்படியும்பவியைதன்னுடன் இழுத்துப் போடவேண்டும் என்பதுதான்.

"செல்லக்குட்டி ... மாம்பழம் ..!" அவளை ஆசையுடன் கிள்ளிக் கொஞ்சினாள் பவி. "இரண்டு மணியாச்சு சாப்பிட்டாளா மாமி?"

"இல்லைப் பிள்ளை கோப்பி குடிச்சவள். விறகும் நனைஞ்சுஎரியுதில்லை. அடுப்பில கஞ்சி கிடக்கு அவ எழும்ப சரிவரும்."

அடுப்படிக்கு வந்து, என்ன இருக்கு என்று துழாவினாள் பவி. பிள்ளைக்கான சாப்பாடு எதுவும் இல்லை. கொஞ்சம் அரிசி, வெங்காயம், பாதி தேங்காய் என்று ஒரு சில மட்டுமே குசினியின் அடையாளமாக இருந்தது.

"அந்தநேரம்நெல்லுமூட்டைவைக்கவே இடம் இருக்காது என்ன மாமி? இப்ப குசினியில பூனைதான்...ம்ம்."

*தென்றல்...!!! பவிக்கு தன் மகளின் ஞாபகம்வந்தது... அவள் இருந்திருந்தால் இப்ப எனக்கும் இவள் மாதிரி ஒருத்தி இருந்திருப்பாள்.* என மனம் எண்ணிக்கொள்ள இசையை இரசித்தாள் பவி...

"மாமி..மாமி.. எனக்கு வெளிநாடு போக விருப்பம் இல்லை... மாமி. எங்காவது நல்ல வேலை கிடைச்சால் அது காணும் எனக்கு. அப்பாதான்..., பயந்து பயந்து சாகிறார். நீங்கள்தான் மாமி இவருக்குவிளக்கமாய்சொல்லவேணும். வெளிநாட்டிலும் யார்தான் நிம்மதியாக இருக்கினம் எனக்கு அங்க என்ன தெரியும்மாமி? அதுவும் அறிமுகம் இல்லாத எயன்சியோட..ம்..

ஆ... நான் அடுத்த கிழமை வேலை தேடி கொழும்புக்கு போகப்போறன்."

"எதுக்கு கொழும்புக்கு? அங்கையும் என்னவோ ஏதுவோ... ஒன்றும் தெரியாமல் அங்கை போயிற்று.. என்ன வில்லங்கமோ..?"

"யாழ்ப்பாணம் வவுனியா கிளிநொச்சி எண்டால் இப்ப வேல எடுக்கிறது கஷ்டம்.. அதுவும் எங்களைப் போல இருக்கிறவை பாடு அவ்வளவு தான். நானும் வாழத்தானே வேணும்... அப்பாடை பென்சன் என்னத்தைக் காணும்.

அண்ணா தாங்கள்பார்ப்பம்எண்டு, மாதம் மாதம் கொஞ்ச காசு அனுப்புவார்... அவரும் அந்தக் குளிருக்க என்ன கஷ்டப்படுகிறாரோ யாருக்குத் தெரியும்?

எனக்குத் தானே ஆண்டவனே எண்டு கால் கை இருக்கே, படிச்ச படிப்பும் இருக்கு... அப்பாவை கடைசி காலம் யாரை நம்பி யாரிட்டை விட்டுப் போறது..? நான் பிறகு யாருக்காக வாழ வேணும்மாமி...?

அப்பாவுக்குப் பிறகு, என்ரை காலத்துக்கு... இப்பவே அநாதை மடத்தில சொல்லி வைச்சிருக்கிறன். அவர்களுக்கு உதவியாய் அங்கே வந்திடுறன் என்று."

"விசராடி உனக்கு? படிச்ச பிள்ளையா நீ...? விசர்க்கதை கதையாதை.. அநாதை மடம் போகவா உன்னை...!" அவளைக் கட்டியணைத்து அழுதாள் மீனாட்சி.

"வேற என்ன மாமி செய்ய?"

"ம்ம்ம் .. " குளமான கண்களை துடைக்கும்வேளையில்

"அம்மா... தண்ணி எங்க...?" ராகவன் சிடுசிடுத்தான்.

"வாறன்.. வாறன்...

தண்ணி அடுப்பிலதான் இருக்கு... வாயாலைதான் கதைக்கிறம்."

"ம்ம்ம்..கதைகண்டால்சரி." "கோபப்படாதீங்க ரகு அண்ணா ... உங்களுக்கு இன்னும்தான் சுடுதண்ணிக் குணம் விட்டுப்போகேல்லையா?"

"ப...வி...!" தூரத்தே அப்பா கூப்பிடுவது கேட்டது.

"வரட்டாம் போ... இப்ப நீ போய் பேச்சு வாங்கு..!" கிண்டல் அடித்தான் ராகவன். குறும்புத்தனத்துடன் மாமியாரிடம் விடை பெற்று ஓடினாள் பவி.

இளம் சூட்டு நீரினால் தனது கால்களுக்கு டெட்டோல் போட்டுக் கழுவித் துடைக்க மழையும் ஓய்ந்தது. கஞ்சியைக் குடித்துவிட்டு திண்ணையில் பாயைப்போட்டுப் படுத்துவிட்டான் ராகவன்.

சுந்தரமூர்த்தியிடம் போயிற்று வந்த மீனாட்சிக்கு மனம் கொஞ்சம் நிறைவாய் குளிர்ந்தது. ஆனால், ஆனாலும், உறுதிப்படுத்துவதில் தடுமாற்றங்கள் அதிகம்...

நாட்கள் மாதங்கள் ஆக...முன்பு, ராகவன் வீட்டிற்கு ஆடிக்கும் அமாவாசைக்கும் தலைகாட்டிய பவித்திரா இப்ப, அடிக்கடி அவன் வீடு வர ஆரம்பித்தாள்.

"அப்பா... அம்மா எங்கேப்பா..? இது மகள்.

"அம்மா போட்டா காணல..." இது தந்தை.

"பிள்ளையின்ரை அம்மா வரப் போறா... அப்புச்சாமி அம்மாவை பிள்ளையிட்ட போகச் சொல்லிட்டாராம்.." செல்லம் கொஞ்சினாள் மீனாட்சி.

"அப்பா..! அம்மா உங்களைப்போல பேசுவாவா? அடிப்பாவா? எனக்கு நிறைய சொக்கிலேட்.. .விக்கா எல்லாம் கொண்டு வருவாவா? நிறைய அச்சாச் சட்டை, சப்பாத்து... மாலை எல்லாம் வாங்கிக்கொண்டு வருவாவா? எனக்கு குட்டி சைக்கில் .. நிறைய போர்டு.. பென்சில் ஐபோன் எல்லாம் வாங்கி தருவா தானே...

அப்புச்சாமி எல்லாம் அம்மாட்டை குடுத்துவிடுவாரா அப்பா..?

அம்மாட்டை சொல்லுவன். ஒரே நீங்கள் அடிக்கிறநீங்கள்.. பேசிற நீங்கள் எண்டு... உங்களுக்கு அடிவாங்கித்தருவன்.

அவளை இறுகக் கட்டி அணைத்தபடி படுக்கையில் சரிந்தான் ராகவன். இசையாளுக்கு அடிப்பது தொடக்கம்... பேசுவது, கோபப்படுவது.. எல்லாம் நினைத்து அழுதான் ராகவன்.

ராகவன் மாவீரன் குடும்பம் என்பதால், அவன்மீது நேசம் அதிகம் காவியாவுக்கு. காவியா மாணவர் அணியில் தன்னை ஆரம்பத்தில் இணைத்து, பின்பு, தாயக சேவையில் தன்னை அர்ப்பணித்திருந்தாள். பெண்கள் அபிவிருத்தி குழுவின் தலைவியாக சேவையில் இருந்தமையால், வேலையின் நிமித்தம் ராகவனை சந்திக்க முடிந்தது. ராகவனும் பொறுப்பான வேலைகளில் இருந்தமையும் அவன் மீது காவியாவுக்கு ஈர்ப்பு அதிகமானது.

இருவரின் பெற்றோரின் சம்மதம் கிடைக்காததால், தமது பணிசார்ந்த உறவுகளின் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டனர். காவியா தன்னுடைய பணிக்காக சேவையில் நிற்கவும் ராகவன் தன்னுடைய பணிக்காக சேவையில் நிற்கவுமே அவர்களின் காலங்கள் அதிகமாய் கழிந்தது. ஆயிரம் தான் இருந்தாலும் ஆணாதிக்க மனநிலையில் இருந்து விடுப்புப் பெறுவது என்னவோ ராகவனால் இயலாத காரியமாகிப்போக, தன் நிலையில் நின்றும் மாறாதவளாகிப்போனாள் காவியா. ஏட்டிக்குப் போட்டியாக இருவரும் நடந்துகொள்வதும் விட்டுக் கொடுப்பின்மையும் இருவர் வாழ்க்கையையும் பாதிக்கவே செய்தது. அவள் மீது சந்தேகங்களும், முரண்பாடுகளும் ராகவனுக்கு நீடித்திருந்தது.

"நான் உங்களைப் புரிந்து கொள்ளாமல், தெரியாமல் ஆசைப்பட்டு விட்டேன் ரகு. அதுக்காக இரண்டாம் கலியாணம் நீங்கள் செய்தாலும் நான் செய்யப்போவதில்லை. என் படிப்பு எனக்குச் சோறு போடும். நான் யாரிடமும் பிச்சை கேட்டுப்போக மாட்டேன். எனக்கு இனி வாழவேண்டும் என்ற ஆசையோ விருப்பமோ இல்லை. ஆனால், என் சாவு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று ஆரம்பத்திலே நீங்கள் சொல்லியிருந்தால் நான் சித்திரவதையை அனுபவிக்காமல் சந்தோசமாய் வாழ்ந்திருப் பேன். என் தலைவிதி அவ்வளவு தான்.

உங்கள் உழைப்பில் வாழ்ந்தவள் என்று நினைக்கையில் என் மனமும் உடலும் கூசுகின்றது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இன்னும் இரண்டே மாதங்கள் தான்... குழந்தை பிறந்ததும் நான் போய்விடுகிறேன்..."

அதன் பின் எல்லா வகையிலும் நீங்கள் சந்தோசமாய் இருங்கள்... என்று ஆத்திரத்தின் முடிவாக கூறினாளாயினும், காலத்தின் தேவையும் அப்படியே அமைந்துவிட்டதால்... காவியா கூறியது போலவே போர்க்களம் சென்று விட்டாள்...

பழைய நினைவுகள் அவனை தூக்கத்துள்ளும் துக்கத்துள்ளும் தள்ள முயன்றுகொண்டிருந்தன...

"...கா...வி..யா.. என்னை மன்னிச்சுக் கொள் காவி...

பெண்பாவம் என்னைச் சும்மா விடாது..

உண்மைதான்டி காவி.. ஆ..ஆ.. ஆ..ஆ..ஆ.. பிள்ளையின்ரை முகத்தைக்கூட ஒருமாதம்தானே பார்த்தாய்... அவள் அடிக்கடி *அம்மா எங்கே. அம்மா எங்கே..* என்று கேட்டு என்னை சாகடிக்கிறாள்..காவியா..

இங்கைபார் ஆ... என்ரை இரண்டு கால்களும் முள்ளிவாய்க்காலில போவிட்டுது காவி...போவிட்டுது...

ஒருநேரச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இப்ப கஷ்டப்படுறன்... பார்...என்ரை காலைப்பார்.. கைகளைப் பார். எத்தனை காயங்கள்." விக்கி விக்கி அழுதான் ராகவன்.

"தம்பி! ராகவா..ராகவா.. என்னய்யா கனவே கண்டே நீ..

பிள்ளையைச்சரிச்சுப்படுக்க விடு.. எதுக்கு நெஞ்சிலையேவிட்ட நீ.. உனக்கு ஏலாது எண்டு தெரியும் தானே.."

படுத்திருந்தவாறே.. மகன் ஏதோ முனகுவதுபோல் இருக்க தாய்.. கூறிவிட்டுத் திரும்பிப் படுத்துக்கொள்கிறாள்.

"ரகு..! என்னை விட்டிட்டு சந்தோசமாய் இருக்கிறியள்தானே.. என்ன! நான் அப்பா இல்லாதவள்.. எனக்கு என்டை அப்பா கிடைச்ச மாதிரி சந்தோசத்தில... உங்களை எப்படி எப்படியெல்லாம் கனவு கண்டன்... தெரியுமா? உங்கட மனசில நான் இருக்கிறேனா ரகு..ரகு.. அப்பா.. அப்பா.. சொல்லுங்களேன் ..." என்றவள்... அவன் நெற்றியில் மெது வாக தனது மென்மையான கரங்களை வைத்துப் பார்க்கிறாள்... "என்ன இப்படிக் கொதிக்கிறதே... கொஞ்சம் இருங்கோ வாறன் தண்ணி எடுத்திட்டு..." என்றவள் மெதுவாக நகர்ந்தாள்...

காவியா...காவியா...எங்கே போறாய்..? இங்க இரு..காவி... காவி... இங்கை வா...

அவனின் உளறல் சத்தம் பெரிதாகக் கேட்டது.. தாய் திடுக்குற்று மீண்டும் எழுந்தாள்...

மகனிடம் ஓடிச்சென்று "ராகவா.. ராகவா..என்ன?" என்றுஉலுக்கினாள்.. அப்போதுதான் தெரிந்தது அவளுக்கு அவன் உடல் காய்ச்சலால் கொதித்துக் கொண்டிருந்தது.

அவன், காவியா.. காவியா.. அங்கே போறாள்...அவளை அங்கை போக வேண்டாம் எண்டு சொல்லுங்கோ ...

ராகவா...! ராகவா...! என மகனின் முகத்தை தண்ணீரால் துடைத்து, அவனை சுய நினைவுக்கு கொண்டுவந்தாள் மீனாட்சி. நீ கனக்க யோசிக்கிறாய். அவள், உன்னை ஆசீர்வதிச்சிட்டுப் போறாள் போல... முகத்தை இன்னொருக்கால் வடிவாகக் கழுவீட்டுப்படு... தண்ணி கொண்டுவந்துவச்சிருக்கிறன் காய்ச்சல் குறையட்டும் என்றாள் மீனாட்சி.


ரகுவின் கடந்தகால எண்ணங்களைத்துடைக்கபவித்திராவால்எப்படி முடியும்!

பவித்திராவின்இழந்தகனவுகளை மீட்க ராகவனால் எப்படிமுடியும்!

இருந்தாலும் இசையாளுக்காக.. ஒரு புரிதலின் சங்கமம் இப்போ அங்கே நிகழ்கிறது.

"அப்பா..! அம்மா.. எப்ப வருவா...ப்பா.." என ஏக்கத்தோடு காத்திருக்கும் இசையாள் வீட்டில் பூபாள இராகத்துடன்பட்டாம்பூச்சிசிறகடிக்கத் தொடங்கியது.

**யாழ். தர்மினி பத்மநாதன்**



ரஷ்ய பயணிகள் விமானத்துக்கு ஐ.ஸ்.ஐ.ஸ் தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டு பழரசப் பேணியில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

# ஐ.எஸ்.ஐ.எஸ் இன் பாரிஸ் தாக்குதலின்பின் தேசியவிடுதலைப் போராட்டங்கள்..?



அமெரிக்க நகரின் மையத்தையும் விரைவில் தாக்குவோம் என சூளுரைக்கும் ஐ.ஸ்.ஐ.ஸ் தீவிரவாதிகளின் தலைவர்களில் ஒருவர்

**உலக** வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களும் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் சம்பவங்களும் உலகின் அனைத்து பாகங்களையும் கதிகலங்க வைத்திருக்கின்றன.

தலைநகரின் வெவ்வேறு பகுதிகளில் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருக்கின்ற இந்த திட்டமிட்ட தாக்குதல்களும் அப்பாவிகளை பணயக்கைதிகளாக பிடித்துவைத்து படுகொலை செய்த பாணியும் தீவிரவாதம் என்பது எவ்வளவு குரூரபண்புகளை கொண்டது என்பதை இன்னொருமுறை உலகுக்கு இடித்துரைத்துச் சென்றிருக்கிறது.

தாக்குதலில்பலியான அப்பாவிகளுக்கு ஒருபுறம் அஞ்சலி செலுத்திக்கொண்டு, மறுமுனையில் தாக்குதலுக்கு காரணமானவர்களாக பிரகடனம்செய்யப்பட்டிருப்பவர்களை வேட்டையாடுவதற்கு பிரான்ஸூம் அதன் நேசநாடுகளும் புறப்பட்டுவிட்டன.

உலகின் ஓயாத கவலையாக கருத்தரித்துள்ள சிரிய பிரச்சினை இன்று ஐரோப்பாவை எவ்வளவு கொடூரமாக பிடித்து உலுப்பிக் கொண்டிருக்கின்றது என்பதற்கும் - இஸ்லாமிய தனிநாட்டுக்காக போராடுவதாக கூறும்ஐ.எஸ்ஐ.எஸ் அமைப்பு உலக நாடுகளின் கண்களில் எவ்வாறு விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருக்கிறது என்பதற்கும் ஐரோப்பாவில் வழிந்தோடும் இரத்தமும் அகதிகளுமே சாட்சியாக கண்முன் விரிந்துகிடக்கிறது.

அரபுநாடுகளில் ஆட்சிமாற்றங்களை கொண்டுவருவதற்காகவும் - இயலாவிடின் குறைந்தபட்சம் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காகவும்-அந்த நாடுகளில் அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களை உருவாக்கிவிடும் பாரம்பரியங்களை ஆரம்பித்த வல்லரசு நாடுகள் -தங்கள் தேவைமுடிவடைந்த பின்னர் அந்த ஆயுதக்குழுக்களை அப்படியே கைகழுவிவிட்டதன் ஒட்டுமொத்த கர்மவினையைத் தான் இன்று சிரியாவில் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

கால தாமதமானாலும் பரவாயில்லை அவற்றை இப்போதாவது அழிக்கலாம் என்று கங்கணம் கட்டியிருக்கும் அமெரிக்காவுக்கும் அதன்நேச நாடுகளுக்கும் எதிராக ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பும் தமது பாணி தாக்குதல்களுடன் போட்டியில் இறங்கியிருக்கின்றன.

சிரியாவின் மூலை முடுக்கெங்கும் தமக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பதிலடியாக பொதுமக்களுக்கு எதிரான தாக்குதலை நடத்திய ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு, சிரியாவின் அயல்நாடுகளான லெபனான், ஜோர்டன், ஈராக், துருக்கி போன்றவற்றிலும் தமது எல்லைகடந்த இரத்தவெறியாட்டத்தை அரங்கேற்றிவந்தன.

இவற்றைவிட, உலகின்ஏனைய பாகங்களில் இடம்பெற்ற சிறியளவிலான தாக்குதல் சம்பவங்களையும் - ஏன் பயணிகள் விமானங்களை சுட்டு வீழ்த்திய சம்பவங்களுக்கு கூட-உரிமை கோருமளவுக்கு, ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு தனது தீவிரவாத கரங்களை ஆழ, அகல விரித்து வன்முறைகளின் செறிவை சர்வதேச ரீதியில் விளம்பரம் செய்திருந்தது.

ஆனால், தற்போது பிரான்ஸின் தலைநகர் பாரீஸில் ஐ.எஸ்.ஐ.எல் மேற்கொண்ட தாக்குதல்தான் வல்லரசுகளின் பிடரியை பிடித்து உலுப்பியதுபோல எல்லோரையும் தூக்கிவாரிப்போட்டிருக்கிறது.

ஆம்!

அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதல் சம்பவத்துக்கு பின்னர், அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷினால் அறிவிக்கப்பட்ட உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் முழு மூச்சுடன் ஈடுபட்டுவந்த முக்கிய வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸின் தலைநகரில் ஒரு தீவிர அமைப்பு சர்வசாதாரணமாக ஐந்துக்கும் மேற்பட்ட தாக்குதல்களை ஒரே நாளில் நடத்தி 150 பேருக்கும் மேற்பட்ட மக்களை படுகொலை செய்திருக்கின்றது என்றால் இதன் விளைவுகள் எவ்வாறு இருக்கப்போகின்றன என்பதை ஓரளவுக்கு ஊகிக்கக்கூடியதாகவே இருக்கிறது.



பாரிஸில் ஐ.ஸ்.ஐ.ஸ் தீவிரவாதிகள் மறைந்திருந்த ஒதுக்குப்புறக் கட்டடத் தொகுதி- இங்கே பெண் தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்ததுடன்-சில தீவிரவாதிகளும் பாரிஸ் பொலிசாரால் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல்கள் உலக அளவில் என்ன விதமான அதிர்வுகளை ஏற்படுத்தப்போகின்றன என்பதை ஆராய்கையில்,

தீவிரவாதத்துக்கு எதிரான போரை மூர்க்கமாக நடத்திவருகின்ற பிரான்ஸ் என்ற வல்லரசு, அமெரிக்காவுக்கு அடுத்தடுத்தாக உலக அளவில் அனைத்து துறைகளிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்ற தேசங்களில் ஒன்றாகும்

பிரான்ஸ் தேசம் மேற்குலகின் இறுக்கமான பொருளாதரத்தை கொண்ட நாடாக விளங்குவது மட்டுமல்லாமல், அணுசக்தி உட்பட இராணுவ - விமான படைகளில் பலம்பொருந்திய நாடு. ஐரோப்பிய ஒன்றியத்தை உள்ளங்கையில் வைத்து ஆட்சிசெய்யும் பிரான்ஸின் இன்னொரு தனிச்சிறப்புத்தான் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர அங்கத்துவநாடு எனப்படுவது.

இவ்வாறான ஒரு பெருந்தேசத்தின் இதயப்பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு கைவைத்திருப்பது என்பது கடந்த நவம்பர் 13 ஆம் திகதியுடன் உலக ஒழுங்கின் மாற்றம் என்பது மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு, தீவிரவாதம் மட்டுமல்லாமல் அதற்கு குறைவான -மிதவாதம் மீதான தீர்மானங்கள்கூட இனிவரும் காலங்களில் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுவதற்கான காரணங்களை முன்வைத்திருக்கிறது.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதியுடன் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற மகுட வாக்கியத்தின் கீழ் அல் கொய்தாவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையானது 2015 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதியுடன் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கும் அதன் உதிரிகளுக்கும் எதிரான போராக முழு வீச்சடையப்போவது உறுதியாகியுள்ளது.

முன்னர் நடைபெற்ற போரின் கீழ் உலகளாவிய ரீதியில் விடுதலைக்காக போராடிய இயக்கங்கள் பல ஒரேயடியாக தடைசெய்யப்பட்டதும் காலப்போக்கில் அவை அழித்தொழிக்கப்பட்டதும் தமிழர்களை பொறுத்தவரையில் அதிகம் விளக்கமளித்து விளங்கவேண்டிய விடயமல்ல.



பாரிஸில் பொலிஸின் வேட்டை

புஷ்ஷினது போர்முகத்தின் கோரத்தை ஆழமாக அறிந்து கொண்ட விடுதலைப்புலிகள் 2002 இல் சமாதான உடன்படிக்கைக்கு ஊடாக சர்வதேச அரசியல் நெளிவு -சுளிவுகளுக்குள்ளால் பயணப்படத்தலைப்பட்டபோதும், சிறிலங்கா அரசின் திட்டமிட்ட போர் சீண்டலினாலும் கூட்டணி அமைத்த நாடுகளின் உதவியினாலும் விடுதலைப்புலிகளை முற்றுமுழுதாகவே அழிப்பதில் வெற்றிகாண்பதற்கு உதவியளித்தன. ஆனால், வல்லரசுகளின் சர்வதேச போர்ப்பறை வழங்கிய ஆசீர்வாதம்தான், அந்தப்போர் எவ்வளவு கொடூரமாக நடந்திருந்தாலும் அது நடைபெற்ற போக்கின் தவறுகளை இன்றுவரை - விசாரணைக்கு அப்பாற்பட்ட - புனித யுத்தமாக பேணிப்பாதுகாக்க உதவியவண்ணமுள்ளன.

ஆனால், தற்போது பிரான்ஸை சீண்டியதால் ஆரம்பமாகவுள்ள ஐ.எஸ்ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான முழுவீச்சான போர் என்பது, பெருமுனைப்புடன் நடைபெறப்போவதும் அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கப்போவதும்தான் ஆபத்தான அசரீரிகளாக உணரப்படவேண்டியுள்ளது.

ஏனெனில், ஐ.எஸ்ஐ.எல் அமைப்பின் தீவிரவாத நடைமுறைகள் புதிய வழிகளில் உலகளாவிய ரீதியில் கிளைகொண்டிருப்பது, சிறிய சிறிய தாக்குதல்களின் மூலம் சாட்சியாகியிருப்பதும் அந்த அமைப்புக்கான விசாலமான ஆதரவெனப்படுவதும் குறிப்பிடப்பட வேண்டியவை.

சுமார் இரண்டு லட்சம் புனிதப் போர் வீரர்களை கொண்டிருப்பதாக அறிவித்துள்ள இந்த அமைப்பில் சுமார் 80 நாடுகளிலிருந்து சென்று இணைந்துகொண்ட 15 ஆயிரம் வெளிநாட்டவர்கள் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டிருப்பதிலிருந்து இந்த அமைப்பின் ஆதரவுத்தளம் என்பது எவ்வளவு ஆபத்தானது என்பது ஊகிக்க கூடியதே ஆகும்.

இந்த அமைப்பின் தலைமையும் குறிப்பிட்டு கூறக்கூடியளவு ஓரிருவரிலோ ஒரு இடத்திலோ தங்கியிராமல் பரந்துபட்டிருப்பதால், யாரை அழித்து இந்த தீவிரவாதத்துக்கு முடிவு காண்பது என்பதும் முடிவில்லா சவாலாகவே கருதப்படுகிறது.

இந்த மாதிரியான பின்னணியில், நவம்பர் 13 ஆம் திகதிக்கு பின்னர் உலக நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எல் அமைப்பினை அடியோடு களையெடுப்பதற்கு கைக்கொள்ளப்போகும் அரசியல் - இராஜதந்திர - பாதுகாப்பு கொள்கைகளானது - நீதியான மிதவாத போராட்டங்களை முன்னெடுக்கும் அமைப்புக்கள் மற்றும் இயக்கங்களையும்கூட மிதித்துவிடக்கூடியவையாக இருக்கும்.

இதன் அடிப்படையில் பார்த்தால், உரிமைகளை கோரும் மக்கள் கூட்டத்தின் தார்மீக கோரிக்கைகள் மற்றும் அவர்களின் இருப்புக்கள் ஆகியவையும் ஆதிக்க அரசுகளால் நசுக்கிவிடப்படக் கூடியவை. உரிமைகளை கோரிய மக்கள் கூட்டத்திற்கான நீதியை இவ்வளவு காலமும் இழுத்தடித்துவந்த அடக்குமுறை அரசுகள் தங்களது இவ்வளவுகால சம்பிரதாயங்களுக்கு முற்றுப்புள்ளியிட்டுவிட்டு ஒரேயடியாக நிராகரிப்பினை வழங்கிவிடுவதற்கு இந்த புதிய உலக ஒழுங்கு வழிசமைக்கலாம்.

அதேவேளையில், உரிமையை கோரும் மக்கள் கூட்டங்கள் சரியான சக்திகளின் பக்கம் தமது போராட்ட தளங்களை நகர்த்திக் கொண்டால், நவம்பர் 13 ஆம் திகதிக்கு பின்னரான உலக ஒழுங்கு ஒரேயடியாக சாதகங்களை தாரை வார்த்து கொடுப்பதற்கும் வாய்ப்புக்கள் உண்டு என்பதை மறுத்துவிட முடியாது.

தமிழர் தரப்பை பொறுத்தவரை இன்று இதுவே பாரிய சோதனைக்களமாக மாறப்போகிறது. இதில் தமிழர் தரப்பினர் கடைப்பிடிக்கவுள்ள கொள்கையும், போக்கும், ஆதரவு சக்திகளும் தான் அதன் இருப்பை தீர்மானிக்கப் போகின்றன. தமிழர் தரப்பின் ஆதரவுத்தளம் என்பது பொருளாதார பின்னணியோ இராணுவ பின்னணியோ கொண்டதல்ல. உரிமைக்காக இன்னமும் வேட்கையுடன் பயணிக்கும் தாயக தமிழர்களுக்கு அவர்களின் ஒற்றுமையும் உணர்வுள்ள புலம்பெயர் மக்களும்தான் இப்போதைக்கு பலமான சக்திகளாக உள்ளன.

இந்த பலங்களுடன் சரியான ஆதரவுத்தளங்களை தெரிவு செய்துகொண்டால் பிறக்கப் போகின்ற புதிய உலக ஒழுங்கை வெற்றி கொள்வது நிச்சயமே.

விடுதலைப்புலிகளின் முன்னாள் பிரமுகர் ஒருவர் அண்மையில் பேசும்போது கூறுகையில் -

“நாங்கள் ஒரு காலத்தில் திருமலை கடல் முதல் அந்தாடிக்கா தாண்டி உலகின் சகல சமுத்திரங்களிலும் தங்கு தடையின்றி நீந்தி வந்தோம். அப்போது நாங்கள் சின்ன மீன்கள். வலைகள் எமக்கு தடையாக இருந்ததில்லை. ஆனால், நாங்கள் வளர்ந்த விட்டபோது முன்னர் நுழைந்து ஓடிய வலை ஓட்டைகள் எல்லாம் நுழைய இடம்தரவில்லை. அதனால், நாங்கள் அகப்பட தொடங்கி விட்டோம்.

நாங்கள் தப்பித்துக்கொள்வதற்கு இரண்டு வழிகள்தான் இருந்தன என்பதை பிறகுதான் அறிந்துகொண்டோம்.

ஒன்றில், வளர்ந்திருக்கவே கூடாது. இல்லை, அந்த வலைகளையும் அறுத்தெறிய கூடிய - எம்மைவிட பெரிய - மீன்களுக்கு அருகில் நின்றிருக்கவேண்டும். அந்த மீன்கள் தடைகளை உடைக்கும்போது, நாங்களும் அந்த வழியால் சென்றிருக்கலாம்.


ஆனால், எல்லாமே காலம் கடந்துவிட்டது” - என்றார்.

தெய்வீகன்

# ஓய்ந்தது ஆஸியின் வேகப்புயல்

**பயமுறுத்தும் பவுன்ஸர்**

ஜான்சனின் ப்ளஸ் பவுன்சர் தான். டெஸ்ட் போட்டிகளில் புதிதாக களமிறங்கும் வீரர்



சர்வதேச ஒருநாள் போட்டி என்றால் மிட்சல் ஜான்சனின் 10 ஓவர் எப்போது முடியும் என்பதுதான் எதிரணி யின் எதிர்பார்ப்பாக இருக்கும். அதுவே, டெஸ்ட் போட்டி என்றால் இன்று யாரை வம்பிழு க்கப் போகிறார். இவரது பவுன்சரில் யார் யார் நிலைகுலையப் போகி றார்கள் என்பதுதான் எதிர்பார்ப்பாக இருக்கும். கிட்டத்தட்ட 10 வருட காலம் அவுஸ்திரேலிய அணிக்காக ஆடிய மிட்சல் ஜான்சன், நவம்பர் 17ஆம் திகதி யோடு தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு குட்பை சொன்னார்.

அவுஸ்திரேலிய அணியில் பிரட்லீ, மெக்ராத், ஃப்ளெம்மிங் போன்றவர்கள் கலக்கிய காலத்திற்கு பின்பு, ஆஸி அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளருக்கான தேடலில் முக்கிய இடம் பிடித்தவர்களில் முதன் மையானவர் மிட்சல் ஜான்சன். ஓடிவரும் ஸ்டைல் தொடங்கி, பந்தை ஆடுக ளங்களில் அடித்து தலைக்கு மேலே பவுன்ஸர்களாக மாற்று வது வரை பட்ஸ்மேனை ஒரு நிமிடம் நிலை குலைய வைப்பவர். உலகின் தலை சிறந்த ஆட்டக்காரர்களான சச்சின், டோனி, காலிஸ் போன்றவர்களை கலங்கடித்தவர் ஜான்சன்.

கிரிக்கெட் உலகம் இந்த 5 காரணங்க ளுக்காக கட்டாயம் மிட்சல் ஜான்சனை மிஸ் செய்வார்கள்.

**ஸ்லெட்ஜிங்:**

அவுஸ்திரேலிய அணியின் ஆஸ்தான ஆயுத மான ஸ்லெட் ஜிங்கை சிறப்பாக செய்தவர் ஜான்சன். சைமண்ட்ஸ், பிரெட் லீக்கு இணையாக ஸ்லெட்ஜிங்கில் ஈடுபட் டவர் ஜான்சன்தான். 2013-14 ஆஷஸ் தொடரின்போது ஜோ ரூ ட்டை வம்பிழுத்தது தான் இவரது ஸ்லெட் ஜிங்கின் உச்சக்கட்டம். ஜான்சனின் அனல் பறக்கும் பந்துவீச்சு, சரியான நேரத்தில் கைகொடுக்கும் பட்டிங் இதனையெல்லாம் தாண்டி இவரது ஸ்லெட் ஜிங்கிற்கு தனி ரசிகர் கூட்டமே இருக்கிறது.

**அக்ரஸிவ் ஆட்டம்**

களத்தில் எப்போதும் அக்ரஸிவாக இருந்தால் தான் ஒரு வேகப்பந்து வீச்சாளரால் வேகமாக பந்துகளை வீச முடியும் என்பது அக்தர் காலத்து பார்முலா. அதனை இன்னும் ஒருபடி சிறப் பாக செய்தவர் ஜான்சன். கடந்த ஆண்டு இறுதி யில் அவுஸ்திரேலியா சென்றது இந்திய அணி. அதற்கு முன்புதான் பிலிப் ஹியூக்ஸ், பவுன்ஸர் தாக்கி உயிரி ழந்தார். அதனால் மொத்த ஆஸி அணியும் மனமுடைந்து இருந்தது. ஆனால் முதல் டெஸ்டில் ஜான்சன் இந்திய கப்டன் விராட் கோலி க்கு வீசிய பந்து ஹெல் மெட்டை தாக்கி சற்று நேரம் நிலைகுலைந்தார் கோலி. அந்த பவுன்ஸர் தான் அவுஸ்திரேலியா தொடரை வெல்ல ஆஸி வீரர்களை மனதளவில் தயார்படுத்தியது என்றே சொல்லலாம்.

**மட்ச் வின்னர்:**

அணியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத் தும் அனைவரையும் மட்ச் வின்னர் என்பார் கள். ஜான்சன் இதில் சற்று வித்தியாசப்படு பவர். அவுஸ்திரேலிய அணியின் அனைத்து போட்டிகளிலும் ஜான் சனின் பங்களிப்பு கட்டாயம் இருக்க வேண்டும் என்ற எதிர்பா ர்ப்பும், அதே போல் அவரது ஆட்டமும் இருக்கும். ஒற்றை ஆளாக அணியை வெற்றிப்பாதைக்கு பட்ஸ்மேன்கள் தான் அழைத்து செல்வார்கள். ஆனால் ஒரு பந்துவீச் சாளராக அதனைச் செய்து காட்டியவர் ஜான்சன். இதற்கு உதாரணம் 2013-14 ஆஷஸ் தொடரில் அவர் வீழ்த்திய 37 விக்கெட் டுகள்.

ஜான்சன் பந்துவீசும் போது இறங்க பயப்ப டுவார்கள் .காரணம் அவர்கள் சந்திக்கும் முதல் பந்தை கணிக்க முடியாத பவுன்ஸ ராக்கி ஆட்டத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் எளிதில் திருப்பும் திறன் கொண்டவர் ஜான்சன். டென்னிஸ் லில்லி புகழ்ந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஜான்சனும் ஒருவர். ஓய்வை அறிவித்த பின்பு இங்கிலாந்து முன்னாள் கப்டன் வாகன் "இங்கிலாந்து வீரர்கள் மகிழ்ச்சி யடைவார்கள். காரணம் இனி அவர்கள் ஜான்சனை எதிர்கொள்ளமாட்டார்கள்" என புகழ்ந்துள்ளார்.

**விக்கெட் மெஷின்:**

அவுஸ்திரேலியாவின் விக்கெட் மெஷின் ஜான்சன். டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களில் 4வது இடத்திலும், வேகப் பந்து வீச்சாளர்களில் 3வது இடத்திலும் உள்ளார். கடைசி போட்டியில் அவர் எடுத்த விக்கெட் ஆஸி ஜாம்பவான் பிரெட் லீயின் சாதனையை முறியடித்தது.


கிரிக்கெட் வாழ்க் கையின் கடைசி நாளில் கூட சாதனை படைத்தார் ஜான்சன். மூன்று வடிவிலான போட்டிகளிலும் சேர்த்து ஜான்சன் 590 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

2008ம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 8 வீரர்களை ஒரே இன்னிங்ஸில் வீழ்த்தியதே அவரது சிறப்பான பந்துவீச்சு.

நன்றி: விகடன்

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : மன்னாதி மன்னன்
இசை : M.S.V. ராமமூர்த்தி
பாடல் : கண்ணதாசன்
பாடியவர் : T.M.S



அச்சம் என்பது .. மடமையடா..
அஞ்சாமை திராவிடர் .. உடமையடா
அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா

ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா
தாயகம் காப்பது கடமையடா

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா

கனக விசயரின் முடித்தலை நெறித்து
கல்லினை வைத்தான் சேரமகன் ஆ...ஆ...
கனக விசயரின் முடித்தலை நெறித்து
கல் லினை வைத்தான் சேரமகன்
இமய வரம்பினில் மீன்கொடி ஏற்றி
இடைபட வாழ்ந்தான் பாண்டியனே.

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா
தாயகம் காப்பது கடமையடா

கருவினில் வளரும் மழலையின் உடலில்
தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை ஆ...ஆ...
கருவினில் வளரும் மழலையின் உடலில்
தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை
களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம் காத்திட
எழுவான் அவள் பிள்ளை

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமைய்டா
தாயகம் காப்பது கடமையடா

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்
மாபெரும் வீரர் மானம் காப்போர்
சரித்திரம் தனிலே நிற்கின்றார்

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா .
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா
தாயகம் காப்பது கடமையடா
அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
தாரணி, நிலா, ரேவதி, வைஸ்னா (கிளிநொச்சி), வசந்தன், லக்ஷனா, ஜீவ ராணி, கபில்காந்தன், விமலநாதன், அக்சியா, கோபிகா, சஜீவன், சூர்ஜா, விஸ்னுகா, கீர்த்திகா (சுன்னாகம்), கண் ணன் (யாழ்ப்பாணம்)

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்க ளும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங் கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்ப வர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.


# ஈழத்து சினிமா

## பழி-குறும்பட விமர்சனம்

திருமணமான இளம் தம்பதிகள்.இவர்களுக்கிடையில் புரிதல் இல்லாத மேலோட்டமான ஆரம்ப திருமண வாழ்க்கை. காதலித்து ஏதோவொரு காரணத்தில் ஏமாற்றிய திருமணமான பெண்ணின் மண வாழ்க்கை மன ரீதியிலான சஞ்சலத்தையும் உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. திரில் தன்மையுடனும், இறுதியில் ஒரு திருப்பத்தையும் சுவாரசியத்தோடு வழங்கும் வண்ணம் குறும்படத்தை வழங்க முற்பட்டுள்ளார் இயக்குனர்.

திருமணமான தம்பதிகளுக்கு இடையிலான புரிதல் அற்ற வெற்றிடம் ஏன் என்ற கேள்வியினை படத்தில் எழுப்ப முற்பட்டாலும் போகப்போக அதன் மையம் தெளிவடைந்து வருகின்றது. மனைவி காதலனை ஏமாற்றி விட்டு வாழ்க்கையோடு போராடும் மனத்தாக்கங்ககளும் கணவனின் அன்புக்கு ஏங்கும் காட்சிகளும் மிதுனாவின் யதார்த்த நடிப்பினால் யதார்த்தப்போக்குடன் பயணிக்கிறது.

மனைவியின் இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகள் கூட கணவனுக்கு எந்தவித சந்தேகங்களையும் எழுப்பவில்லை, மனைவியுடன் தனது எண்ணங்களையும் பகிரவில்லை. ஏனோதானோவென்று தனது எதிர்வினையை சலிப்பாக வெளிக்காட்டுகின்றார். ஏன் மனைவியுடன் கூட தனது எண்ணங்களை வெளிப்படுத்த




வில்லை, அதற்குக் காரணம் என்றுவென்று பார்ப்பவர்களை யோசிக்க வைத்தாலும் இவர்களுக்கிடையில் இருக்கும் இடைவெளி அப்படி என்ன என்று எண்ண வைக்கின்றது. இறுதியில் திரைக்கதை மொத்த பதிலையும் பார்வையாளர்களுக்கு வழங்குகின்றது.

பின்னணி இசை ஆரம்பத்தில் தடுமாறினாலும் போக போக திரைக்கதையுடன் இசைகின்றது. காட்சிகளின் படிமமாக்கல் தொலை நோக்கு அகவிரிவாக்கம் அற்ற மென்போக்கான உயிர்ப்பற்ற உருவாக்கமாக இருக்கின்றது. சாதாரணமான காட்சிகள், சுவாரஸ்யமான நகர்தலை தரத்தவறிய திரில் காட்சிகள் என்று குறும்படத்தை பின்னோக்கி இழுத்து நகர்த்துகிறது. இன்னும் ஆழமாக அதிக விரிவாக்கம் செய்திருக்கலாம்.எடிட்டிங்கில் இருக்கும் வழுவால் அதிகரிக்கும் காட்சிகள் விறுவிறுப்பின்றி படத்தினை நகரவைக்கின்றது.

ஆனால் ஒளிப்பதிவு, இறுதிவரை யோசிக்கவைக்கும் திருப்பங்கள் மற்றும் மிதுனாவின் நடிப்பு, திரைக் கதையமைப்பு போன்றவை இக்குறும்படத்தினை நகர்த்திச் செல்வதில் பெரும்பங்காற்றுகின்றது.

ஏமாற்றிவிட்டு வாழ்க்கையை நடத்தும் காதலனோ காதலியோ நிம்மதியற்ற சஞ்சலமான வாழ்வை சந்திப்பார்கள் என்ற கருத்தை கூற வந்தாலும் வெளிப்படையான தோற்றம் பழி வாங்குதல் என்பதாகவே இருக்கின்றது. அது சமூகத்தின் பார்வையிலும், தனிப்பட்டவர்களின் பார்வையிலும் தவறான கொள்கை, எவ்வாறான ஏமாற்றமாக இருந்தாலும் அதனை விழிப்புணர்வுடன் சொல்வதே முற்போக்காக இருக்கும்.அதனை தவிர்த்து பழிக்கு பழி வாங்குதல் என்று சமூகத்தின் மீது திணிப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து. சரி ஏமாற்றும் காதலிக்கான தண்டனை என்றே வைத்துகொள்வோம், அது எவ்வாறான் ஏமாற்றம் என்பதை புரிதலுடன் சொல்லியிருக்க வேண்டும், பழி வாங்கும் காதலனை ஏமாற்றுவது பிழையற்றவொன்று என்று எண்ணவைகின்றது.

பழி வேண்டும் அளவிலான காதலனின் குணத்தை காதலி வெறுத்தது நியாயம் என்பதையாவது சொல்லியிருக்க வேண்டும், இவ்வாறான கருத்துக்களை கையாளும் பொழுது அகன்ற விசாலமான பார்வை மிகமுக்கியம். அதனை கொஞ்சமாவது பாவித்திருக்கலாம்.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## தமிழ் மொழி

இலக்கணத்தை வரம்பாக்கி இறைவனால்
ஈந்தமொழி
இயல் இசை நாடகத்தை இயல்பாக கொண்ட மொழி
அகத்தி முனி ஊடாக அகிலத்தை அடைந்த மொழி
ஔவைப் பாட்டி ஆத்திசூடி நீதிமொழி நீதிமொழி
நாவினிக்க பாடிடுவேன் நம்தமிழை–தோழா
நலமுடனே வாழ்த்திடுவேன் செந்தமிழை
கேட்போர்கள் காதினிலே தேன் சுவையூற–நல்ல
தீந்தமிழின் பெருமையெலாம் உலகினைச் சேர–
நாவினிக்க...

தெய்வ ஞான பக்தி பாட சிறந்த மொழி–தமிழ்
தீர்க்கமான நீதி பேச உகந்த மொழி
காதல் அன்பு கருணைக்கு ஓர் மொழி தமிழே
களத்தில் வீரர் காணும் போர்ப்பரணி ்பாடும் தமிழே–
நாவினிக்க

மூத்த மொழி ஐந்தினிலே முதல் மொழி தமிழே
முதலும் முடிவும் இல்லாத இறைமொழி தமிழே
மூவேந்தர் கட்டிக்காத்த பெருமையுண்டு–அதற்கு
முச்சங்க கால மெனும் முதுமையுண்டு–தோழா
நாவினிக்க....

மட்டு நகர் இ.மணிராஜா

## புலம் பெயர்ந்த பூக்கள்

ஆயிரம் மலர்கள்
அலையடித்தன,
அவுஸ்திரேலியாவின்
பூக்காட்சியில்–
பளபள வென்ற மனிதர்களைப் போல்
பல்வேறு நிறக் கன்னங்களைமுத்தமிட்டுக்
கொண்டு

'அற்புதம்,அற்புதம்!' என
ஆடி நடந்த தருணம்;
"அன்பரே,அன்பரே!" எனக் குரல் கேட்டு
அப்படியே திரும்பினேன்.
இதழ் விரித்த 'கறுப்பு மலர்கள்'
இங்கொன்றும்,அங்கொன்றும்,
குழந்தைக் கண் விழிகளுடன்
கூப்பிட்டன என்னை,
"எங்கிருந்து வந்தது எம் நாட்டு நிறம்?
எந்த மாவட்டம்,இத்தகைய மலர் கூட்டம்?"
என்ற கேள்வியுடன் நின்றேன்.
"தாய் நாட்டில் புயலடித்து,
திக்கெட்டும் தெறித்து விழுந்த
கறுப்பு விதைகள் நாங்கள்.
அந்நியக் காற்றில் ஒரு
மண்பிடிப்பின்றி,ஊமைகளாய்
ஆடுகின்றோம்
புண்ணியம் யார் செய்ததோ,
புரியவில்லை–எங்கள்
கண்ணின் ஈரம் துடைக்கும்
கைகள் எம்மிடம் இல்லை;
ஆனாலும்,
மண்ணின் நினைவு இந்தக்
கறுப்பு நெஞ்சுக்குள்
நெருப்பாக நிற்கும்
காலம் உறையும் வரை" என்றன.
நான்
கலங்கி நகர்ந்தேன்.

எஸ்.வைதீஸ்வரன்

# ஆனந்தியை புலம்பவிட்ட இயக்குநர்



சமீபத்தில் வெளியான த்ரிஷா இல்லன்னா நயன்தாரா படத்தில் நாயகியாக நடித்த ஆனந்தி மனம் விட்டுப் பேசியுள்ளார்.

இதற்கு முன் பொறியாளன், கயல், சண்டிவீரன் என குடும்பப்பாங்கான படங்களில் நடித்தவரிடம் இந்தப் படத்தினால், அடல்ட் படத்தில் ஏன் நடித்தீர்கள் என பலரும் கேட்கும்படி மாறியுள்ளது. இதற்கு சமீபத்திய சந்திப்பில் அவரே மனம் திறந்து பதிலளித்துள்ளார்,

ஆதிக் ரவிசந்திரன் என்னிடம் கதை கூறும் போது அழகான டீனேஜ் காதல் கதை என்றே நினைத்து நடிக்க ஒப்புக்கொண்டேன்.

ஆனால் க்ளைமாக்ஸ் காட்சி எடுக்கும் போது தான் எனக்கே தெரிந்தது படம் அடல்ட் பாணியில் சென்றுள்ளது என்பது.

## மீண்டும் தள்ளிப் போகிறது

# இது நம்ம ஆளு



பாண்டிராஜ் இயக்கத்தில் சிம்பு நயன்தாரா நடித்திருக்கும் இது நம்ம ஆளு படம் 2016 பொங்கல் நாளில் வெளியாகும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அதே நாளில் பாண்டிராஜ் இயக்கத்தில் விஷால் நடித்த படமும் வெளியாகும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறார்கள்.

ஒரு இயக்குநரின் இரண்டு படங்கள் ஒரே நாளில் வெளியாவது வியப்பாகப் பேசப்பட்டது. இப்போது அதில் மாற்றம் நடந்திருக்கிறதாம். இதுநம்மஆளு படத்தை தேனாண்டாள்பிலிம்ஸ் நிறுவனம் வாங்கி வெளியிடவிருப்பதாகவும் அதனால் படத்தின் வெளியீடு பிப்ரவரி மாதத்துக்குப் போய்விடும் என்றும் சொல்லப்படுகிறது.

வரிசையாகப் பேய்ப்படங்கள் மற்றும் அண்மையில் மிகப்பெரிய வெற்றி பெற்ற பாகுபலி ஆகிய படங்களை வெளியிட்ட தேனாண்டாள் பிலிம்ஸ், கடந்த 20 வெளியாகியிருக்கும் ஒருநாள்இரவில் படத்தையும் வெளியிட்டிருக்கிறது.

இந்நிறுவனம் சிம்பு படத்தை வெளியிடவிருப்பது மிகவும் ஆச்சரியமான விடயமாகப் பார்க்கப்படு கிறது. இதுபற்றி தேனாண்டாள்பிலிம்ஸ் முரளியிடம் கேட்டபோது, அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றன, உறுதியானதும் சொல்கிறேன் என்கிறார்.

# செய்த தவறை சரிசெய்கிறாரா விஜய்

விஜய்யின் அறுபதாவது படத்தை பரதன் இயக்கப்போகிறார் என்று செய்தி வந்ததிலிருந்து அதுபற்றிப் பலவிதமான பேச்சுகளும் வரத்தொடங்கிவிட்டன. ஏற்கனவே விஜய்யை வைத்து அழகியதமிழ்மகன் என்ற தோல்விப்படத்தைக் கொடுத்தவருக்கே அடுத்தபடத்தைக் கொடுத்திருக்கிறார்.

இது விஜய்க்குப் பலவீனம் என்று சிலரும், வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் ஒருவருடைய திறமை மீது நம்பிக்கை வைத்த விஜய் பாராட்டுக்குரியவர் என்றும் இரண்டு விதமான கருத்துகள் பரிமாறப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இதற்கிடையே விஜய் ஏற்கனவே செய்த தவறை இப் போது சரி செய்துகொண்டிருக் கிறார் என்றும் சொல்லப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு வெளியான விஜய்யின் மிகப்பெரிய வெற்றிப்படமான கில்லி படத்துக்கு வசனம் எழுதியிருந்தார் பரதன். அப்போது தாமே ஒரு படத்தை இயக்குவதற்காக ஒரு கதையை விஜய்யிடம் சொன்னாராம் பரதன்.

விஜய் அந்தக்கதையை வேண்டாமென்று சொல்லிவிட்டு வேறொருவரின் கதையை எடுத்துக்கொண்டு நீங்கள் இயக்குநராக மட்டும் இருங்கள் என்று சொல்லி எடுக்கப்பட்ட படம்தான் அழகிய தமிழ்மகன். விஜய் சொன்னதைக் கேட்டதால் பரதனுக்கு அடுத்த படம் கிடைப்பதே தாமதமானது. மறுபடி படங்களுக்கு வசனம் எழுதினார்.

மலையாளத்தில் வெற்றி பெற்ற காக்டெயில் படத்தைத் தமிழில் அதிதி என்கிற பெயரில் இயக்கினார். இப்போதும் பரதன் சொன்ன கதை பிடித்து கதையை மட்டும் வைத்துக் கொண்டு வேறு இயக்குநரை வைத்து படத்தை எடுக்கலாம் என்றுதான் முதலில் திட்டமிட்டிருக்கி றார்கள். வேறு யாரும் அதற்குப் பொருத்தமாக அமையாத நேரத்தில், பரதனே இயக்கட்டும் என்று விஜய்யே சொன்னதாகச் சொல்லப்படுகிறது.

பரதன்சொன்ன கதையை வேண்டாமென்றுசொன்னதன் மூலம் நடந்த தவறைச் சரி செய்யவே இப்போது பரதன் கதையை பரதனே இயக் கட்டும் என்று விஜய் முடிவு செய்திருப்பார் என்றும் பேச்சுகள் இருக்கின்றன.

ஒரு படம் பற்றி ஒரு செய்திதான் அதிகாரப் பூர்வமாக வந்தது. அதன் பின் இதுபோல் நிறையச் செய்திகள் தாமாகவே முளைத்து வருகின்றன.






# நிறைவேற்று அதிகாரத்துடன் அநீதிகளையும் ஒழியுங்கள்!



நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி இந்தநாட்டில் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் அனுபவித்திராத சுபபோக ஆடம்பர வாழ்க்கையினை தானும் அனுபவித்து தன்னைச் சார்ந்தவர்களும் அனுபவிக்கக் கூடிய ஆட்சியை அமுல்படுத்தியவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தற்போதுள்ள மகிந்த, நிறைவேற்று ஜனாதிபதியாக சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் இலங்கையில் கோலோச்சியவர்.

மகிந்த ஆட்சியில் சிங்களவர்களுக்கு பொருளாதாரச்சுமை மட்டுமே அதிகரித்திருந்தது. ஆனால் தமிழர்களுக்கு மட்டும் இன அழிப்பு கொடுமைகள் உள்ளிட்ட எவ்வளவோ துன்ப துயரங்கள் தண்டனையாக விதிக்கப்படடது. தமிழனாகப் பிறந்ததால இத்தனை துயரங்களை அனுபவித்தாக வேண்டும் என்று சட்டம் உள்ளது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கியிருந்தார் அவர்.

மகிந்த ஆட்சியில தமிழருகத எதிராக நடந்த கொடுமைகள் வார்த்தைகளால் கூறிமுடிக்க முடியாதவை. இவற்றை அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் கண்டு கொள்ளவில்லை.

ஆட்சிப்பீடம் ஏறிய பின்னரும் கூட தமிழனுக்கு எதிரான கொடுமைகளை விசாரணை செய்ய சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்த முன்வரவில்லை என்பதோடு உள்ளகப் பொறிமுறைக்குள் உண்மைகளை மூடிமறைக்கும் முயற்சிகளையும் அக் கட்சி முடுக்கி விட்டுள்ளது.

இது இலங்கையில் ஆட்சி பீடம் ஏறும் அனைத்து சிங்களவர்களும் செய்யும் செயல் என்றபோதும் மகிந்தவை ஆட்சியிலிருந்து அகற்றவும் மைத்திரி ஜனாதிபதியாக வருவதற்கும் தமிழர்கள் உதவினார்கள் என்ற நன்றிக் கடனுக்காவது ஏதாவது செய்ய முன்வந்திருக்கலாம். ஆனால் ஆட்சியில் உள்ளவர்கள் தமிழருக்கு நன்மைகளை செய்யக் கூடாது என்ற எழுதாத சட்டம் ஒன்று உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் ஆட்சியாளர்கள்.

தமிழர்களும் இலங்கைப் பிரஜைகளே என்றும் நாட்டைப் பிரிக்க இடமளிக்கமாட்டோம் என்றும் உலகிற்கு தம்பட்டம் அடிக்கும் அரசு தமிழர்களை அழிப்பதற்கு துணைபுரிவதோடு அழிக்கப்பட்ட தமிழருக்கு நீதி கிடைப்பதற்கும் தடைகளை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தகாலப் பகுதியில் இராணுவம் உள்ளிட்ட முப்படையினராலும் தமிழர் தாயகத்தில் அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மீள்குடியேற்றம் முழுமைபெறவில்லை. காணாமற்போனவர்களுக்கு உரிய பதிலை அரசு இன்னும் வழங்கவில்லை. போரில் அவயவங்களை இழந்தவர்கள், போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு இன்னும் வழங்கப்படவில்லை என்று அரசு செய்யத் தவறிய விடயங்களை பட்டியல் இட்டுக் கொண்டே செல்லலாம்.

மைத்திரி அரசு மீதான எதிர்பார்ப்புக்கள், அதிருப்திகள் அனைத்துக்கும் மகிந்த அளவுக்கதிகமாக பயன்படுத்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே காரணம் எனலாம்.

நான்தான் ஜனாதிபதி. என்னை யாரும் கேள்வி கேட்க முடியாது. நான் சொல்வதுதான் சட்டம் என்ற ஆணவத்தில் ஆடிய மகிந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நன்றாக தனது நலனுக்காகப் பயன்படுத்தியிருந்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்படும் என்று மகிந்தவுக்கு எதிராக உருவாக்கப்பட்ட பொது எதிரணியல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

மைத்திரி வழங்கிய இந்த வாக்குறுதி மகிந்தவுக்கு எதிராக பிரமாஸ்திரமாக மாறி அவரை ஆட்சியிலிருந்து இறக்கியதோடு மட்டுமல்லாது அரசியலிலிருந்து ஒதுங்கி வாழமுடியாத இக்கட்டான நிலைக்கும் கொண்டு சென்றுள்ளது.

ஜனாதிபதியாக இருந்த போது நிதியமைச்சராகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் ஏன் இந்த நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரே சக்தியாகவும் செயற்பட்ட மகிந்தவுக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறைமை நன்கு உதவி புரிந்தது. அதுவே அவரது ஆட்சிக்கும் ஆப்புவைத்தது.

ஆட்சியில் இருந்த போது செய்த ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளுக்கும் மகிந்த முகங்கொடுக்க வேண்டியவராக மாறியுள்ள்ார். நாளாந்தம் விசாரணைகள் அவரைச்சுற்று சுழன்று கொண்டிருக்கின்றன.

தமிழன் நிம்மதியாக வாழக் கூடாது. அழிக்கப்பட வேண்டிய இனம் தமிழினம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைந்த மகிந்தவும் அவரது சகோதரர் கோத்தாவும் இப்போது விசாரணைகளை பல கோணங்களில் எதிர்கொண்டு வருகின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க முடியாது என்றும் அவ்வாறு அரசு செய்தால் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும் என்றும் மகிந்த தற்போதும் கூறி வருவதன் மூலம் அதிகாரத்தைக் குறைக்க முற்படாதது ஏன் என்பது நன்கு புலப்படுகின்றது.

ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும் யாப்புத் திருத்தப்பத்திரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை (18.11.2015) அன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யாப்புத் திருத்த பத்திரத்தில், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி,அதன் அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்குதல் மற்றும் புதிய தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான யாப்புத் திருத்தங்களை இந்த அமைச்சரவைப் பத்திரம் ஊடாக ஜனாதிபதி மைத்திரி சமர்ப்பித்தார்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள போது தனக்குரிய அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி முன்வந்து இந்த நாட்டில் இதுவரைக்கும் எந்தவொரு ஜனாதிபதியும் செய்ய முன்வராத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒன்று.

தேர்தல் காலத்தில் தயாரிக்கப்படும் விஞ்ஞாபனங்களை வெற்றிக்களிப்பில் மறந்து போகும அரசியல்வாதிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி அதிகாரங்களைக் குறைப்பது என்பது இலங்கை வரலாற்றில் முக்கிய அம்சமாகவுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவது வரவேற்கத் தக்கவொன்று. அதேவேளை பிரதமரின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மற்றுமொரு மகிந்தவாக ரணில் மாறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது தமிழ் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களில் பங்குகொண்ட ரணில், பிரதமரான பின்னர் அதனை மறந்து மகிந்தவின் நிலைப்பாட்டிலிருந்து மாறாதவராகவே தோற்றமளிக்கின்றார்.

மகிந்தவுக்கும் ரணிலுக்கும் வடக்கு மக்கள் ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டார்கள் . இதனை இருவரும் நன்கு உணர்ந்துள்ளனர். இதனால் தமிழர்களை வஞ்சிக்க இருவரும் தயங்கியதும் இல்லை.

எனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வந்துள்ளது வரவேற்கத்தக்க விடயம். மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மதித்து அவர் இதனை செய்ய முன்வந்துள்ளார்.

ஆனால் நிறைவேற்று அதிகார முறையினால் தமிழர்கள் சொல்லொணாத் துன்பதுயரங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளதால் அதிகாரத்துடன் தமிழருக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அநீதிகளையும் முற்றாக ஒழிக்கவேண்டும்.

மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள படைத்தரப்பினர் விலக்கப்பட்டு மக்களின் மீள்குடியேற்றம் துரிதப் படுத்தப்பட வேண்டும்.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் விடும் கண்ணீர் இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும். சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி தமிழர்களை சட்டவிரோதமாக கைதுசெய்யும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

தமிழர்களும் இலங்கைப் பிரஜைகள்தான் என்பதை இனியாவது சிங்கள ஆட்சியாளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழித்து முன்மாதிரியாக செயற்பட முன்வந்துள்ளதைப் போன்று தமிழரைப் பீடித்துள்ள அநீதிகளையும் முற்றாக களையவேண்டும்.

இதனையே ஒவ்வொரு தமிழனும் ஜனாதிபதி மைத்திரியிடம் எதிர்பார்த்து காத்திருக்கின்றான்.

**காண்டீபன்**

# facebook

# தோட்டக்காரன்

ஒரு தோட்டத்தில் நிறையக் குரங்குகள் இருந்தன. பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனுக கும் நண்பர் களாயிருந்தன.

தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அவற றைச் செய்து விளை யாடும்.

ஒருமுறை தோட்டக் காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. குரங்குகளை அழைத்து விஷயத்தைச் சொன்னான்.

குரங்குகளுக்கு சந்தோஷம். ஆனால், அவற் றுக்கு ஒரு பிரச்சினை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரிய வில்லை. அது ஒண்ணும் பெரிய பிரச்சினையில்லை.

வேர் பெருசா இருந்தா நிறைய தண்ணீர் ஊத்துங்க. சின்ன வேரா இருந்துச்சுனா கொஞ் சமா, ஊத்துங்க என்று யோசனை சொன்னான்.

வெளியூர் போய் திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்த தோட்டக்காரனுக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங் கப்பட்டு காய்ந்து கிடந் தன. என்னாச்சு? என்றான் தோட்டக்காரன்.

வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பார்க் கிறக்காக, செடியெல்லாம் பிடுங்கினோம் என்றன குரங்குகள்.

தகுதியில்லாதவர்களிடம் பொறுப்பை கொடுத்தால், விளைவு மோசமாகவே இருக்கும்.

# குறும்பு



ஒரு சிறிய ஊரில் இரண்டு குறும்பான சிறுவர்கள் இருந்தனர்.

ஊரில் ஏதாவது காணா மல் போனால் இவர்களைத் தான் முதலில் விசாரிப்பார் கள் பெற்றோர்களால் அறி வுரை கூறி அவர்களைத் திருத்த முடியவில்லை.

ஒரு சமயம் அவ்வூருக்கு ஒரு துறவி வந்தார். பெற்றோர் அவரை அணுகி பையன்களைப் பற்றிக் கூறி அவர்களை திருத்த வழி கேட்டனர்.

அவரும் ஒரு பையனை அன்று மாலை தனியாகத் தன்னை பார்க்க அனுப்பி வைக்கச் சொன்னார். ஒரு பையன் அனுப்பப்பட்டான். துறவி அந்தப் பையனை முதலில் ஐந்து நிமிடம் கண்ணை மூடி அமரச்சொன்னார் . பின்னர் கேட்டார், தம்பி உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன் நீ பதில் சொல்ல வேண்டும்.

கடவுள் எங்கே? சொல் கடவுள் எங்கே இருக்கிறார் ? அவன் அங்கிருந்து உடனே ஓட்டமாய் ஓடிவந்து வீடு சேர்ந்தான். அடுத்த பையன் அவனிடம் ஓடி வந்ததற்கான காரணம் கேட்டான்.

அவன் சொன்னான் நாம் பெரிய ஆபத்தில் உள்ளோம். இப்ப கடவுளைக் காணோமாம். அந்த ஆள் என்னைக் கூப்பிட்டு எங்கே எங்கே என்று கேட்கிறான். ஏற்கனவே ஏதாவது காணோம் என்றால் நம் மீதுதான் பழி சொல்வார்கள் இப்போது இந்தப் பிரச்சினையும் நம் தலையில் தான் விழும் போலிருக்கிறது

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 553

Search for people, places and things | Nagendram | Home

ராகுலன்




புத்தம்புது பெரிய ரோடு சார்; இந்த ரோட்லதான் மொத்த ஜனங்களும் போயிட்டு வந்தாங்க சார்..




நைட்டோட நைட்டா அத்தன ரோட்டையும் ஆட்டைய போட்டுட்டு தண்ணிய நிரப்பிட்டு போயிட்டாங்க!!

ஹரிகரன் கருணாம்பிகைபாகன்




லோலிபப் விதுஷ்




தர்சினி

எப்புடித்தான்....இப்படி ...யோசிக்கிறீங்களோ...




ஜெலோ சாரு

சோக்கா சொல்றாருங்க @..ரிலாக்ஸ் ப்லீஸ்.

புகைப்படமெடுத்தால்
ஆயுள் குறையுமென்ற
மூடநம்பிக்கையை
உண்மையாக்கியவை
ஆண்ட்ராய்ட் ஃபோன்களின்
பேட்டரிகள்தான்.

ஃபீலிக்ஸ் பாலா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்


வலம்புரியின் மருத்துவச்சுடர் 08

## சிந்தனைக்கு

### மரம் என்னும் மருத்துவ சுடர்

எமது சுகத்தையும் சுற்றாடலையும் காத்து, சூழலிலுள்ள அசுத்தக்காற்றை வடிகட்டி சுத்திகரித்து சுவாசக்காற்றான ஒட்சிசனை அள்ளி வழங்கியும், எமது சுகம் காத்து சத்துணவையும் மருத்துவ மூலிகைகளையும் தந்து, நிழலையும் குளிர்ச்சியையும் மழைவீழ்ச்சியையும் கொடுத்து, நோய்த்தாக்கங்களிலிருந்து மனிதனைக் காத்து மலர்களினால் சுற்றாடலுக்கும் மனதுக்கும் மலர்ச்சியைக் கொடுத்து, மனச்சஞ்சலங்களை நீக்கி, எமது மண்ணை கடல் விழுங்கவிடாது மண்ணரிப்பில் இருந்து காத்து, எமது உடல், உள, சமூக, ஆன்மீக நன்னிலையைக் காத்து நிற்கும் மரம் என்ற மருத்துவ சுடர்கள் பலவற்றை வீடுதோறும் ஏற்றி அந்தச் சுடர்களை வளர்த்து ஆரோக்கிய வாழ்வியலில் நாமும் பங்கு கொள்வோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது மருத்துவ நிபுணர்



## உயர் குருதி அமுக்கம் ஓர் அறிமுகம்

### உயர் குருதி அமுக்கத்தின் அறிகுறிகள்

- பல உயர் குருதி அமுக்க நோயாளர்கள் ஆரம்பத்தில் எந்தவொரு அறிகுறிகளையும் வெளிக்காட்ட மாட்டார்கள்.
  - அதிகளவு வியர்வை உருவாகுதல்
  - தலைச்சுற்று
  - மூக்கிலிருந்து இரத்தம் வருதல்
  - தலையிடி
  - நெஞ்சு படபடப்பு
  - மூச்சுத்திணறல்
- மேலுள்ள அறிகுறி உள்ளவர்கள் அருகிலுள்ள சிகிச்சை நிலையத்திற்குச் சென்று குருதி அமுக்கத்தைச் சோதனை செய்வது சிறந்தது.
- சிலருக்கு கர்ப்ப காலத்தில் ஏற்படும் குருதி அமுக்கமானது சிசு பிறந்தவுடன் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்.

உயர் குருதி அமுக்கம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பத்தை உண்டாக்கும் காரணிகள்

- பரம்பரை ரீதியான காரணிகள்
- மன உளைச்சல்
- அதிக உடற்பருமன்
- மதுபானம் அருந்துதல்
- புகைப்பிடித்தல்
- 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- பெண்களிலும் பார்க்க ஆண்களுக்கு கூடுதலான சாத்தியம் உண்டு
- சலரோகம்
- இதய நோய்கள்
- சிறுநீரக நோய்கள்
- அகம் சுரக்கும் சுரப்பிகள் தொடர்பான நோய்கள், உயர் குருதி அமுக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள்
- பக்க வாதம்
- இதயத் தொழிற்பாடு குறைதல்/மாரடைப்பு
- சிறுநீரகம் பழுதடைதல்
- கண்களில் இரத்தக்கசிவு,கண்பார்வை குறைவடைதல்

### உயர் குருதி அழுக்கத்தை கட்டுப்படுத்தும் வழி முறைகள்

- உடல் நிறையைக் குறைத்தல் - உடல் திணிவு சுட்டெண்ணை பேணுதல் உடல் நிறையைக் குறைப்பதற்கு ஒரு நாளைக்கு மூன்று முறை வழமையிலும் குறைந்த அளவு உணவு உண்ணுதல் வேண்டும்.
- அதிகளவு இனிப்பு, மாப்பொருள் அதிகமுள்ள உணவுகளை உடகொள்வதை தவிர்த்தல் வேண்டும்
  உ-ம் மரவள்ளி, ஐஸ்கிறீம்
- அடிக்கடி உணவு உட்கொள்வதை தவிர்த்தல்
- உணவில் அதிகளவு பழவகைகளையும் கீரை வகைகளையும் அதிக நார் தன்மையையும் சேர்த்தல்
- போதிய புரத உணவு (fish / soyabean)
- ஆடை நீக்கிய பாலைப் பருகுதல் (non fat milk )
- அதிகளவு உப்புள்ள உணவுகளை உட்கொள்ளுதலைக் தவிர்த்தல்.
  **உ-ம் கருவாடு, பொரித்த உணவு, ரின் மீன்**
- கொழுப்புக் கூடிய (கொலஸ்திரோல்)உணவு உட்கொள்ளலைக் குறைத்தல்
  **உ-ம் இறைச்சி, பொரித்த உணவு, பட்டர், மாஜரின்**
- தேங்காய், தேங்காயெண்ணெய் பாவனையைக் குறைத்தல்.தேவைப்படின் நல்லெண்ணெயைப் பாவித்தல். ஒலிவ் ஒயில் (olive oil) பாவிக்கலாம். தேங்காய்ப்பாலில் முதல் பிழிந்த பாலைத் தவிர்த்து மற்றைய பாலைப் பயன்படுத்துதல்
- தினமும் தேக அப்பியாசம் செய்தல் (குறைந்தது 30 நிமிடங்கள்)
- தினமும் ஓரளவு உடல் ரீதியான வேலைகளைச் செய்தல்
  **உ-ம் சைக்கிள் ஓடுதல், கூட்டுதல்**
- மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல்
- புகைப்பிடித்தல் பழக்கத்தை தவிர்த்தல்
- மன அழுத்தத்திற்குரிய காரணத்தைக் கண்டு நிவர்த்தி செய்தல்
- ஒரு நோயாளி இன்னுமொரு நோயாளியு டன் தனது குருதி அமுக்கத்தை ஒப்பிட்டு பார்ப்பதை தவிர்ப்பது நல்லது.
- யாராவது ஒருவர் தனக்கு குருதி அமுக்கம் இருக்கலாமென சந்தேகித்தால் அருகிலுள்ள சிகிச்சை நிலையத்திற்கு சென்று குருதி அமுக்கத்தைச் சோதனை செய்தல் சிறந்தது.

த.உதயகுமார்
தாதிய உத்தியோகத்தர் தரம் 1

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.